

மெஸ்ஸியான மஹேல

பக்கம் 18

# உதயன்


24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 319 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 25, சனி 11.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


# மாகாண சபை ஆட்சி முறைமை அதிகாரமற்ற ஓட்டை அமைப்பே



## ஜனாதிபதி மஹிந்தவுக்கு எழுதிய கடிதத்தில் கடுமையாகச் சாடியுள்ளார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக். 11
மாகாணசபை ஆட்சிமுறைமையானது, இலங்கை அரசியலமைப்பின் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் அதிகாரமற்ற ஓட்டை அமைப்பாகவே இருக்கின்றது. போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, மாகாணசபையானது அதிகாரமற்றதொன்றாகவே தென்படுகின்றது - இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சாடியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

"நாம் ஒரு வருடம் பதவியில் இருந்துள்ளோம். இன்றைய நிலையில், வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் சுட மாகாண சபை ஆட்சி முறைமை எமது ஒற்றையாட்சி முறைமையின் கீழ் ஓர் அதிகாரமற்ற ஓட்டை அமைப்பாகவே தென்படுகின்றது. தற்போதைய ஆட்சி முறையில் குறிப்பாக போருக்குப் பின், நிலையான அரசியல் தீர்வு எதுவுமற்ற நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாகாண சபையானது அதிகாரமற்றதொன்றாகவே தென்படுகின்றது"- என்று அவர் தனது கடிதத்தில் ஜனாதிபதிக்கு நேரடியாகவே சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காக நாளை வரவுள்ளார். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க


நாளைய சூரியகாந்தி சிறப்பானது
பிரதிக்கு முந்துங்கள்...


## விடுதலை எங்கள் உயிர் மூச்சு; இனி இங்கு வேண்டாம் வீண் பேச்சு

### அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று மக்கள் திரண்டு போராட்டம்




வவுனியா, ஒக்.11
கிளிநொச்சி – தருமபுரத்தில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயக்குமாரியையும், குற்றச்சாட்டுகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் உடன் விடு தலை செய்யுமாறு வலியுறுத்தி வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த கவன வீர்ப்புப் போராட்டம் திட்டமிட்டபடி நேற்று நடைபெற்றது. 19 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு தொற்றிய பெண்ணுக்கு விடுமுறை மறுத்ததால் விபரீதம்

தென்மராட்சி, ஒக்.11
டெங்கு காய்ச்சலின் ஆரம்ப நிலையில், பணியிடத்தில் விடுமுறை வழங்க மறுத்ததால், தற்போது ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் மீசாலையைச் சேர்ந்த இளம் யுவதி. கொழும்பு, இரத்மலானையில் உள்ள ஆடைத்

❖ 19 ஆம் பக்கம் பார்க்க

## பனை தறிக்கத் தடை

யாழ்ப்பாணம், ஒக்.11
பனை மரங்களைத் தறிப்பதற்குத் தடை விதித்துள்ள பனை அபிவிருத்திச் சபை, எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் இந்த ஆண்டு முடியும் வரைக்கும் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அந்தச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம்,

❖ 19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி காணி வழங்குவது தேர்தலுக்கான முன்னேற்பாடே

### மறைமுகமாக கோடிட்டுக் காட்டினார் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 11
கிளிநொச்சியில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவால்நாளை காணி வழங்கப்படவுள்ள நிகழ்வானது, ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னேற்பாட்டு நிகழ்வு என்று மறைமுகமாகச் சாடியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி மஹிந்த பங்கெடுக்கும்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியைகளின் வயிற்றில் அடித்தார் ஜனாதிபதி மஹிந்த



யாழ்ப்பாணம், ஒக். 11
வடக்குக்குப் பயணம் செய்யவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து சில பாடசாலைகளின் ஆசிரியைகள் கட்டாயம் நீலநிற சேலைகள் அணிந்தே சமுகம் தர வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், சேலைகளையும் ஆசிரியைக

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டவர்களுக்கு ஓமந்தையில் திடீர் தடை

### ஜனாதிபதி வருகையா காரணம்?

வவுனியா, ஒக்.11
கொழும்பில் இருந்து ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக வடக்குக்குப் பயணித்த வெளிநாட்டுப் பயணிகள் நேற்றுத் திடீரெனத் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்களின் பயணத்தைத் தொடரமுடி

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஆணைக்குழு - மனித உரிமைகள் ஆணைக்குழு காணமற்போனோர் முறைப்பாடுகளை பரிமாற இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 11
காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை பரிமாறிக் கொள்வதற்கு, ஜனாதிபதி ஆணைக்குழுவும், மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அந்தச் சந்திப்பிலேயே இந்த இணக்கம் எட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்புக் குறித்து காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள முறைப்

❖ 19 ஆம் பக்கம் பார்க்க

## ரயில்வே ஊழியர்களின் போராட்டத்துக்கு தடை

கொழும்பு, ஒக்.11

சம்பள உயர்வு உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே பணியாளர்கள் மேற்கொண்டுவரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. குறித்த போராட்டத்தால் பொதுமக்கள் எதிர்கொண்டு வரும் சிரமங்களை கருத்தில் கொண்டே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, தமது கோரிக்கைகள் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சு வெற்றியளிக்கவில்லை என்றும், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை பணிப் புறக்கணிப்புத் தொடரும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்திருந்தன. இந்தநிலையிலேயே நீதிமன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ற)

# பொய்ப் பரப்புரையில் எதிர்க்கட்சிகள்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பொய்ப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன.

கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"அடுத்து நடைபெறவுள்ள தேசிய தேர்தலில் மக்களின் நிலைப்பாடுகள் தெளிவாக வெளியிடப்படும். எதிர்க்கட்சிகள் பல்வேறு அரசியல் அமைப்பு ரீதியான சட்ட வாதங்களை முன்வைத்து மக்களை தவறாக வழிநடத்தி வருகின்றனர்.



18ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படும் முன்னர், மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்காக பதவியேற்று கொண்டார். அதனால் அவரால் மூன்றாவது முறையாக ஜனாதிபதி பதவிக்காக போட்டியிட முடியாது என எதிர்க் கட்சிகள் தெரிவித்து வருகின்றன."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## நல்லூர் பிரதேச செயலக மூலவள திரட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.11

நல்லூர் பிரதேச செயலகத்தின் பிரதேச மூலவளத் திரட்டு மற்றும் புள்ளிவிவரத் திரட்டு நூல் வெளியீட்டு விழா நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

நூல் மற்றும் இறுவட்டுக்களின் முதல் பிரதியை பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனிடமிருந்து யாழ். செயலக திட்டமிடப் பணிப்பாளர் திருமதி ர.மோகனேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த நல்லூர் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், "நல்லூர் பிரதேசத்தின் விவசாயம் மீன்பிடி தொழில் மையங்கள் பாடசாலைகள் மாணவர்கள் கல்வி அபிவிருத்தி போன்ற முக்கிய விடயங்களையும் உள்ளடக்கி இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது"- என்று தெரிவித்தார்.

நிகழ்வில் யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ர.மோகனேஸ்வரன் மாகாண சபை உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.துஷ்யந்தன் உதவி பிரதேச செயலர் திருமதி சு.மதியழகன் ஆகியோர் உரையாற்றியதுடன், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், வங்கியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-7)

## வலி.கிழக்கு பிரதேச சபை முரண்பாடு குறித்து பேச்சு

### இன்று புத்தூரில் நடைபெறவுள்ளது

அச்சுவேலி, ஒக்.11

வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இடையிலான இழுபறி நிலை தொடர்பில் தீர்வு காண்பது குறித்த கலந்துரையாடல் வடக்கு மாகாண உள்ளூராட்சி நிர்வாகத்துக்கு பொறுப்பான மாகாண சபை உறுப்பினர் ப.அரியநாயகம் தலைமையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புத்தூரில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் சமகால நிலைப்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து அவரின் வழிப்படுத்தலுக்கு அமையவே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டால் கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டம் நடைபெறவில்லை. மாதாந்தக் கூட்டத்தை நடத்துவதில் தொடர்ந்து இழுபறி நிலை காணப்படுவதால் சபையின் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. (ற-11)

### விபத்து

யாழ்ப்பாணம்

## மோ.சைக்கிள் பஸ் விபத்தில் மூவர் காயம்

மோட்டார் சைக்கிளும், தனியார் பஸ்ஸும் விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும், இரு மாணவர்களும் காயங்களுக்குள்ளாகி மருத்துமவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். யாழ். பிரதான வீதி வேம்படி வீதியில் யாழ்.நீதிமன்றை அண்மித்து நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தில் பாடசாலையிலிருந்து மாணவர்களை மோட்டார்சைக்கிளில் ஏற்றிச்சென்ற எ.றாஜன் (வயது-54) என்பவர் படுகாயமடைந்ததுடன், சு.ஸ்ரெலாஸ் (வயது-9), சு.சான்லி (வயது-6) ஆகியோர் காயமடைந்தனர். பிரதான வீதிவழியாக கொடிகாமம் - யாழ்ப்பாணம் சேவை யில் ஈடுபடும் தனியார் பஸ் யாழ். நகர் நோக்கி வந்துள்ளது.

அதே நேரம் வேம்படி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் குறித்த நபர் இரண்டு மாணவர்களையும் ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிச் சென்றபோதே விபத்து இடம்பெற்றது. பஸ்ஸின் கீழ் சென்ற மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

குறித்த இடத்தில் நின்றிருந்த போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டனர். (ற-4)

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரியை விடுதலை செய்யுமாறு கோரியும், நீண்ட காலமாக விசாரணைகள் ஏதுமின்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரியும் நேற்று வவுனியா நீதிமன்றம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.













பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 25 சனி (11.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 319

## படகில் இலங்கை வர முயன்ற 6 பேர் ராமேஸ்வரத்தில் கைது



இராமநாதபுரம் ஒக். 11

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குப் படகு மூலம் வர முயன்ற பெண் மற்றும் குழந்தை உட்பட 6 இலங்கை அகதிகளைக் கியூ பிரிவு பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 4 ஆம் திகதி தங்கச்சி மடம் கண்ணுப்பாடு தென்கடல் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்று காணப்பட்டுள்ளது.


இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டுக் கியூ பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் இராமேஸ்வரம் பஸ் நிலையத்தில் நேற்று சிவதர்ஷன், சிலோசினி, மாணிக்கம், பிரசாத், ரமேஸ் மற்றும் சலோமை நல்லம்மா ஆகிய 6 பேர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினர்

(22ஆம் பக்கம் பார்க்க)

# புலிச்சார்புப் புலத்தமிழரின் ஒப்பந்தத்தின் கீழ் கமரூன்

## இலங்கை அரசு குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்ரோபர் 11

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், விடுதலைப்புலிகள் சார்பு புலம் பெயர் தமிழர்களின் ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுவதாக அரச ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் மாநாட்டின்போது பிரிட்டிஷ் பிரதமர் நடந்துகொண்ட விதம் இதனை புலப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டின்போது பிரிட்டிஷ் பிரதமர் மனித உரிமை நிலைவரம் குறித்து கவலை வெளியிட்டிருந்ததுடன், சர்வதேச விசாரணைக்கான தனது ஆதரவையும் தெரிவித்திருந்தார்.

தற்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் புலம் பெயர் தமிழர் அமைப்புகளை இரகசியமாக சந்தித்து அவர்களது ஆதரவைப் பெற முயல்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இவ்வாறான இரகசிய சந்திப்பிற்கு புலம்பெயர் தமிழர் அமைப் புகள் மறுத்து விட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (த-சி)

## ஓட்டோவை விரட்டிச் சென்ற கும்பல் மோ.சைக்கிளை கைவிட்டு தப்பியது

### சுன்னாகம் பகுதியில் சம்பவம்

வலி.வடக்கு, ஒக்.11

ஒட்டோவைக் கலைத்துத் தாக்கும் நோக்கில் மோட்டார் சைக்கிளில் விரட்டிச் சென்றவர்கள் ஒட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு நிலத்தில் வீழ்ந்த நிலையில் அதனைக் கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் ஐயனார் கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் ஒட்டோவில் சென்றவர்களை முகத்தை மறைத்துக் கட்டியவாறு ஆயுதத்துடன் மூவர் மோட்டார் சைக்களில் விரட்டிச்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்தியா இடையே பாதுகாப்புக் கலந்துரையாடல்

### இந்தியப் பாதுகாப்புச் செயலருடன் ஜனாதிபதி மஹிந்த நேற்று சந்திப்பு



யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட வருடாந்த பாதுகாப்புக் கலந்துரையாடல் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ராதா கிருஸ்ண மாதுார் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் எண்ணிக்கை 109 ஆகியது

கொழும்பு, ஒக். 11

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களின் எண்ணிக்கை 109 ஆக உயர்ந்துள்ளது. 161 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் ஆளும் கூட்டணியில் நேற்றுமுன்தினம் ராதாகிஷ்ணன் எம்.பிக்கு பிரதியமைச்சுப் பதவி வழங்கப்பட்டதனூடாக அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசிலுள்ள 161 எம்.பிக்களுள் 52 பேர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இடதுசாரிக் கட்சிகள் அரசுக்கு காலக்கெடு

கொழும்பு, ஒக்.11

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைத்தல், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தல், தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வருதல், மக்கள் நலன்சார்ந்த பொருளாதாரத் திட்டத்தை அமுல்படுத்தல் ஆகியவற்றை செய்துமுடித்த பின்னரே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் மூன்று இடதுசாரிக் கட்சிகள் ஜனாதிபதிஸ்ய வலியுறுத்தியுள்ளன.

இவற்றைச் செய்துமுடிப்பதற்கு அரசுக்கு இரண்டு வருட கால அவகாசத்தை வழங்கியுள்ள மேற்படி மூன்று கட்சிகளும் இது விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் விரைவில் இரண்டாம் கட்டப் பேச்சுகளில் ஈடுபடவுள்ளன.

இந்தத் தகவலை நேற்று உதயனிடம் உறுதிப்படுத்திய லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்தால் மாத்திரமே வடக்கு மக்களின் வாக்குகளைப் பெற முடியும் என்றும் குறிப்பிட்டார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக் கார, இலங்கை

(22ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. புனரமைத்த வைத்தியசாலையை திறந்து வைக்கிறார் ஜனாதிபதி மஹிந்த

யாழ்ப்பாணம், ஒக்.11

அமெரிக்க அரசின் முழுமையான நிதியுதவியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அக்கராயன் வைத்தியசாலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கவுள்ளார்.

அதற்கு முன்னோடியாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தூதுவர் அன்றூ சிமன் ஆகியோர் வைத்தியசாலையை இன்று பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

அமெரிக்க அரசு 500 மில்லியன் ரூபா செலவில், வடக்கு மாகாணத்தில் 9 வைத்தியசாலைகளை புனரமைப்புச் செய்து வருகின்றது. அதில் அக்கராயன் வைத்தியசாலை 77 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட் டது.

அக்கராயன் வைத்தியசாலை நாளை ஞாயிற்றுக்கிழமை

(22ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தத் தடை விதிக்குக

### கல்வியமைச்சிடம் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஒக்.11

பாடசாலை மாணவர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது முற்றிலும் தவறு எனச் சுட்டிக்காட்டிய பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பணிப்புரை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க கேள்வி எழுப்பிய பின்னர், ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, கொழும்பில் பாடசாலை மாணவர்களைச் சீருடையுடன் அரசியல் நடவடிக்கைகளுக்காக எதிர்க்கட்சி பயன்படுத்துகின்றது எனச் சுட்டிக் காட்டினார்.

இதையடுத்து, கருத்து வெளியிட்ட கல்வித்துறை பிரதியமைச்சர் மொஹான் லால் கிரேரு, "இது முற்றிலும் தவறான சம்பவம். இந்தச் சம்பவம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது. இருப்பினும், அது குறித்து விசாரணை செய்கின்றோம்" - என்றார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட போதே பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

இதன் பின்னர் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க, குறித்த சம்பவம் தொடர்பில் சுட்டிக்காட்டியவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்று குறிப்பிட்டார். இந்த நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சிகள் பல உள்ளன. எனவே, குறிப்பிட்ட எதிர்க்கட்சி எது என்று அவர் குறிப்பிடவேண்டும் என்றார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரணதரம் கூட சித்தியடையாத ஒருவரிடம் வெளிவிவகார சேவை

### நாட்டுக்கு துரதிர்ஷ்டம் என்கிறார் அநுரகுமார

கொழும்பு, ஒக்.11

"உயர்ஸ்தானிகர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவமானது ஒட்டுமொத்த நாட்டையும் துரதிர்ஷ்ட நிலைக்குள் தள்ளியுள்ளது" என ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று சபையில் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் நாடு தனிமைப் படுத்தப்படாமல் பாதுகாக்கும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சுக்கு உள்ளது. இந்தப் பொறுப்பிலிருந்து தவறுவதை எதிர்க்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை சபை ஒத்திவைப்புவேளை மீதான விவா

(22ஆம் பக்கம் பார்க்க)

# டெங்கு குடம்பிகளின் செறிவு நீர்கொழும்பில் உச்சத்தில்

கொழும்பு, ஒக்.11
இலங்கையில் டெங்கு நுளம்புக் குடம்பிகளின் செறிவு உச்சத்தில் உள்ள இடங்களில் ஒன்றாக நீர் கொழும்புப் பிரதேசம் பதிவாகியுள்ளது.
அது, டெங்கு நுளம்புக் குடம்பிகளின் செறிவு அளவிடப்பட்டு வரும் அட்டவணையில் 35 இற்கும் 40 இற்கும் இடையிட்ட மட்டம் ஒன்றில் இருப்பதாக சுகாதார சேவைகளின் குடம்பிகள் விஞ்ஞான ஆய்வு உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளரான நஜித் சுமணசேன தெரிவித்துள்ளார்.
இது சாதாரணமாக பிரதேசம் ஒன்றில் நிலவவேண்டியுள்ள குறைந்த பட்ச டெங்கு நுளம்புக்குடம்பிகளின் செறிவை விட ஒன்பது மடங்குகள் வரையான அதிகரிப்பாகுமெனவும் சுமணசேன தெரிவித்திருந்தார்.
அண்மைய நாள்களில் அடிக்கடி மழை பெய்யும் கால நிலை நிலவுவதால் நாடளாவிய ரீதியில் பெருமளவு பிரதேசங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகளின் செறிவானது 20 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டமொன்றில் நிலவுவது தெரிய வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
இதனிடையே, இந்த ஆண்டில் கடந்து சென்றுள்ள ஒன்பது மாத காலத்துள் இலங்கையில் பதிவாகியுள்ள ஒட்டு மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 31,538 பேராகும் என உயிர்கொல்லி நோய்கள் விஞ்ஞானப்பிரிவு தெரிவிக்கிறது.
கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2144 பேராகும். இந்த டெங்கு நோயாளர்களில் நூற்றுக்கு 60 வீதமானோர்மேல்மாகாணத்திலேயே பதிவாகியுள்ள னர். (வ-22)

## தரவையம்பதி நாச்சிமார் ஆலய விஸ்தரிப்புக்கு அடிக்கல் நடல்



யாழ்ப்பாணம், ஒக்.11
மிருசுவில், தரவையம்பதி நாச்சிமார் கோயில் விஸ்தரிப்புக்கான அடிக்கல் புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரனால் நட்டு வைக்கப் பட்டது.
இந்த நிகழ்வில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அசோகலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஊடாக தரவையம்பதி நாச்சி மார் கோயிலின் அபிவிருத்தி பணிகளுக்கென ரூபா இரண்டு இலட்சம் ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (வ)

## கோப்பாய் கோமானின் பிறந்த தின நிகழ்வு

அச்சுவேலி, ஒக்.11
கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் 103 ஆவது பிறந்ததின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நீர்வேலி வாழைக்குலைச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கோப்பாய் தமிழரசுக்கட்சி கிளையின் தலைவர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அமரர் கு.வன்னியசிங்கத்தின் சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் அமரரின் அரசியல் முன்னெடுப்பு தொடர்பான உரைகளும் இடம்பெறும்.
40 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கலும் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்ற வுள்ளனர். (வ-11)

## வழக்காடு மன்றமும் ஓவியக் கண்காட்சியும்

திருமலை, ஒக.11
சிறுவர் தினத்தையும், ஆசிரியர் தினத்தையும் முன்னிட்டு திருகோணமலை தமிழ்ச் சங்கமும், சிறுவர் சித்திரக் கலைக்கூடமும் இணைந்து நடத்தும் வழக்காடு மன்றமும், சிறுவர் ஓவியக் கண்காட்சியும் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி தலைமையில் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வின் முதன்மை அதிதியாக கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி செ.அழகரத்தினமும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜாவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.
சிறப்பு நிகழ்வுகளாக திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் குழு நடனமும், மேற்பிரிவு மாணவர்களின் வில்லுப்பாட்டும் இடம்பெறவிருக்கின்றன. இறுதியாக பரிசளிப்பு வைபவம் நடைபெறும். (வ-40)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11
வலி.தெற்கு பிரதேச சபை நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் உப அலுவலக பொறுப்பதிகாரி கெ.மோகனராசகுமார் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபையின் உபதவிசாளர் இ.பரமேஸ்வரலிங்கமும் சிறப்பு விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபையின் செயலாளர் தி.தியாகச்சந்திரனும் கலந்துகொள்வர்.
கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற நூலகர் இ.பாலசிங்கம், மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் கு.திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-ரி)

## கருத்தரங்கு

யாழ் மாவட்ட முதியோர்சுகவாழ்வுக்கழகம்நடத்தும் மூலிகை மருத்துவ முகாமைத்துவம் தொடர்பான விசேட கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமைபிற்பகல்3மணி தொடக்கம் 6 மணி வரை மானிப் பாய் பிரதேச சபை மண்டபத்தில் இலங்கை வங்கியின்முன்னாள்மாவட்ட முகாமையாளர் சுகணேசமூர்த்தி தலைமையில் நடை பெறும்.
கருத்தரங்குக்குகௌரவ விருந்தின ராக யாழ். மாவட்ட முதியோர் பேரவைத் தலை வர் எஸ்.சிவகுமாரன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக தொழில் நுட்பக்கல்லூரியின்ஓய்வு நிலை மேலதிக இயக்குநர் வி.சுந்தரலிங்கம், ஆர்.முபாரக், வி.விஜயநேசன், மருத்துவர் க.ஈஸ்வரி ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் மருத்துவர் ஜீ.ஸ்ரீதரனும் மருத்துவர் ஜீ.புவனலோஜினியும் உரை நிகழ்த்துவர். (வ-ரி)


### கண்ணீர் அஞ்சலி

கடந்த 06.10.2014 திங்கட்கிழமை இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஊழியராகக் கடமையாற்றும் கந்தையா ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தந்தை

**வல்லி கந்தையா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
(F/16550)(4.6.3)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**மாணிக்கம் பூபாலசிங்கம்**
(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - யாழ்ப்பாணம்)



ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது எம் துயரம்
அன்பும் அறத்துடனும்
சீர் கொண்ட பண்புடனும்
பார் போற்றும் உத்தமராய்
வாழ்ந்த எம் தெய்வமே!!
நின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

திதி: அபரபக்க சதுர்த்தி (11.10.2014)
மண்ணில் 31.10.1955 விண்ணில் 03.10.2012

மனைவி - பூ.கமலாதேவி,
மகள் - பூ.கனிதா
"தாயகம்",
மணற்பகுதி, ஆவரங்கால் கிழக்கு,புத்தூர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் சோமசுந்தரம்**

தோற்றம் 28.04.1924
மறைவு 22.09.2013
திதி: திருதியை

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆவரங்கால் சந்தி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (53100)(4.3.6)
குடும்பத்தினர்.

### நீங்கா நினைவலைகள்

30 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு



தோற்றம் 03.04.1931
மறைவு 11.09.1984
அமரர் நாகமுத்து வல்லிபுரம் (ஆங்கில ஆசிரியர்)



தோற்றம் 22.04.1928
மறைவு 11.10.2012
அமரர் சிறிரங்கம் அப்புத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்,கலாபூசணம், பண்டிதர்)

நீவிர் இருவரும் நட்பிற்கு இலக்கணமாய்
அன்பின் திருவுருவாய் எம்மை எல்லாம் தலைசிறந்து
விளங்கச் செய்து எமை விட்டுச் சென்றாலும்
உங்களை எந்நாளும் மறக்காது நீங்கா நினைவுகளுடன்
என்றும் வாழும் உங்கள் குடும்பத்தினர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்
கோண்டாவில்.077 355 1755
(53072) (45.6.3)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மகேஸ்வரி இலட்சுமணன்**
தோற்றம் : 26.08.1956
மறைவு : 03.10.2012

எம்மை வளர்த்து வாழ்வு அமைத்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த
எம் அன்புத் தெய்வமே!
ஓர் ஆண்டல்ல எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுடன்
நாம் வாழ்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.
குடும்பத்தினர்.



இந்த ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் அல்- அஸ்ஹர் மகா வித்தியாலய மாணவர்களான முஹமட் அப்துல் சத்தார் சிதார் ஜாலி-165, முஹமட் தஸ்னீம் தினூஷ் -158, முஹமட் மிஸ்ராப் பாத்திமா ஷதா -170, முஹமது ஷாபி முஹமது நப்லி -159, முஹமட் உவைஸ் உமைர் அஹமட் - 169 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அவர்களோடு பாடசாலை அதிபர் எம்.யூனுஸ் மாஹிரும், வகுப்பாசிரியர் திருமதி பி.குமாரும் காணப்படுகின்றனர்.

# பலாலியில் மருத்துவராக சேவையாற்றுவதே இலட்சியம்

## புலமைப் பரிசில் பரீட்சையில் முதன்மை பெற்ற பொலிகண்டி இ.த.க.பா. மாணவன் வின்சன்

பொலிகண்டி, ஒக்.11

மருத்துவராக வந்து எனது அப்பாவின் சொந்த ஊரான பலாலியில் இருந்து கொண்டு கஷ்டப்பட்ட மக்களுக்கு சேவை யாற்றுவதே என் வாழ்வின் இலட்சியம் என புலமை பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை யில் முதன்மை நிலையிலுள்ள மாணவன் வின்சன் துரைரட் ணம் செலஸ்ரின் தனது ஆதங் கத்தை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது வெளியாகியுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையில் பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் சித்தி யடைந்த மாணவர்களுட னான நேர்காணலிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் எனது அப்பா வான வின்சன் துரைரட்ணம் 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து செம்பியன்பற்றைச் சேர்ந்த எனது அம்மாவான ஜெயசீலியைதிருமணம்செய்து கொண்டவர். தற்பொழுது பொலிகண்டி பதுவளைப் பகு தியில் மூன்று சகோதரர்களு டன் வாழ்ந்து வருகின்றேன். அம்மாவின் சொந்த ஊருக்கு அடிக்கடி சென்று வந்தாலும் அப்பாவின் ஊரைப் பார்க்க முடியாது தவிக்கின்றேன். எனி னும் அங்குள்ள நிலைவரங் களையும் அங்கு வாழும் அப் பாவின் உறவுகளையும் ஒரள வேனும் அறிந்து வைத்துள் ளோம். இவ்வாறான நிலை யிலும் பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் சகோதரர் களோடு கல்வி கற்றுவரும் நான் புலமைப் பரிசில் பரீட் சையில் ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்களின் பூரண ஒத்துழைப்புடன் முதல் நிலை யில் சித்தி அடைந்தும் மனதில் திருப்தியை அடைய முடிய வில்லை என கண்கலங்கி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலும் தொடர்ந் தும் உயர் கல்வியைக் கற்று சிறந்த மருத்துவராக வந்து அப்பாவின் சொந்த இடமான பலாலியில் இருந்து கொண்டு அம்மாவினது ஊருக்கும் நான் பிறந்து வளர்ந்த பொலி கண் டியிலுள்ள கஷ்டப்பட்ட மக் களுக்கும் மருத்துவ மரமாக நின்று நிழல் கொடுக்க வேண் டும் என்பதே எனது இலட்சியம் எனத் தெரிவித்துள்ளார்.

(வ-108)

# ஆங்கில தினப் போட்டிகள்

கரவெட்டி, ஒக.11

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடை யிலான ஆங்கில தினப் போட்டிகள் இன்று முதல் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று உறுப்பெழுத்து, சொல்வதெழுதுதல், நாடக ஆக்கம் என்பனவும் நாளை கவிதை, ஆரம்பப் பிரிவினருக்கான ஆங்கில நாடகம் என்பனவும் 18 ஆம் திகதி சிரேஷ்ட பிரிவு மாண வர்களுக்கான ஆங்கில நாடகமும், 19 ஆம் திகதி சிரேஷ்ட மாணவர்களுக்கான ஆங்கில உரை யாடல் நாடகமும் இடம்பெறவுள்ளன.

மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் இரு இடங்களையும் பெற்றவர்கள் இந்தத் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (வ-108)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

அச்சுவேலி, ஒக்.11

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறு பேறுகள் அண்மை யில் வெளியாகின. இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்க ளால் அனுப்பி வைக் கப்பட்ட மாணவர் களின் பெறுபேறுகள் வருமாறு:-

**அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை**
கிருதாசன் பிரதீஸ்-167.

**கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை**
சி.ரக்சனா- 170, சி.அட்சயா- 162.

**இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை**
சி.வசிஹா-181, சூ.வேணுசன்-178, பா.டயாளன்-171, உ.தரணிகா-165, தி.கிரிதரன்- 165, வே.ஜிந்துசா-164

**கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை**
ஆ.யாழினி-160.

# போதைக்கு அபராதம் ரூ.10,500

சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திராத நிலையில் மது போதையில் ஓட்டோ செலுத்திச் சென்ற நபரொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாய்க் கிழமை 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்து. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்கு செவ்வாய்க்கிழமை விசார ணைக்கு எடுக்கப்பட்ட போது, எதிரி குற்றத்தை ஒப்புக் கொண் டதையடுத்து 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. (வ-9)

**வீடு விற்பனை**

உடுவில் மேற்கில் 2¾ பரப்பில் அமைந்துள்ள 5 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 126 1506/077 213 7568

(53086) (4.6.3)

**இசைக் கருவிகள் விற்பனைக்கு**

YAMAHA PSR-630-530-260 3 ORGANகள், SAMKO மொடல் மரூன் றெட்கலர் Full றம்ஸ் செற், றிபிள் பொங்கோ றம்ஸ் ஸ்ரான்ருடன் விற்பனைக்குள்ளன. (தேவ சபைகளுக்கு உகந்தது.)

(53087) (4.6.3)

தொடர்பு:077 869 4763/021 790 1419

**முகாமைத்துவ ஆலோசனை கூட்டமைப்பு (MATCCO) நிறுவனம் நடத்தும்**
**தொழில் முனைவோருக்கான சான்றிதழ் பயிற்சி நெறி**

(கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், அங்கத்தவர்களின் பிள்ளைகள், தொழில் முனைவோர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சி நெறி)

காலம்: 2014 ஒக்ரோபர் 26,27, ஆம் திகதிகள்
இடம்: கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம்

**சி.கோணேஸ்வரன்**

முகாமைத்துவ ஆலோசகர், திட்ட மதிப்பீட்டாளர் கெமிதிரிய உலக வங்கித் திட்டம் அவர்கள் ஏனைய வளவாளர்களுடன் பயிற்சியை நடத்துவார்.

(52977) (45.3.6)

மேலதிக விபரங்களுக்கு: 071 441 8539, 077 861 1674, 077 075 1899

**Management Consultancy Cooperation**
**No.327, 'Ceyesta House' Galle Road, Colombo - 03**

# பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டும்

அல்வாய், செல்வமஹாலைச் சேர்ந்த
**மோகன் மஞ்சுதா**
தம்பதியரின் செல்வப் புதல்வன்

## வர்ஷன்

தனது 10ஆவது பிறந்ததினத்தை 11.10.2014 இன்று வவுனியாவிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவனான இவர் 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்றுள்ளமைக்காக எமது மன மகிழ்வான பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், இவர் மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்வாய் சாமணந் தறை ஆலடி விநாயகனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: தாத்தா, அம்மம்மா, மாமா, மாமி, மம்மி, பப்பா, சித்தி, சித்தப்பா, தம்பிமார்- சிவாம்சன், கவிஷனன்

புவி அகம்,
88/20, மன்னார் வீதி, நெளுக்குளம், வவுனியா.

Best Wishes




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய

ஆசிரியர் **கந்தசாமி சுதேஸ்கரன்**
(BA,Dip.in.Edu.MED)

அவர்கள் 06.10.2014 அன்று மகரகமவில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றதையிட்டு மனமாரப் பாராட்டுவதுடன், மேலும் பல விருதுகளைப் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.



Congratulation

Best Wishes

வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

(47306)(7.6.3)

**வீடுவளவு விற்பனைக்கு**

அளவெட்டி மத்தி, பள்ளியவத்தை ப.நோ.கூ.ச.(M.P.C.S) முன் மேற்கு வீதியில் 4¼ பரப்பில் சகல வசதிகளும் கொண்ட வீடுவளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
071 828 7801/077 711 4952

(53083) (12.3.6)

**திருமண சேவை**

டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள், தனியார் நிர்வாகிகள், பாவம் கூடிய, குறைந்த அரச உத்தியோகத்தர்கள், சைவபோசன மணமக்களும், வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்களும், விவாகரத்துப் பெற்ற மணமக்களும், செவ்வாய் தோஷம் கூடிய குறைந்த மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச் சோலையடி, முடமாவடி,
077 607 0862

(53088) (46.3.6)

World concern

**அரசசார்பற்ற நிறுவனத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகப் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம்**

எமதுநிறுவனம் இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனமாக பதியப்பட்டுள்ளதுடன் நிவாரண மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிக்கள உத்தியோகத்தராக சிறுவர்களுடன் பணியாற்றக் கூடிய தகுதியானவர்களிடம் இருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வேண்டப்படும் தகைமைகள்:**

- சமூக விஞ்ஞானத்துறையில் டிப்ளோமா அல்லது அதற்கிணையான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட சான்றிதழ்
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பணியில் முன் அனுபவம் (முக்கியமானது)

**இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும்.**

நிறுவன கோட்பாடுகளுக்கமைய சம்பளம் தீர்மானிக்கப் படும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்களது புகைப்படத்துடன் கூடிய (கடவுச் சீட்டு அளவு) சுயவிவரக்கோவையை கீழ்கண்ட முகவரிக்கு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**த.பெ. இலக்கம் : 26**
**கல்கிஸ்சை.**

(53084)(5.6.3)

# சிறப்பான சேவைகளை வழங்கிய தபாலகங்கள், ஊழியர் கௌரவிப்பு

## யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக் 11

140 ஆவது உலக அஞ்சல் தினம் கலை, கலாசார நிகழ்வுகளுடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

இலங்கையில் உள்ள சகல மாகாணங்களையும் தொடர்புபடுத்தும் வகையில் யாழ். பிரதம தபாலகத்தில் பிரதான 4 சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறப்பான சேவைகளை வழங்கிய தபாலகங்கள் மற்றம் உப தபாலகங்களுக்கான கௌரவிப்பு மற்றும் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும் நேற்று முன்தினம் நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

விருது வழங்கப்பட்டதை தொடர்ந்து 10 ரூபா புதிய முத் திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் இலங்கை தபால் திணைக்களத்தின் தபால்மா அதிபர் ரோஹண அபேயரத்ன, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, வடக்கு மாகாண பிரதி தபால்மா அதிபர் என்.இரட்ணசிங்கம் மற்றும் ஏனைய மாகாணங்களின் பிரதித் தபால்மா அதிபர்கள் உட்பட தபால் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் எனப் பல ரும் கலந்து கொண் டனர்.

இதேவேளை, தபால் திணைக்களத்தின் தகவல் தொடர் பாடல் சேவையில் 2014 இல் சிறப்பான சேவையை ஆற்றியமைக்காக இலங்கைக்கு இரண்டாம் இடம் கிடைக்கப் பெற்றுள்ளது.

43 நாடுகளின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட போட்டியில் இலங்கையும் பங்குபற்றியிருந்த நிலையில் முதலாம் இடத்தை ஜேர்மனியும், இரண்டாம் இடத்தை இலங்கையும், மூன்றாம் இடத்தை சுவிற்ஸர்லாந்தும் பெற்றுக் கொண்டுள்ளன.

இதற்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ள நிலையில் உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தகவல் தொடர்பாடல் சேவைப் பிரிவிடம் நேற்றுமுன்தினம் யாழ்ப் பாணத்தில் வைத்து அந்த விருது கையளிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கிய சிரேஷ்ட பிரதித் தபால் மா அதிபர் கே.எஸ். சேனாதீர தெரிவிக்கும்போது;

தபால் திணைக்களம் கடந்த காலங்களில் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டுள்ளது.

கடந்த காலங் களில் தபால் திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சேவைகளை வைத்தே எம்மால் அதனை அறிந்து கொள்ள முடியும்.

அஞ்சல் சேவையில் 2014 ஆம் ஆண்டில் வாழ்வாதாரப் பண்புகளை இலக்காகக் கொண்டு தனது சேவைகளை வழங்கி வருகிறது. குறிப்பாக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திகளில் தபால் திணைக்களம் முன்னின்று சேவையாற்றி வருகிறது எனவும் தெரிவித்தார்.

(ஓ-14-ரி)


**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு.
**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C716915)(10.6.3)

**பகுதி (மாலை) நேர தாதிய உத்தியோகத்தர் தேவை**

நேரில் தொடர்பு கொள்ளவும்.
4.30pm-12.10.2014 (ஞாயிறு)
**LAVA HOSPITALS**
**561, Palaly Road, Jaffna.**
**021 221 2599** (53098)(4.6.3)

**தவறிவிட்டது**

கீதபொங்கலன் பெனட் டினேஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதி அட்டை, வாகன வரிப் பத்திரம் மற்றும் பிரான்சிஸ் கீதபொங்கலன் (லக்சிஸ் ஸ்ரோர்ஸ்) என்பவரின் காப்புறுதி அட்டை, வாகன வரிப்பத்திரம் என்பன 08.10.2014 அன்று ஆசீர்வாதப்பர் வீதி, மாம்பழம் சந்தி, கல்வியங்காடு ஆகிய பகுதிகளுக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (53104)(7.6.3)
தொடர்பு: 077 179 3073, 021 222 7324

**பரதநாட்டிய அரங்கேற்றம்**

மாவிட்டபுரம் **சிறீபாஸ்கரன்-லஷ்மி**
தம்பதி யரின் செல்வப்புதல்வி
**செல்வி நிரூஜா**
அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
இன்று (11.10.2014) சனிக்கிழமை
சுவிஸில் நடைபெறும்.
இவரை மாவை விநாயகர்,
மாவைக் கந்தன், அம்பாள்
துணையுடன் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
பெரியப்பா, பெரியம்மா,
மாமா, அத்தை,,
அருள்அத்தான்,
செல்வி அக்கா,
கவிமச்சாள், வஷ்சன்,
ஜாமினி, கௌதம்,
பிரியங்கா, ரூபினிக்குட்டி.
*மாவிட்டபுரம் (மானிப்பாய்),*
*தெல்லிப்பழை.*
*தொ.பே.: 021 492 1496* (53105)(5.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலய மாணவி
செல்வி **விதுர்ஷா அருள்நாதன்**



2014 தரம் - 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் தோற்றி
173 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம். இவரை
வழிப்படுத்திய பாடசாலை அதிபர்,
ஆசிரியர்களையும் நன்றியுடன்
பாராட்டுவதோடு மேன் மேலும் பல
சித்திகள் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்.
வாழ்த்துவோர்:
**குடும்பத்தினர்** (53090)(12.3.6)

**அகமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

பிரதீபா பிரபா விருது – 2014
**ஸ்ரீமான் பாலசிங்கம் பாலசிறிந்திரன்**
*B.A.S,Dip,in.Edu. Dip.in.H.R.P*
(வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியர்)




**நல்வாழ்த்துக்கள்!**
மஹிந்த சிந்தனை தேசிய புனர்வாழ்வு செயற்றிட்டத்திற்கேற்ப, எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய இலங்கைத் திருநாட்டின் நன் மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கும் முகமாக உயிரோட்டமுள்ள வகுப்பறையொன்றை நிர்மாணித்து அதனுள் வினைத்திறன்-விளைதிறன்மிக்க கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும் **பிரதீபா பிரபா** விருதினைப் பெற்ற **பாலசிங்கம் பாலசிறிந்திரன்** அவர்களை உளம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களும் குடும்பத்தினரும். (53101)(7.6.3)

**50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

இன்று (11.10.2014) சனிக்கிழமை
50ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்
புத்தூர் வடக்கைச் சேர்ந்தவரும், மஞ்சள் உனா
ஞானவைரவர் தேவஸ்தான
அறங்காவலருமான
**செல்லப்பா நகுலேஸ்வரன்**
அவர்களைப் பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர் :
R. விஷ்ணுகா மற்றும்
உற்றார், உறவினர்கள்.
புத்தூர் வடக்கு, ஏரந்தனை, புத்தூர். (53089)(7.6.3)

**இரண்டு காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் அரியாலையில் வீடு கட்டக் கூடிய 15 பரப் புக் காணியும் முன்பு தென்னத்தோட்டமாக இருந்த 25 பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன. நல்ல தண் ணீர், மின்சார வசதிகளும் இருக்கின்றன. வீட்டுக் காணி பரப்புக்கு ரூபா 9 இலட்சம், தென்னத் தோட்டமாக இருந்த காணி பரப்புக்கு 8 இலட்சம் ரூபா. (விலை பேசித்தீர்மானிக்கலாம். தரகர் தேவையில்லை) (சி.16937)(45.3.6)

தொடர்பு: 077 607 0642,077 505 9449

**பணிநிலை வெற்றிடங்கள்**

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - முல்லைத்தீவுக் கிளை**

கீழ்வரும் நிரந்தர பணிநிலைகளுக்கான முழு/ பகுதிநேர வெற்றிடங்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலைகள்:**

01 வெளிக்கள உத்தியோகத்தர்கள்
02 நிறைவேற்று கள முகாமையாளர்கள் (ஆகக் குறைந்தது காப்புறுதித் துறையில் ஒரு வருட அனுபவம்)
03. சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்

**தகைமைகள்:**

01 வயது எல்லை 18 - 60
02. க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்கள் அல்லது க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழ் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பணிநிலைகளுக்கான விவரங்களைச் சுயமாகத் தயாரித்து கீழ்வரும் முகவரிக்கு 2014/10/24 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முகாமையாளர்**
**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,**
**பிரதான வீதி, முல்லைத்தீவு.**
தொ.பே. 021 229 0089 (53097) (45.6.3)

# 300 மில்லியன் ரூபா செலவில் சாவகச்சேரி சந்தை புது மெருகு

தென்மராட்சி, ஒக். 11

100 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த சாவகச்சேரி பொதுச் சந்தை 300 மில்லியன் ரூபா (30 கோடி) செலவில் புதிய வடிவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்குத் தேவையான நிதியை நாடு நகர அபிவிருத்தி அதிகார சபையினர் வழங்கவுள்ளனர்.

தற்போது தனித்தனியாக இயங்கும் அனைத்து விற்பனைப் பிரிவுகளும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரப்பட்டு ஒரே இடத்தில் அனைத்துப் பிரிவுகளையும் செயற்படத்தக்கதாக கட்டடம் அமைக்கப்படவுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நாடு நகர அபிவிருத்தி அதிகார சபை உயர் அதிகாரிகள் பொதுச் சந்தையைப் பார்வையிட்டு 3 மாதங்களுக்குள் புதிய கட்டடத்தை அமைத்துத் தருவதாகக் கூறிச் சென்றுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

இவ்வாறான கட்டடங்கள் புதுக்குடியிருப்பு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி பொதுச் சந்தை 1933 ஆம் ஆண்டில் அனைத்து விற்பனைப் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. காலப் போக்கில் வியாபாரிகளின் தொகை அதிகரிப்புக்கேற்ப ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியான கட்டடங்கள் நகரசபை காலத்தில் அமைக்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டு போரின் போது சந்தையில் காணப்பட்ட அனைத்து கட்டடப் பிரிவுகளும் சேதமடைந்ததால் ஆரம்பகாலக் கட்டடம் தவிர்ந்த ஏனைய விற்பனைப் பிரிவுகள் நகரசபையினால் புனரமைக்கப்பட்டன. இலங்கையில் சாவகச்சேரி பொதுச் சந்தையில் மட்டுமே தனித் தனி விற்பனைப் பிரிவுகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நாடு நகர அபிவிருத்தி அதிகார சபையினர் அனைத்து விற்பனைப் பிரிவுகளையும் ஒன்றிணைத்து செயற்படக்கூடிய விதத்தில் பிரமாண்டமான கட்டடமொன்றை அமைத்து வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரே கூரையின் கீழ் சந்தை விற்பனைப் பிரிவுகள் அமைக்கப்படுவதால் அதற்கு வெளியே கடைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சந்தையின் தென் மேற்குப் பகுதியில்காணப்பட்ட மீன் சந்தை பின்னர் மேற்குப் புறத்தில் அமைக்கப்பட்டு தற்போது தனங்கிளப்பு வீதிக்கு மாற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-9)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மல்லாகம் நீதிவான் முகாமில் தங்கியுள்ள 60 குடும்பங்களுக்கு இலவச உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி அதிபரும் சங்கப் போசகருமான எஸ்.சபாரெட்ணசிங்கி பொருள்களை வழங்கினார். (த-86)

# வடக்கில் மாவீரர்களின் துயிலும் இல்லங்களும் இராணுவம் முகாம் அமைப்பதற்காக கபளீகரம்

## பேசிக் கொண்டிருப்பதை விட்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்கிறார் அமைச்சர் டெனீஸ்வரன்

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுடன், ஆறடி நிலத்தில் துயில்கொண்டிருக்கும் எங்கள் மாவீரர்களின் துயிலுமில்லங்களும் இராணுவம் முகாம் அமைப்பதற்காகக் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் இனிப் பேசிக் கொண்டிருப்பதை விட்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில் முதன்முதலாக, ஒரு விடயம் தொடர்பிலான விசேட அமர்வு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் அமர்வு 10.30 மணிக்கே ஆரம்பமானது.

பேரவைச் செயலகத்தின் முன்னால் வல்வெட்டித்துறையிலிருந்து வந்த மீனவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர். இதனால் 9.30 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய சபை அமர்வு ஒரு மணி நேரம் தாமதமாக ஆரம்பமாகியது.

### கண்டிப்பான நடைமுறைகள்

அவைத் தலைவர் ஆரம்பத்திலேயே கண்டிப்பான சில நடைமுறைகளைத் தெரிவித்தார். மாகாண சபை உறுப்பினர்களின் ஒழுங்கு தொடர்பில் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் இனி வருங்காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். அத்துடன், மேல் மாகாண சபையின் அமர்வைத் தான் நேரடியாகச் சென்று பார்வையிட்டதாகக் குறிப்பிட்ட அவர், 104 உறுப்பினர்கள் கொண்ட அந்தச் சபையில் உறுப்பினர்கள் உண்ட ஒழுங்குடன் வருவதைப் பற்றிக் குறிப்பிட்டார். இனி வருங்காலத்தில் வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களின் உடை ஒழுங்கு நடைமுறை இறுக்கமாகப் பின்பற்றப்படும் என்று கூறினார். ஏனைய மாகாண சபைகளை விட பின்னிற்கும் இந்தச் சபை விரைவில் ஏனைய மாகாண சபைகளுக்கு முன்னுதாரணமாகத்திகழ வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் உறுப்பினர்கள் நேர ஒழுங்கில் பேச வேண்டும் என்பதையும் தெரிவித்தார். உடனடியாகவே அதனை அமர்வில் கடுமையாக நடைமுறைப்படுத்தினார் அவைத் தலைவர்.

### சகுனம் சரியில்லை

வடக்கு மாகாண காணி அமைச்சர் என்ற ரீதியில் வடக்கு மாகாண முதலமைச்சரே சபையில் விடயத்தை முன்மொழிந்தார். முதலமைச்சர் உரையாற்ற ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. காணி விடயம் எடுத்ததும் சகுனம் சரியில்லையோ என்று உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர். இதனால் சபை தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

தேநீர் இடைவேளையின் பின்னர் சபை அமர்வு ஆரம்பித்ததும் முதலமைச்சர் தமது உரையைத் தொடர்ந்தார். படையினரை வெளியேற்றுவோம் எனத் தெரிவித்தே, மாகாண சபையை நாம் கைப்பற்றினோம் என்பதை நினைவு கூர்ந்தார். இதன் பின்னர் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் எழுந்து உரையாற்றினார். இதன் போது அவர் சபைக்கு ஒவ்வாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்த, அவைத் தலைவர் ஒலிவாங்கியை நிறுத்திவிட்டார்.

எச்சரிக்கையின் பின்னர் ஒலிவாங்கியை மீளச் செயற்படுத்த அனுமதித்தார் அவைத் தலைவர். இதன்போது சிவாஜிலிங்கம், காணிப் பிரச்சினையால் தான் அஹிம்சையோ அல்லது ஆயுதப் போராட்டமோ தோற்றம் பெற்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார். அத்துடன் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைக்கப்பட்டுள்ள 'தல்செவண' விடுதிக்குச் சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றனர். போயா தினத்திலும் மது விற்கின்றனர். ஆனால் அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் அங்கு செல்ல முடியாமல் இருக்கின்றனர்-என்றார்.

இதனைத் தொடர்ந்து, உறுப்பினர் கஜதீபன் தனது வாதத்தை முன்வைத்தார். விடுதலைக்காகப் போராடிய இனத்தின் பிரச்சினையை இரண்டு வழிகளில் தீர்க்கலாம். என்ன நோக்கத்துக்காக அந்த இனம் போராடியதோ அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பது. இரண்டாவது, அந்த நோக்கத்தையே இல்லாமல் செய்வது. இதில் இலங்கை அரசு இரண்டாவது வழிவகையையே கையாண்டு வருவதாகச் சாடினார். அத்துடன் அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவை வம்புக்கிழுப்பதை வழக்கமாகக் கொண்ட கஜதீபன் நேற்றுமுன்தினமும், எதிர்க்கட்சித் தலைவரும் காணி அபகரிக்கப்படுகின்றது என்ற நோக்கத்தில்தான் அந்த நேரத்தில் ஆயுதம் தூக்கினார் என்று நக்கலாகக் குறிப்பிட்டார்.

### எல்லா முஸ்லிம்களும் அப்படியல்ல

இதன் பின்னர் உரையாற்றிய அஷ்மின், பொதுவாக இங்கிருந்து வெளியேறிய முஸ்லிம்கள் புத்தளத்தில் காணியை வைத்துக் கொண்டு இங்கும் காணி கேட்பதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு, ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன தான். அதற்காக எல்லா முஸ்லிம்களும் அப்படியல்ல என்று தனது வாதத்தையும் முன்வைத்தார்.



ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான விந்தன் கனகரட்ணம், வடக்கு - கிழக்கில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பின் தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இருக்கின்றார் என்று நேரடியாகச் சாடினார். ஜனாதிபதி கிளிநொச்சியில் வைத்து காணியைக் கொடுப்பதுபோல் கொடுக்கின்றார். மறுபுறம் இங்கே காணிகளைக் கபளீகரம் செய்கின்றார். ஒரு கையால் அணைத்து மறுகையால் குத்துகின்றார் என்று ஜனாதிபதிக்குச் சாட்டையடி கொடுத்தார்.

வவுனியா மாவட்ட காணி ஆக்கிரமிப்புத் தொடர்பில் இந்திரராசா தனது ஆதாரங்களைச் சபையில் சமர்ப்பித்தார். தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினரும் பிரதி அவைத் தலைவருமான அன்ரனி ஜெகநாதன், முல்லைத்தீவில் அதுவும் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற நில ஆக்கிரமிப்புத் தொடர்பில் கருத்துரைத்தார். இதன் பின்னர் உரையாற்றிய முல்லைத்தீவுமாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்டத்தின் நில அபகரிப்பு விடயங்களை அக்குவேறு ஆணிவேறாக ஆதாரங்களுடன் சபையில் சமர்ப்பித்தார்.

### சிறிபால டி சில்வா உறவினர்களை குடியமர்த்துகிறார்

இதன்போது மகாவலி நீர் வராத பிரதேசங்களையும் மகாவலி அதிகார சபைக்கு உட்பட்டது என்று தெரிவித்து, கொழும்பு அரசின் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தனது உறவினர்களை அந்தக் காணிகளில் குடியமர்த்தி இருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் ஆங்கிலேயர் கொடுத்த உறுதி தமிழ் மக்களிடம் இருக்கின்றது. ஆனால் காணி சிங்கள மக்களிடம் இருக்கின்றது. அதற்கு ஜனாதிபதியே தற்போது உறுதி வழங்கியிருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட உறுப்பினர் லிங்கநாதன் கொஞ்சம் வில்லங்கமாகவே பேசினார். இதனைத் தனியே ஆவணப்படுத்துவதை விடுத்து, இதற்கு நிபுணர் குழுவை நியமித்து எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று ஆராயவேண்டும் என்று தெரிவித்தார். 'நான் ஆரம்பத்திலிருந்தே தெரிவித்து வருகின்றேன், வவுனியா மாவட்ட அரச அதிபர் காணி அதிகாரங்கள் முதலமைச்சரிடமே இருக்கின்றன என்று கடிதம் எழுதியிருக்கின்றார். இதனை நான் பலமுறை சுட்டிக்காட்டியும் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை. சில வேளைகளில் நான் ஆயுதம் தாங்கிய கட்சியைச் சேர்ந்தவனாக இருப்பதால் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்கலாம். வேண்டுமானால் நான் அதனை வேறு கட்சியினர் ஊடாகச் சமர்ப்பிக்கின்றேன்' என்று லிங்கநாதன் தெரிவிக்க, முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருமே சிரித்தபடி அதனைக் கேட்டுக் கொண்டிருந்தனர். முதலமைச்சர் எந்தப் பதில் கருத்தையும் அதில் முன்வைக்கவில்லை.

இதன் பின்னர் மன்னார் மாவட்ட தரவுகளை உறுப்பினர் சிராய்வா முன்வைத்தார். இறுதியில் எதிர்க்கட்சியினர் சார்பில் ரிப்கான்-பதியுதீன், தவநாதன், தவராசா ஆகியோர் உரையாற்றினர்.

### காரசாரமான விவாதம்

தவராசா உரையாற்றிக்கொண்டிருக்கும்போது மாத்திரம் ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம் வழமை போன்று குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தார். வார்த்தைப் பிரயோகம் வரம்பு மீறிப் போக அவைத் தலைவர் ஒலிவாங்கிய நிறுத்திவிட்டார். சபையின் இறுதி நேரத்திலேயே ஆளுங்கட்சியின் சிவாஜிலிங்கத்துக்கும் எதிர்க்கட்சியின் சிங்கள உறுப்பினருக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. ஆனாலும் அது கட்டு மீறிய சந்தர்ப்பத்தில் ஒலிவாங்கியை நிறுத்தினார் அவைத் தலைவர். இறுதியில் இருவரும் வார்த்தைகளால் மோதிக் கொண்டிருக்கும்போதே அவைத் தலைவர், அமர்வை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இருப்பினும் இந்த அமர்வு கடந்த கால அமர்வுகளிலிருந்து மேம்பட்டதாகவே நடந்து முடிந்தது.

தீ.அமுதன்

# டெங்கு உள்ள பிரதேசங்களில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக்.11


டெங்குநோய் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் கூடுதலான விழிப்புணர்வு, சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யசீதரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றும், நேற்று முன்தினமும் டெங்கு ஒழிப்பு விசேட செயற்பாட்டு நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டனர். குறிப்பாகப் பாஷையூர் மற்றும் நாவாந்துறைப் பிரதேசங்களில் இந்த டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதாரத் தொண்டர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோர் இந்த டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தக் குழுவினர் வீடு வீடாகச் சென்று மக்களுக்கான சுகாதார விதிமுறைகளை எடுத்துக் கூறினார்கள்.

தற்போது மழை காலம் ஆரம்பித்த நிலையில் மாநகரப் பகுதியில் சுகாதார நடைமுறைகளை மேலும் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-17)



போரின்போது பாதிக்கப்பட்டு அநாதரவாகக் கிடந்த கட்டடங்கள் தற்போது ஜனாதிபதியின் வருகைக்காக இராணுவத்தினரால் தகரங்கள் போடப்பட்டும் வெள்ளை அடிக்கப்பட்டும் குடியிருக்கும் வீடாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன. பளை ரயில் நிலையத்துக்கு முன்னால் போரின் எச்சமாகக் காயங்களுடன் ஓடுகளுமின்றி நின்றுகொண்டிருந்த இந்த வீடும் அப்படி புனரமைப்புப் பெறும் பேற்றை பெற்றுள்ளது. (த-21)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் புதிய இளைப்பாறும் மண்டபம் திறப்பு



வலி.வடக்கு, ஒக். 11

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் இளைப்பாறும் வகையில் இந்தியாவின் றோட்டறிக் கழகத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இளைப்பாறும் மண்டபம் நேற்று வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.உமாசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளைப்பாறும் மண்டபத்தைத் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஆறு திருமுருகன், இந்தியாவில் இருந்த வருகை தந்த றோட்டறிக் கழக ஆளுநர் ஐ.எஸ்.ஏ.நாசர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

குறித்த மண்டபம் இந்தியாவின் றோட்டறியன் ஜெயகிருஸ்ணாவினால் அவருடைய மனைவி அமரர் திருமதி ஜெ.பிரியதர்சனி ஞாபகார்த்தமாக 3ஆயிரம் டொலர் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (த-86)

## விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரம் முன்னெடுப்பு

தென்மராட்சி,ஒக்.11

யாழ்.மாவட்டத்தில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வாரச் செயற்றிட்டங்கள் நேற்றுமுன்தினமும், நேற்றும் அனைத்துச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களாக இனங்காணப்பட்ட பகுதிகளில் இருநாள்களும் வீடு வீடாகப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பொலிஸார், படையினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்று சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 15 குழுக்கள் விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தில் ஈடுபட்டன. (த-9)

# பாலை மரக் குற்றிகளுடன் பிடிக்கப்பட்டது கப் வாகனம்

## நேற்று அதிகாலை அக்கராயனில்

கிளிநொச்சி, ஒக் 11

கிளிநொச்சியில் கப் வாகனத்தில் சட்டவிரோதமாகப் பாலை மரக் குற்றிகளை ஏற்றி வந்த நபரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3 மணி அளவில் அக்கராயன் பகுதியில் இருந்து 5 பாலைமரக் குற்றிகளை ஏற்றிய கப் வாகனம் பயணித்துக்கொண்டிருந்த போது கிளிநொச்சி கனகபுரம் பழைய சந்தைப் பகுதியில் வைத்து மரங்களுடன் பிடிபட்டது. விசேட அதிரடிப் படை அதிகாரிகளான தபுலகப, பிறேமறத்தின, ஹேரத் ஆகியோரின் மேற்பார்வையில் மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கோணாவில் காட்டுப் பகுதியில் இருந்து களவாக கப் வாகனத்தில் மரம் ஏற்றி வந்தபோது மரங்களுடன் சாரதியைக் கைது செய்த விசேட அதிரடிப் படையினர் அவரைக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-18)

# மருத்துவ அறிக்கையைப் போன்று உளநல அறிக்கையும் இனி தேவை

## அந்தளவுக்கு தற்போது பாதிப்பு என்கிறார் கலாநிதி கஜவிந்தன்

யாழ்ப்பாணம், ஒக் 11

அரச உத்தியோகத்துக்குச் சேரும்போது தற்போது மருத்துவ அறிக்கை கேட்பது போல இன்னும் 20 வருடங்களில் உளநல அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டிய நிலை உருவாகவுள்ளது. அந்தளவுக்குத் தற்போதுள்ளவர்களிடம் உளநலம் பெரும் பிரச்சினையாகவுள்ளது என்று யாழ்.பல்கலைக் கழக மெய்யியல்துறை, உளவியல்துறை தலைவர் கலாநிதி கெ.கஜவிந்தன் தெரிவித்தார்.

குறித்த துறையின் இறுதியாண்டு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட உளநலம் என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

படிக்காதவர்களைவிடப் படித்தவர்களே 'கவுன்சிலிங்' என்ற சொல்லை அறிவீனமாகப் பார்க்கிறார்கள். படிக்காதவர்கள் - கிராமத்தவர்கள் கோயில் உள்ளிட்ட பல இடங்களுக்கும் சென்று வருவதனால் உளவள ஆலோசனை பெற்றுக் கொள்கிறார்கள். படித்தவர்கள் வேலைத் தளங்களில் சிறு பிரச்சினையையும் பெரிய பாதிப்பாக அல்லது பய உணர்வுடன் கையாள்வதனால் அது அதிகமாகவுள்ளது.

பலர் தமது உடல் நலத்தில் காட்டும் அக்கறையை உளநலத்தில் காட்டுவதில்லை. அது மிக ஆபத்தானது. ஒவ்வொருவரும் தமது ஆளுமையின் வெளிப்பாட்டை தரக்குறைவாகவே பார்க்கிறார்கள். ஆனால் அவ்வாறல்ல. உளவள ஆலோசனை அனைவரும் செய்வது சிறப்பானது. உளவள ஆலோசனை செய்யும்போது கதைக்கும் விடயங்கள் அனைத்தும் இரகசியம் பேணப்படும். அது உளவள ஆலோசனையின் கடப்பாடு என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)



முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆசிரியர் தினத்தையொட்டி நடைபெற்ற இரத்த தான முகாமில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். (த-433)



# காயங்களுடன் மான் வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஒக் 11

வவுனியா, முருகனூர் பிரதேசத்தில் கிணற்றுக்காக வெட்டப்பட்ட குழியில் இருந்து காயமடைந்த நிலையில் மான் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா, முருகனூர் பகுதியில் கிணற்றுக்காக வெட்டப்பட்ட பாரிய குழியில் தவறி விழுந்த மான் முகம் மற்றும் கால் என்பவற்றில் காயமடைந்த நிலையில் அந்தக் குழியில் நின்று தடுமாறியுள்ளது.

இதனை அவதானித்த பிரதேச மக்கள் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக் களத்துக்குத் தகவல் கொடுத்ததையடுத்து அந்த மான் மீட்கப்பட்டு அனுராதபுரம் வனஜீவராசிகள் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. ஐந்து வயதுள்ள மானே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது. (த)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார். அத்துடன் அவர் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலில் குமார் குணரட்ணம்

## களமிறக்க உத்தேசிக்கிறது முன்னிலை சோசலிசக் கட்சி

கொழும்பு, ஒக்.11
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரி கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும். அந்த பொது வேட்பாளராக முன்னிலை சோசலிசக் கட்சியின் த்லைவர் குமார் குணரட்ணத்தை நிறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்று அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"குமார் குணரட்ணம், கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல்களில் உண்மையில்லை. இது அரசு கூறி வரும் பொய்யான கதை. ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரிகளின் பொது வேட்பாளரை நிறுத்து வது குறித்து முன்னிலை சோசலிசக் கட்சி பல இடதுசாரி கட்சிகளுடன் பேச்சை ஆரம் பித்துள்ளது.
ஐக்கிய சோசலிசக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி உட்பட இடதுசாரிக் கட்சிகள் இணைந்துபொது வேட்பாளரை நிறுத்த தீர்மானித்துள்ளோம். முன்னிலை சோசலிசக் கட்சி குமார் குணரட்ணத்தை பொது வேட்பாளராக பெயரிட்டுள்ளது. அத்துடன் இது குறித்து ஜே.வி.பியுடனும் பேச்சுத் நடத்த தயாராக இருக்கின்றோம். கடந்த காலம் முழுவதும் குமார் குணரட்ணத்தை நாட்டுக்கு அழைக்கும் முயற்சிகளை கட்சி மேற்கொண்டது. அவர் இலங்கைக்கு வர விரும்புகிறார். கட்சி என்ற வகையில் ஜனாதிபதித் தேர்தலுக்காக மாத்திரம் அவரை அழைக்கவில்லை. கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக அவரை இலங்கை வரவழைப்பதே எமது நோக்கம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



# ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் ஆற்றல் கிடையாது

## ஒப்புக்கொள்கின்றது ஜாதிக ஹெல உறுமய கட்சி



கொழும்பு, ஒக்.11
ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் ஆற்றல் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு கிடையாது என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு வேட்பாளரை நிறுத்தி வெற்றியீட்டும் அளவிற்கு கட்சிக்கு அனுபவ முதிர்ச்சி கிடையாது. பொதுபல சேனா அமைப்புடன் சிறந்த நல்லுறவைப் பேணி வருகின்றோம்.
பொதுபல சேனா மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆகியனவற்றுக்கும் இடையில் கொள்கைகள் ஒரே விதமானவை. செயற்பாடுகளில் மட்டுமே ஒரு சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.
பொதுபல சேனாவுடன் பல சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்பட்டுள்ளோம். எதிர்காலத்திலும் இரண்டு தரப்பும் இணைந்து செயற்பட விரும்புகின்றோம்.
நாட்டுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் பௌத்த சக்திகள் என்ற ரீதியில் நாம் இணைந்து செயற்பட்டுள்ளோம். எனினும் நாம் கட்சி என்ற ரீதியில் வாக்களிப்பு முடிவுகளில் 10 வீதமான வாக்குகளே பெற்றுக் கொள்கின்றோம். எனவே நாம் எப்படி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டக் கூடிய அனுபவ முதிர்ச்சி இல்லாத காரணத்தினாலேயே பொதுபல சேனா அமைப்பு, பௌத்த தலைவர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடச் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.
நாட்டின் ஏகபோக பௌத்த சக்தியாக ஜாதிக ஹெல உறுமயவை நாம் கருதவில்லை. பௌத்த சக்தி என்ற ரீதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பௌத்த அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## சிகரெட்டின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.11
நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிகரெட்டின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி சில வகையான சிகரெட்டுகளின் விலை 2 ரூபாவாலும், மற்றும் சிலவற்றின் விலை ஒரு ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை புகையிலை நிறுவனத்தின் தகவல்கள் இதனைத் தெரிவித்துள்ளன. (ற)

## பிரதியமைச்சர் சரணவை கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஒக்.11
பிரதியமைச்சர் சரண குணவர்தனவை கைது செய்யுமாறு. அத்தனகல நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. 17 பேர் கொண்ட கும்பலுடன் நிட்டம்புவ ஹொரகொல்ல பிரதேசத்தில் வீடமைப்புத் தொகுதி ஒன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி, சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
பிரதியமைச்சர் மற்றும் அவருடன் சென்ற குழுவினர் சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்னர்.
அத்துடன் அத்தனகல பிரதேச சபையின் தலைவர் கியான் சிந்தக உட்பட மேலும் 15 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ற)

# மீன்பிடி சட்டங்கள் குறித்து மீனவர்களுக்கு விளக்கம்

## கடற்றொழில் பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11
சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும்போது கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் குறித்து மீனவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சின் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.
இலங்கை மீனவர்கள் கடைப்பிடிக்க வேண்டி சட்டதிட்டங்கள் அடங்கிய ஆலோசனை கையேடு ஐரோப்பிய ஒன்றியத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.
அதன் பிரகாரம் சட்டதிட்டங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், அவ்வாறில்லாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், அதற்கமைய நாட்டிலுள்ள சகல மீனவர் சங்கங்களுக்கும் இதுகுறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ற)

# இலங்கை இராணுவத்துக்கு நேற்றுடன் 65 வயதானது

## இராணுவ தலைமையகத்தில் நிகழ்வுகள்

இலங்கை இராணுவம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 65 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. அது சம்பந்தமான வைபவம் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது. இராணுவத் தளபதிக்கு இராணுவத்தின் அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டுள்ளது.
1949 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அப்போது 'சிலோன் ஆர்மி'என இராணுவம் அழைக்கப்பட்டது. இதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (ற)

# மேர்வின் விலக விரும்பினால் அதற்கு இடமளிக்க வேண்டும்

## களனி பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக்.11
அமைச்சர் மேர்வின் சில்வா அரசில் இருந்து விலக விரும்பினால் அதற்கு இடமளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. களனி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.
களனி பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, தமக்கு அறிவிக்காமல் களனி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசம் ஒன்றில் மதுபானசாலைக்கான அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்காசுதந்திரகட்சியின் களனி தொகுதி அமைப்பாளரான தமக்கு அறிவிக்காது, இவ்வாறான செயற்பாடுகள் முன் எடுக்கப்பட்டுள்ளமை காரணமாக, தாம் அரசில் இருந்து விலகத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ற)

# 'பந்துல விரும்பியவாறு கல்வியை மாற்ற முடியாது' - மேர்வின் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.11
கல்வியமைச்சருக்கோ அதிகாரிகளுக்கோ தேவையான விதத்தில் கல்வியில் மாற்றங்களைச் செய்ய முடியாது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா.
களனி ஹுணுப்பிட்டிய பண்டாரநாயக்க கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"கல்விக் கொள்கைகளை மாற்ற வேண்டாம். கன்னங்கர அவர்கள் ஆரம்பித்த இலவச கல்வியை தொடர வேண்டும். கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு விரும்பியபடி கல்வியை மாற்ற முடியாது.
இடி விழும் இடங்களில் இருப்பதற்கு நான் பயப்படுவதில்லை. இடி விழக்கூடிய பாவங்களை நான் செய்ததில்லை. அண்மையில் ஒரு நாள் நான் கெபிலித்த பிரதேசத்திற்கு சென்றேன். அங்கு தான் கதிர்காம கந்தன் தவயோகியாக இருக்கின்றார். கடவுள் மேல் இருக்கும் அன்பில் அனைவரும் கதிர்காமத்திற்கு செல்வதில்லை. பக்தியும் இதற்கு காரணம் அல்ல. தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே அவர்கள் செல்கின்றனர். சிலர் தமது சட்டத் தரணிகள் போல் கடவுளை பயன்படுத்திக் கொள்கின்றனர். அது சரியல்ல"- என்று தெரிவித்துள்ளார் அவர்.
அதேவேளை அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்திருந்த மேர்வின் சில்வா, ஜனாதிபதியாவதற்கு தமக்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளன என்றும் தெரிவித்தார். (ற)

CMYK

## 19 ஆண்டுகள் ஓடும்
# ஷாருக் படம்




இன்றைய கால கட்டத்தில் தியேட்டரில், ஒரு படம் ஒருவாரம் ஓடுவதே பெரிய விடயம், ஆனால் ஒரு படம் 19 ஆண்டுகளாக தியேட்டரில் ஓடிக்கொண்டு இருக்கிறது என்றால் நீங்கள் நம்புவீர்களா.?

காலத்தால் அழிக்க முடியாத படங்கள் பல உண்டு. அதில் ஷாருக்-கஜோல் நடித்த காதல் காவியம், 'தில்வாலே துல்கனியா லே ஜாயென்கே' படம். ஆதித்யா சோப்ரா இயக்கத்தில், ஷாருக்கான்-கஜோல் நடிப்பில் 1995 ஆம் ஆண்டு வெளிவந்த இந்தப் படம், மும்பையில், மராத்தா மந்திர் எனும் தியேட்டரில், காலை நேரக்காட்சியாக இப்போதும் ஓடிக்கொண்டு இருக்கிறது.

19 ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கும் இந்தப் படத்தை நிறுத்த முடிவு செய்துள்ளார் தியேட்டர் உரிமையாளர். இது குறித்து அந்த தியேட்டரின் உரிமையாளர் மனோஜ் டெசி கூறுகையில், டிசெம்பர் மாதத்துக்குப் பிறகு 'தில்வாலே துல்கனியா லே ஜாயென்கே' படத்தின் காட்சிகளை முற்றிலுமாக நிறுத்தலாம் என்று முடிவு செய்துள்ளோம். எங்களது தியேட்டர் ரயில் நிலையம் மற்றும் பஸ் நிலையம் அருகே அமைந்துவிட்டதால் இந்தப் படத்துக்கு தொடர்ந்து நல்ல வரவேற்பு கிடைத்து வந்தது.

ஆனால் அண்மைக் காலமாக இந்தப் படத்துக்கு ரசிகர்களின் கூட்டம் குறைந்துவிட்டது. அதனால் போதிய வருமானம் இல்லை. அதனால் இந்தப் படத்தை திரையிடுவதை நிறுத்த முடிவு செய்துள்ளோம். இதுதொடர்பாக இயக்குநர் ஆதித்யா சோப்ராவிடம் பேச இருக்கிறோம். மேலும் இந்தப் படத்தை பார்க்காத இன்றைய தலைமுறைகள் இருந்திருக்க முடியாது. நிச்சயம் அவர்கள் ஒருமுறையாவது பார்த்திருப்பார்கள், எனக்கு தெரிந்த பல பேர் இந்தப் படத்தை 100 முறைக்கு மேல் பார்த்துள்ளனர். அதுமட்டுமின்றி தொலைக்காட்சியிலும் இந்தப் படம் அடிக்கடி ஒளிபரப்பு செய்யப்படுவதால் இனி இதனை தியேட்டரில் திரையிட்டாலும் எடுபடாது. எனவே முற்றிலுமாக நிறுத்தலாம் என எண்ணியுள்ளோம் என்று கூறியுள்ளார்.

# ரிலாக்ஸா வாசியுங்க



பெண் என்றால், பொறுமை வேண்டும், அவசரப்படக் கூடாது.
அடக்கம் வேண்டும், ஆத்திரப்படக் கூடாது...
அமைதி வேண்டும், அதிகாரம் செய்யக் கூடாது...
கட்டுப்பாடு வேண்டும், இப்படி கத்தக் கூடாது...
பயபக்தியாக இருக்க வேண்டும், இப்படி ஆட்டம்போடக் கூடாது...
மொத்தத்தில் பெண்கள் பெண்களாகவே இருக்க வேண்டும்...
இந்த வசனத்தை சூப்பர் ஸ்ரார் ரஜினி படத்தில சொன்னால் கை தட்டி ரசிக்கிறாங்கள் பெண்கள்...
ஆனால் கணவன் பேசினால் கையை முறுக்கி கும்மாங்கு குத்துறாங்க..

# காதில் பூச்சி

காதின் அருகில் சிறியதொரு எறும்பு சென்றாலே கால்கள் திண்டாடி கிச்சுகிச்சு வரும். அப்படியிருக்கையில் 3 அங்குல பூச்சியொன்று காதினுள் இருந்தால் என்னவாகும்?

கடுமையான காது அரிப்பு என்று கூறி வைத்தியர்களிடம் சிகிச்சைக்காக சென்ற பேராசிரியர் ஒருவரின் காதிலிருந்து, 3 அங்குல நீளமுடைய பூச்சியொன்று அகற்றப்பட்ட சம்பவம் இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது. இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகமொன்றில், பேராசிரியராக கடமைபுரியும் மைக்கல் சுவீட் என்பவரே இத்தகைய விபரீத சம்பவத்தை எதிர்கொண்டுள்ளார்.

காதினுள் ஏற்பட்ட அரிப்புக் காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்ட இவர், வைத்தியரின் உதவியை நாடியுள்ளார். தனது காது வேதனை தரக்கூடிய வகையில் அரிப்பதாகவும் காதுக்குள் ஏதோ இருப்பதை தான் உணர்வதாகவும் வைத்தியர்களுக்கு பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இவரது காதை பரிசோதித்த வைத்தியர்கள், காதினுள் 3 அங்குல நீளமுடைய பூச்சி இருப்பதை கண்டறிந்துள்ளனர். காதினுள் ஏதேனும் கருவிகளை புகுத்தினால் பூச்சி உள்ளே சென்று விடும். அப்படி சென்று விட்டால் அதனை வெளியில் எடுப்பது மிகவும் சிரமமான விடயமாகிவிடும் என்பதனால், குறடு போன்றதொரு கருவியை காதினுள் நுழைத்து பூச்சிலய வெளியிலெடுத்துள்ளனர்.

பூச்சி எவ்வளவு காலம் காதினுள் இருந்தது என்பது குறித்து தெரியாது. ஆனால், அது சிறியதாக இருக்கும் போதே காதினுள் சென்றிருக்கும் என்றும் உள்ளேயே வளர்ந்திருக்கலாம் என்றும் வைத்தியர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். காதினுள் உள்ள திசுக்களுக்கு பூச்சி எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையென்றும் சிறு காயங்களை மாத்திரம் ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வைத்தியர்களினுடைய ஆய்வு கூடத்தில் பூச்சி உயிருடன் இருக்கின்றது.

# தமிழிலிருந்து மலையாளத்துக்கு



தமிழில் குறிஞ்சி மலர், முத்தாரம், திருமதி செல்வம் தொடர்களில் நடித்துக் கொண்டிருந்த ரிந்தியா இப்போது மலையாளத்தில் ஒளிபரப்பாகும் பாக்கியலட்சுமி தொடரில் வில்லியாக நடித்து வருகிறார்.

இந்தத் தொடர் தமிழில் ஒளிபரப்பான தெய்வமகள் தொடரின் மறுஒளிபரப்பு ஆகும். 'தமிழில் குடும்பப் பாங்கான கதாபாத்திரங்களில் நடித்தேன். எனக்கு வில்லியாக நடிக்க வேண்டும் என்று ஆசை. திடீரென்று வில்லியாக நடித்தால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற தயக்கம் இருந்தது. அதனால் மலையாள தொடருக்கு வந்து விட்டேன். இதைத் தவிர வேறு காரணம் எதுவும் இல்லை. தமிழில் கதை கேட்டுக் கொண்டிருக்கிறேன். விரைவில் தமிழுக்கு திரும்பி விடுவேன்' என்கிறார் ரிந்தியா.

## திக் திக்
# தொங்குபாலம்

சீனாவில் இரண்டு செங்குத்தான மலைகளுக்கு இடையே ஒரு தொங்கு பாலம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த தொங்கு பாலத்தில் நடந்து செல்வதற்கு 'த்ரில்லாக' இருப்பதாக பயணிகள் ஆச்சரியத்துடன் கூறுகின்றனர்.

சீனாவின் தெற்கே ஹனான் பிராந்தியத்திலும் ஹீபே பிராந்தியத்திலும் செங்குத்தான மலைமுகடுகள் ஏராளமாக உள்ளன. ஹீபே பிராந்தியத்தில் பாவோடெங் என்ற இடத்தில் 900 அடி உயரத்தில் 2 மலைமுகடுகளை இணைத்து 540 அடி நீளத்துக்குத் தொங்குபாலம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தத் தொங்குபாலம் அண்மையில் பைபர் கண்ணாடியால் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பாலத்தில் செல்வது திக் திக் பயணமாக இருப்பதால் ஏராளமான பயணிகள் வருகின்றனர்.

சுற்றுலா வந்த 23 வயதான யூன் கூ என்ற சீன இளம்பெண் கூறுகையில், இந்த தொங்குபாலத்தில் என் ஆண் நண்பருடன் சென்றேன். என்னுடன் நிறைய பேர் வந்தனர். நேரம் செல்ல செல்ல, எனது கால்கள் நடுங்க ஆரம்பித்தன. தொங்குபாலத்தில் பாதி தூரம் செல்வதற்குள் எனது கால்கள் செயல்பட மறுத்தன.

நான் கடைசி ஆளாக பின்தங்கிவிட்டேன். உடனே அங்கிருந்த சிறப்பு பயிற்சியாளர்கள், நான் மீதியுள்ள தூரத்தைக் கடப்பதற்கு உதவி செய்தனர். மொத்தத்தில், எனக்கு அது திகில் பயணமாக அமைந்தது என்றார். பாலத்தில் நடந்து சென்று த்ரில்லை அனுபவிக்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் படையெடுத்து வருகின்றனர்.



## அச்சத்தில் ஆழ்த்திய
# சிலந்தி வலை



சிலந்தியைக் கண்டு பயந்தாலும் சிலந்தியின் வலையை கண்டு பயப்படுபவர்கள் மிகவும் அரிதே. இருந்தாலும் 6 கால்களை கொண்ட சிலந்தி ஒன்று மனிதனின் உருவத்தை விடவும் மிகப்பெரிய வலையை பின்னியிருப்பதை பார்த்தால் என்ன செய்வீர்கள்?

6 கால்களை உடைய சிலந்தியொன்று மாபெரும் வலையை பின்னிப் பார்ப்பவர்களை அச்சத்திற்குள் ஆழ்த்திய சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

ஓய்வூதியம் பெறும் 74 வயதுடைய வயோதிபர் ஒருவரின் கராஜில் இந்தச் சிலந்தி தனது வலையை பின்னியுள்ளது. காரின் பக்கக் கண்ணாடியிலிருந்து கராஜ் வரை பின்னப்பட்டிருந்த இந்த வலை, மனிதர்களி.ன் உடல் நீளத்தை விடவும் மிக பெரிதாகக் காணப்படுகின்றது.

'ஒரு சிலந்தியால் இவ்வளவு பெரிய வலையை எவ்வாறு பின்ன முடியும் என்று நினைக்கையில் ஆச்சரியமாக உள்ளது. நான் வெளிச்சத்துடன் கராஜுக்கு சென்றதால் வலையில் மாட்டிக்கொள்ளவில்லை. எனினும் எனது மனைவி அங்கு சென்றிருந்தால் ஊரையே கூட்டியிருப்பாள்' என்று அந்த வயோதிபர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.






தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்தின விழா, கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன், வேள்ட் விசன் நிறுவன யாழ். மாவட்ட திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொசைரோ ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)



கிளிநொச்சி புதுமுறிப்பு சோலை நகர் கிராமத்தில் முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை நடைபெற்றது. கௌரவிப்பில் 95 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் கலந்து கொண் டனர். (வ-18)





கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை யில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் பிரதம விருந்தி னராக சென் னைப் பல்க லைக்கழகப் பேராசிரியர் அருணை பால றாவாயனும், சிறப்பு விருந்தி னராக காஞ்சி புரம் பச்சையப் பன் உயர் நிலைப் பள்ளி யின் முன்னாள் விரிவுரையாளர் பேராசிரியர் அ.சதாசிவமும் கலந்து கொண் டனர். (வ)









சிறுவர் மற்றும் முதியோர் தினம், மன்னார் நானாட்டான் கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட நறுவிலிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில், பாடசாலையின் அதிபர் ஆசைப்பிள்ளை தலைமையில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு இலட்சத்து இருபத்து ஆறாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும், முதியோர்களுக்கு இருபதாயிரம் ரூபா பெறுமதியான உடைகளும் வழங்கப்பட்டன. பிரான்ஸ் ரிஆர்ரி வானொலியின் சமூகப்பணிக்குப் பொறுப்பான எஸ். திரவியநாதனின் ஒழுங்குபடுத்தலில் பிரான்ஸ் ரிஆர்ரி வானொலி ஊடாக மார்க்கண்டு விமலசிங்கம், ரவிசங்கர், ஸ்காந்தா கந்தையா ஆகியோரதும், லண்டன் 'பார்வை' பத்திரிகையின் சமூகப்பணி பிரிவினரதும் நிதியுதவியில் குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. (வ-402)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 10 கோழிக்குஞ்சுகளும் பசு மாடும் வாழ்வுக்கு ஆதாரமாக முடியுமா?

30 வருடகாலப் போர் சிதைத்தவைகள் ஏராளம். அதில் முக்கியமானது வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட மக்களின் வாழ்வாதாரம். வன்னியில் நடந்த இரத்தக் களரியான இறுதிப்போர் மேலும் மேலும் பல குடும்பங்களை இந்த நிலைக்குள் தள்ளியது. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களை உருவாக்கியது. இவற்றில் பல குடும்பங்கள் இன்றும் தமது வாழ்வாதாரத்துக்குச் சிரமப்படும் நிலையே தொடர்கிறது. இந்த நிலைமையால் சில தற்கொலைகளும் நிகழ்ந்துள்ளன. குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிவிட்டுத் தனது உயிரையும் மாய்த்துக்கொள்ள தாய் முயன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இவையெல்லாம் வறுமைப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கான உதவிகள் தேவை, அவர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்ற தேவையை உணர்த்துகின்றன. இவர்களின் வாழ்வாதாரத்துக்காக சில தொண்டு நிறுவனங்களும் உள்ளூர் அமைப்புகளும் சில பல உதவிகளைக் கடந்த காலங்களில் செய்திருக்கின்றன. இந்த உதவிகளால் இந்த மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைத்ததா என்கிற கேள்வி எழுவதைத் தடுக்க முடியவில்லை. அதிலும், பொருளாதார அமைச்சின் கிராமத்துக்கு ஒரு மில்லியன் என்கிற திட்டத்தின் கீழ் வன்னியில் உள்ள - குறிப்பாகக் கிளிநொச்சியில் உள்ள - வறுமைப்பட்ட மக்களுக்கு கோழிக்குஞ்சுகள் அல்லது பசு மாடுகள் வழங்கப்படுகின்றன. ஒரு குடும்பத்துக்கு 10 அல்லது 15 கோழிக்குஞ்சுகள் அல்லது கன்று ஈனாத பசு வழங்கப்படுகின்றது. உண்மையில் இது போன்ற திட்டங்கள் அல்லது உதவிகளால் ஒரு குடும்பத்தின் வாழ்க்கைக்கான ஆதாரம் கிடைத்துவிடுமா?

கொடுக்கின்ற குஞ்சுகளை வளர்த்துக் கோழிகளாக்குவதற்கே 6 மாதங்கள் வேண்டும். அப்படியே அவை கோழிகளானாலும் அவற்றின் மூலம் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 10 முட்டை கிடைத்தாலும் அதிலிருந்து கிடைக்கக்கூடி வருமானம் 100 ரூபாய் மட்டும்தான். மாதத்திற்கு 3,000 ரூபாய். ஒரு குடும்பத்தின் ஒரு மாதச் செலவுக்கு இன்றைய காலத்தில் இது போதுமானதா? மாட்டில் இருந்து பால் கறந்தாலும் இதுபோன்றதே நிலைமை.

10 குஞ்சுகளில் இருந்து எதிர்காலத்தில் பெரிய பண்ணையே வைக்கலாம் என்றும், ஒரு மாட்டைப் பல மாடுகளாகப் பெருக்கி பண்ணையே வைக்கலாம் என்றும் ஒருசிலர் வாதிடலாம். உண்மைதான், அதனை மறுப்பதற்கில்லை. ஆனால் அதற்கு பல வருடங்கள் எடுக்கும். அதுவரையில் அந்தக் குடும்பத்துக்கான ஆதாரம் - வருமானம் - என்ன? குடும்பத்தையும் காப்பாற்றி இந்த உயிரினங்களுக்கும் சாப்பாடு போட்டு பல வருடங்களுக்கு வளர்க்க முடிந்தால் மட்டுமே வெற்றிகரமான பண்ணை ஒருவருக்குச் சாத்தியமாகும். ஆனால் கடந்த காலங்களில் இத்தகைய பல உதவிகள் தோல்வியில் முடிவடைந்தமையே வரலாறு. கூட்டோடு கொடுத்த குஞ்சுகள் காணாமற்போக வெறுங்கூடுகள் மட்டும் பல இடங்களில் நின்று கொண்டிருப்பதை, இந்தத் திட்டங்களை மீளாய்வு செய்தால் தெரிந்துகொள்ளலாம்.

அப்படி இருக்கையில் வாழ்வுக்கு ஆதாரமான திட்டங்கள் என்று இவற்றை எப்படிச் சொல்ல முடியும்? ஆதாரமே இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு இப்படி சிறு உதவிகளை வழங்கிவிட்டு வாழ்வாதாரம் வழங்கப்பட்டதாக அதிகாரிகள் சொல்வதிலும், காட்டுவதிலும் உண்மை இருக்க முடியாது. இதுவரையான காலத்தில் அவர்கள் கொடுத்த கோழிக்குஞ்சுகளில் இருந்து எத்தனை பண்ணைகள் உருவாகியுள்ளன என்பதை மீளாய்வு செய்து பார்த்தார்களேயானால் அதிகாரிகளால் உண்மையைக் கண்டுகொள்ள முடியும். எனவே வாழ்வாதார உதவி என்ற பெயரில் இப்படியான ஏமாற்றுக்கள் நிறுத்தப்படவேண்டும். உண்மையில் வறிய குடும்பங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமான வழிமுறைகள் கண்டறியப்பட்டு நேர்த்தியாக அவை செயற்படுத்தப்பட வேண்டும். பண்ணைகள் உருவாக்கப்பட வேண்டுமானால் அதற்கான உதவியும் அவற்றில் இருந்து வருமானத்தைப் பெறும் வரையில் அவற்றைப் பராமரிப்பதற்கான உதவியும் வழங்கப்படாத வரைக்கும் இது போன்ற திட்டங்களால் எதிர்பார்க்கப்படும் பயனேதும் ஏற்படப் போவதில்லை.

அரசியல் காரணங்களுக்காக கிடைக்கும் பணத்தை இப்படிப் பலருக்குக் கிள்ளித் தெளித்து மக்களையும் ஏமாற்றி, பணத்தையும் வீணாக்குவதை விட்டுவிட்டு உருப்படியான ஏதாவது திட்டங்கள் குறித்து சிந்திக்க வேண்டும். அதுவே வறிய மக்களின் உண்மையான வாழ்வாதாரத்துக்கு உதவும்.

# அழுகை அரசியல்

ஸ்டாலின்



துக்கத்தை அடக்க முடியாமல் தொண்டையை அடக்கி கண்களில் இருந்து வெளிவருவது தான் கண்ணீர்.

அந்த துக்கத்தை அடக்க முடியாமல் அ.தி.மு.க அமைச்சர்கள் அனைவரும் தேம்பித் தேம்பி அழுத காட்சிகள் தான் இப்போது ஸ்பெஷல்.

அதுவும் பதவி ஏற்கும் போது எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் விடுவார்கள், இங்கு பதவி ஏற்கும் போது துக்கம் தொண்டையை அடைக்க அதனைத் தாங்க முடியாமல் அழுதுள்ளனர். எல்லாம் அம்மா, சிறைக்குப் போன துக்கம்தான். ஆம் அ.தி.மு.க கட்சியில் தமக்குப் பின்னர் எந்த வாரிசும் இல்லை, நானே ராஜா, நானே மந்திரி என்பது போன்று அ.தி.மு.க கட்சியின் துணையோடு தமிழகத்தை ஆண்டுவந்தார் ஜெயலலிதா.

கடந்த 18 வருடங்களாக நடைபெற்று வந்த ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் கடந்த 27ஆம் திகதி ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூபா 100 கோடி அபராதமும் விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டார் ஜெயலலிதா.

அவ்வளவுதான்; அ.தி.மு.க அமைச்சர்கள், தொண்டர்கள் என எல்லோரும் சேர்ந்து ஒட்டுமொத்த தமிழகத்தைப் போராட்டக் களமாக மாற்றி விட்டனர்.

அம்மா தான் இல்லை, இனி தமிழ்நாட்டை ஆளப்போவது யார் என்ற கேள்விகள் மக்கள் மத்தியிலும், அ.தி.மு.க மத்தியிலும் எழ, விறுவிறுப்பாக நடந்து முடிந்தது தமிழக முதல்வர் தெரிவு.

அவர் தான் அம்மாவின் விசுவாசி, ஓ. பன்னீர்ச்செல்வம். உடனடியாக முதல்வர் மற்றும் 9 அமைச்சர்களும் தெரிவு செய்யப்பட்டவுடன், ஆளுநரின் ஒப்புதலோடு அவர்கள் அனைவரும் பதவியேற்றனர்.

பதவியேற்பு விழாவில் முதல்வராக முதலில் பதவியேற்ற பன்னீர்ச்செல்வம் அழுகையை ஆரம்பித்து வைத்தார், தேம்பித் தேம்பி அழுதவாறு, தன்னுடைய உறுதிமொழியை பன்னீர்ச்செல்வம் மேற்கொண்டார்.

முதல்வர் செய்ததை அப்படியே அச்சடித்தாற்போன்று செய்தனர், அடுத்ததாகப் பதவியேற்ற அமைச்சர்கள்.

தேம்பி அழுத அழுகையால், அவர்கள் வாயில் இருந்து வார்த்தைகள் கூடவெளி வரவில்லை, ஒரே கண்ணீரும், கம்பலையுமாக நடந்தது இந்தப் பதவியேற்பு விழா.

அரசியல் வரலாற்றில் இப்படி ஓர் அழுகையை யாரும் பார்த்திருக்கமாட்டார்கள்.

இதேவேளை, அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கைது செய்யப்பட்டதற்குப் பின்னர் தமிழகத்தின் நிலை மாறி உள்ளது. ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டதால் அ.தி.மு. கவினரி

> பதவியேற்பு விழாவில் முதல்வராக முதலில் பதவியேற்ற பன்னீர்ச் செல்வம் அழுகையை ஆரம்பித்து வைத்தார், தேம்பித் தேம்பி அழுதவாறு, தன்னுடைய உறுதி மொழியை பன்னீர்ச்செல்வம் மேற் கொண்டார். முதல்வர் செய்ததை அப்படியே அச்சடித்தாற்போன்று செய்தனர், அடுத்தாகப் பதவியேற்ற அமைச்சர்கள், தேம்பி அழுத அழுகையால், அவர்கள் வாயில் இருந்து வார்த்தை கள்கூட வெளிவரவில்லை

டையே எழுந்துள்ள அதிருப்தி, அதன் காரணமாக நடக்கும் தொடர் போராட்டங்கள் அனைத்தும் புரிந்துகொள்ளக்கூடியது தான். ஆனால் இவை அனைத்தையும் தாண்டி, நிலைமை மிக விரைவில் கட்டுக்குள் வர வேண்டியது அவசியம்.

தமிழகத்தில் அ.தி.மு. கவுக்கு மாற்றுக் கட்சி தி.மு.க மட்டுமே என்ற நிலை எப்போதோ மாறிவிட்டது. அந்த இடத்தை பிடிக்க தி.மு.க நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. தற்போது இங்கு உள்ள வெற்றிடத்தை காங்கிரஸால் நிரப்ப முடியும். திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி உருவெடுக்கும் நிலை உள்ளது. ஜெயலலிதாவின் நட்பு ஒரு நாள் அவரது அரசியல் வாழ்வை முடக்கும் என்ற அவரது அரசியல் விசுவாசிகள் பலரது கணிப்பை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது வெளியான தீர்ப்பு.

1991-96 காலகட்டத்தில் ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்தபோது நடந்த சம்பங்கள் குறித்து நன்கு அறிந்தவர்களின் குற்றச்சாட்டு சசிகலா அந்தக் காலகட்டத்தில் அரசியல் சாசனத்திற்கு அப்பாற்பட்டு அதிகாரங்களை கையில் வைத்திருந்தார் என்பதாகவே இருக்கும். சசிகலாவும் அவரது சகாக்களும் தமிழகம் முழுவதும் நிலங்களை வாங்கிக் குவிப்பதில் மும்முரமாக இருந்தனர்.

1980 களில் அ.தி.மு.கவின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தார் ஜெயலலிதா. அப்போதிருந்தே ஜெயலலிதா வும்-சசிகலாவும் நல்ல நட்புறவில் இருக்கின்றனர். கட்சிக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், தேர்தல் பிரசாரங்கள் என ஜெயலலிதா எங்கு சென்றாலும் அவருடன் சசிகலாவும் இருப்பார்.

ஜெயலலிதாவின் வீட்டிலேயே சசிகலா தங்க ஆரம்பித்தார். சசிகலா தவிர அவரது குடும்பத்தைச் சேர்ந்த 8 பேரும் அவருடன் ஜெயலலிதாவின் வீட்டில் தங்கினர். சசிகலாவின் உறவினர்களில் ஒருவரான பாஸ்கரன் தொலைக்காட்சி ஒன்றை நிர்வகித்து வந்தார். மற்றொரு உறவினர் வி.என். சுதாகரன் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் ஆனார்.

1995 செப்ரெம்பரில் நடைபெற்ற சுதாகரனின் பிரம்மாண்ட திருமண நிகழ்ச்சி ஊடகங்களில் வெளியாகி, பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்பு அலைகளை ஏற்படுத்தியது. அந்த எதிர்ப்பின் பயன் தேர்தலில் எதிரொலித்தது. மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க 39 தொகுதிகளிலும் தோல்வியடைந்தது.

1996 பொதுத் தேர்தலில் 4 சட்டமன்ற தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க வெற்றி கண்டது.

தேர்தல் பின்னடைவுக்குப் பின்னர், சசிகலா, மற்றும் அவரது குடும்பத்தினருடனான நட்புறவை துண்டித்துக் கொள்வதாக ஜெயலலிதா அறிவித்தார். வளர்ப்புமகனையும் கைவிட்டார். வாழ்நாள் முழுவதும் நகைகள் அணியப்போவதில்லை என சூளுரைத்தார். பின்னர் மீண்டும் மலர்ந்தது ஜெயலலிதா சசிகலா நட்பு. ஆனால், சசிகலாவின் கணவர் எம்.நடராஜன் எப்போதுமே ஜெயலலிதாவின் நல் அபிப்பிராயத்தைப் பெறவில்லை. அவர் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிப்பதாக ஜெயலலிதா சந்தேகித்தார்.

இதனால், டிசெம்பர் 2011 இல் சசிகலா குடும்பத்தினரை நட்பு வளையத்தில் இருந்து மீண்டும் வெளியேற்றினார் ஜெயலலிதா. அ.தி.மு. கவை கையகப்படுத்த நடராஜனும், மற்றவர்களும் கூட்டுச் சதியில் ஈடுபடுவதாகக் கருதி ஜெயலலிதா இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

ஜெயலலிதாவின் நடவடிக்கை கட்சித் தொண்டர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மன்னார்குடி குடும்பத்தினருடனான நட்பே ஜெயலலிதாவுக்கு கேடு விளைவித்ததாக கட்சியினர் நம்பினர். ஆனால், அ.தி.மு.க தொண்டர்கள் மகிழ்ச்சி 100 நாள்கள் மட்டுமே நீடித்தது. சசிகலா, தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுமாறு விடுத்த கோரிக்கைக்கு பணிந்தார் ஜெயலலிதா.

1990 களில் சசிகலாவும் அவரது கூட்டாளிகளும் தொடங்கிய தொழில் நிறுவனங்கள் மூலம் கிடைத்த சொத்தே பின்னாளில் ஜெயலலிதாவை நீதிமன்றங்களில் நிறுத்தியது. சட்ட விரோதமாகச் சம்பாதிக்கப்பட்ட பணத்தை இந்த நிறுவனங்களே வருமானம் என திரித்துக் கூறின என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

பி.ஏ.அந்தோனிமார்க்

# மனநோய்க்கு விடுதலை

மனிட வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஆரோக்கியமான மனநிலை தேவை என்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வறிக்கையின்படி, மன அழுத்தத்தால் உலகம் முழுவதும் 350 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆண்களை விட பெண்களே இரு மடங்கு அதிகமாக மன அழுத்தத்துக்கு உள்ளாகி வருவதாக அறிவிக்கப்படுகிறது. இலங்கையில் அண்மையில் நடைபெற்ற போர், வெடிகுண்டு தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள், இயற்கை அழிவுகள், ஆழிப் பேரலைத் தாக்குதல், பொருள் அழிவுகள், இடப்பெயர்வுகள் என்பவற்றால் பல ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிலர் மன அழுத்தத்தை மனநோய் எனத் தீர்மானிக்கிறார்கள். இது 90 வீதம் மனநோய் தான் எனக் கூறுகிறார்கள். மனநோய் எவ்வளவுதான் கூடினாலும் மனநோயாளர்கள் 5 வீதத்துக்குள்தான் இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். ஆனால் மனநோயால் பாதிக்கப்பட்டோர் வடமாகாணத்தில் மொத் தத்தில் 25 வீதம் என கூறப்படுகிறது. அதிலும் பெண்களும் சிறுவர்களும் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ வேண்டுமாயிருந்தால் அவனது உடல், மனம், ஆத்மா, சூழவுள்ள சமூகம் என்பன நல்ல நிலையில் இருக்கவேண்டும். இவை அனைத்தும் அவனுடைய தனி வாழ்வில் பிளவுபடாமல் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பின்னிப் பிணைந்து செயற்படுகின்றன. இதில் ஏதாவது ஒன்று பாதிக்கப்படுமாகவிருந்தால், அதனுடன் தொடர்புடைய மற்றைய மூன்று பகுதிகளும் பாதிப்படையும். உதாரணமாக மனம் பாதிக்கப்படுமாயிருந்தால், அது உடல், சமூகம், ஆத்மா எல்லாவற்றையும் பாதிப்புக்கு உள்ளாக்கும். உடல் நலத்துடன் உள நலமும் சீராக அமையுமானால் நிச்சயமாக நாம் நூற் றாண்டுகளுக்கு மேலாக வாழ முடியும். மனநிலை பாதிக்கப்படாது இருக்க வேண்டுமாயிருந்தால் ஒருவர் தனது நிலையை உணர்ந்து அமைதி பேணி வாழ்க்கையை சுமுகமாக அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலையை மறந்து நாம் இயற்கையோடு முரண்பட்டு வாழ்கிறோம். பொருள் சம்பாதிப்பதில் உள்ள வாஞ்சை, வாழ்வியலில் தீவிர ஈர்ப்பு, பதவி மோகம், அந்தஸ்து, அதிகாரம் செலுத்த முயலுதல் போன்ற காரணங்களினால் ஒரு பரிதாபகரமான நிலைக்கு தள்ளப்படு கிறோம். நாம் 100 ஆண்டுகளுக்கு வாழக் கூடிய உடல் அமைப்பைப் பெற்றிருந்தாலும் பலர் 35-40 வயதுகளில் இறந்து விடுகிறார் கள். இதற்கு இவர்களது மனநிலையே மூல காரணமாக அமைந்திருந்தது எனக் கூறலாம். கோபம், பயம், பதற்றம், மனநெருக்கீடு என்பன எமது மனத்தை நிலைகுலைய வைக்கின்றன. உடலில் உள்ள எல்லா உறுப்புக்களையும் மூளை, இதயம் உட்பட அனைத்தையும் இயக்குவது எமது மனமே. நல்ல உடலில் நல்ல உள்ளம் இருக்கும் என்பார்கள். ஆனால், இந்த உடலை இயக்குவது எமது மனம்தான். உணர்தல், சிந்தித்தல், அறிதல் முதலானவைகளை மனதின் இயல்பு நிலைகளெனக் குறிப்பிடலாம். மனிதன் தனது ஐம்புலன்களின் பங் களிப்புடன் ஏனைய மனிதர்களுடன் தொடர்பு கொள்கிறான். ஐம்புலன்களினால் ஏற்படும் உணர்வுகள், நரம்புகள் மூலம் மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.



1. கண் மூலம் பார்க்கிறோம்.
2. வாய் மூலம் பேசுகிறோம்.
3. மூக்கின் மூலம் சுவாசிக்கிறோம்.
4. செவி மூலம் கேட்கிறோம்.
5. மெய் மூலம் தொட்டு உணர்கிறோம்.

மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஐம்புலன்களின் உணர்வுகள் எண்ணங்களாக மாறி விடுகின்றன. எண்ணங்களாக மாறிய எமது உணர்வுகள், அவை தொடர்பான அறிவுடையவர்களாக எம்மை மாற்றுகின்றன.

இந்த உணர்வுகள், எண்ணங்கள், அறிவு முதலானவற்றின் தொகுப்பே எமது மனமாகும். சுற்றாடல் நிலை காரணமாக ஏராளமான சமூக அல்லது குடும்ப நோய்கள் பரவலாம், அல்லது விசேட சூழ்நிலையில் சிறுவர்களும் பாதிக்கப்படக் கூடும். பெற்றோரின் தரக்குறைவான சமூக பங்களிப்பு, குடும்ப சச்சரவுகள், பலாத்கார தாக்குதல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், சரீர துஷ்பிரயோகங்கள், கடமை உணர்வு இன்மை போன்றனவற்றை இந்த மன நோய்க்குக் காரணமாகக் குறிப்பிடலாம். கடந்த 30 ஆண்டுகளாக போர், குண்டு வெடிப்பு தாக்குதல்கள், பல அதிநவீன ஆயுதங்கள், எறிகணைகள், ஏவுகணைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், நவீன போர் விமானத் தாக் குதல், இயற்கை அழிவுகள், வீடுகள் பொருள்கள் அழிவுகள், வாகனங்கள் அழிவுகள், ஏதிலிகளாக இடம் பெயர்ந்து சீரழிந்த வாழ்க்கை போன்றவை வடமாகாண மக்கள் மத்தியிலும் சிறுவர்கள் மத்தியிலும் துன்பகரமான நிலைகளை அதிகரிக்கப் பண்ணி மனநோய்களை அதிகரிக்கப் பண்ணியுள்ளன. இரசாயனக் குண்டுகள், எறிகணைகளை பாவித்தன் மூலம் மக்கள் பலர் மற்றவர்களின் கண் முன்னால் உயிரிழந்ததையும் கண்டுள்ளார்கள். இதைவிட இறந்த ஆயிரக் கணக்கான மக்களை பெரிய கிடங்குகளை வெட்டி புல்டோஸர் மூலம் அதற்குள் இட்டு மூடியுள்ள சம்பவங்களும் நடை பெற்றதாக கூறுகிறார்கள். கணவனை இழந்த விதவைகள், தாய், தந்தையை இழந்த குழந்தைகள், மனநலம் பாதிக்கப்பட்டு இன்று பலர் பைத்தியம் பிடித்து தெருத் தெருவாக அலை கிறார்கள். இன்னும் பலர் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு சித்திர வதைகளுக்குள் அகப்பட்டு பலாத்கார பாலியல் வன்முறைகளுக் குள் அகப்பட்டு, சொல்லொணாத் துயர்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என அறிய வருகின்றது. இந்த நாட்டில் ஏற்பட்டு இருக்கும் இந்த நிலைக்கு யார் பொறுப்பு? இவர்களுக்கு நியாயமான தரமான வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? இதில் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்பு கூறுவார்களா? சர்வதேசமும், ஐ.நா. சபையும் இந்த விதமான மனித நேயத்துக்கு எதிரான செயற்பாடுகளை இல்லாதொழிக்குமா? வடக்கு கிழக்கு மாகாண மக்களைப் பற்றி சிந்திப்போமாக இருந்தால், சிறுவர்கள், குழந்தைகள் உணவில்லாமல் மடிவதை விட போர் மற்றும் விமானத் தாக்குதல் போன்றவற்றினால் ஏராளமாக இறந்துள் ளார்கள். தாய்மார் போஷாக்கு மற்றும் சத்து ணவுக் குறைபாட்டினால் தமது குழந்தை களுக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாது துன்பப் படுகிறார்கள். இதனால் சமூகத்தில் மனநோய் அதிகரித்துள்ளது. நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் ஆகிய நோய்கள் போன்றதே மனநோயும் என்பதை சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். மனநோயை வெற்றி கொள்ளும் சக்தி உங்களிடம் தான் உண்டு. சோர்வடைவதை விடுத்து வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்வது நலம். ஆரம்பத்திலே நோயை அடையாளம் கண்டு சிகிச்சை பெற்றால் விடுதலை உண்டு. சிகிச்சை பெறுவது தாமதமானால் நோய் குணமடைவதற்கு நீண்ட காலமெடுப்பதுடன், அதிக அளவான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் வேண்டி வரும். மனநோயின் தாக்கத்தினால் மூளை யின் பாகங்களில் பாதிப்பு ஏற்படக் கூடும். மனநோய் உள்ளவர்களை ஆரம்ப நிலை யிலே அடையாளம் காண்பது எப்படி?

1. மனதில் ஏற்படும் அசாதாரணமான அனுபவங்கள், உண்மை இல்லாத சத்தங்களை கேட்டல், உண்மை இல்லாத காட்சிகள் தெரிதல்.
2. அடிக்கடி ஏற்படும் அசாதாரணமான உணர்வுகள், குறிப்பிட்டு விளக்க முடியாத பயம், துக்கம், வெறுப்பு, அசதித்தன்மை, சந்தேகம் தேவையற்ற பரபரப்பு, கோபம்.
3. வித்தியாசமான நடத்தைக் கோலங்கள், தனிமையில் உரையாடல், சிரித்தல், பதற் றம் ஏற்படல், போதைப் பொருள் பாவனை, தொடர்ந்து தூக்கமின்றி இருத்தல். அநாவசியமான பணவிரயம். கை கழுவுதல் போன்ற செயல்களை மீண்டும் மீண்டும் பல முறை செய்தல் போன்றவை இவற்றில் அடங்கும். சில நோயாளர்கள் தமது அசௌகரியங்களை மறைக்க முயல்வர். அவ்வாறான வேளையில் அவரது குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர்கள் அவருடன் கலந்துரையாடி முறையான சிகிச்சை பெற உதவி செய்தல் வேண்டும்.

### மனநோய்க்கான சிகிச்சை வகைகள்

மருந்து வகைகள், உளவளக் கல்வி அல்லது மனநலக்கல்வி, உளப் பயிற்சி அல்லது உளச் சிகிச்சை, மின்னியல் அதிர்ச்சி முறை, புனர் வாழ்வு சமூக மயப்படுத்துதல், வீட்டில் சிகிச்சை அளித்தல்.

பக்க விளைவு: உதடு வாய் உலர்தல், உமிழ் நீர் அதிகம் சுரத்தல் , நடுக்கம், நித்திரை, தூக்கமின்மை, ஒரே இடத்தில் இருப்பதில் சிரமம் அசௌகரியமான உணர்வு.

♦ தமக்குத் தாமே மனத்துணிவை ஏற்படுத்தினால் நோய் வராது.

மேலும், வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் வைத்தியசாலை சேவைகள் மிகவும் குறைவு. தரமான வைத்தியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. ஆகையால் இதற்கு ஒரு தேசிய நிரந்தர விழிப்புணர்வுத் திட்டம் மிகவும் அவசியம். அதன் மூலம் இந்த மனநோயை இனம்கண்டு அதை நிவர்த்தி செய்வதற்கு உள்ள முக்கியமான தடைகளை கண்டு பிடிப்பதன் மூலம் முன்னேற்பாடான மாற்று வழிமுறைகள் கிடைக்கக் கூடும்.

ஆகவே நமக்குள் மனத்துணிவு ஏற் பட்டால் நோய் எம்மை அணுகாது. மன நோயைக் குறைக் கும் இடம் தேவ சந்நிதானம். அங்கு சென்று செபிப்பதன் மூலம் சுகமடைய முடியும். நாம் எல்லோரும் சுமைதாங்கி களாக மாறினால் நாட்டைக் காப்பாற்ற முடியும்.

ம.துளசிதா

# ஒழுக்கம் யாருக்காக...?

கற்பு என்பது இருபாலாரிடமும் இருக்கவேண்டிய ஒரு ஒழுக்க நெறியாகும். ஓர் ஆண் ஒழுக்க நெறியிலிருந்து தவறும் போதும் ஒரு பெண் ஒழுக்கநெறியிலிருந்து தவறும்போதும் ஒரேமாதிரியான தவறுகளே ஏற்படுகின்றன.

இதனால் இந்த உலகத்தின் ஒட்டுமொத்தமான சமுதாயமும் பாதிப்புக்கு உள்ளாகிறது. ஆண்களும் பெண்களும் எப்பொழுதும் நல்லொழுக்க சீலர்களாக இருப்பார்களாயின், இந்த உலகத்தில் கெட்ட மனிதர்கள் ஒருவர் கூட இருக்க முடியாது என்பதே உண்மை.

எமது சமூகத்தில் பலதரப்பட்ட மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய பண்புகள், கொள்கைகள் போன்ற அனைத்தும் வேறுபட்டவையாகவே காணப்படும். அனைவரும் ஒரே கொள்கையில் ஒரே பண்புகளுடன் இருக்கவேண்டும் என எதிர்பார்க்க முடியாது. ஆயினும் ஒவ்வொருவரும் சிறந்த ஒழுக்க நெறியைப் பேணும்போது சமூகச் சீரழிவுகள் தடுக்கப்படுவதுடன், சமூகத்தில் ஒற்றுமையும் சமாதானமும் ஏற்பட்டு மகிழ்ச்சிகரமான ஒழுக்கமான சமுதாயம் உருவாகும்.

எமது சமூகத்தில் ஆணுக்கு கற்பு என்பது முக்கியமற்றவிடயம் என்பது போன்ற சமூகப் பார்வையே ஆண்களுக்கு சிறுவயதிலிருந்து அளவுக்கதிகமான சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதனால் சமுதாயத்தில் தான் விரும்பும் போது எந்தப் பெண்ணுடனும் சேர்ந்து வாழலாம் என்ற மிகத் தவறான நிலைக்கு செல்கிறான். மிகக் கொடூரமான மிருகத்தனம் உள்ளவனாக மாறுகிறான். பகுத்தறிவுள்ள மனிதனே பகுத்தறிவற்ற மிருகங்கள் போல நடந்து குறுகிய நேர சந்தோசத்துக்காக தனது வாழ்க்கையை சீரழிப்பதுடன் அப்பாவிப் பெண்களின் வாழ்க்கையையும் சீரழிக்கிறான்.

ஒழுக்கநெறி தவறும்போது ஓர் ஆணுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவது பெண்களை விடக் குறைவாகும். ஏனெனில் இறைவனின் படைப்பு அத்தகையது. ஆகவே ஓர் ஆண் தான் தவறு விடுவது வெளி உலகுக்கு தெரியவராது என்று எண்ணி துணிந்து செயற்படுகிறான். கற்பு நெறியென்பது தனக்கு தேவையற்ற விடயம் என நினைக்கிறான். இது முற்றிலும் தவறான ஒன்றாகும். ஓர் ஆண் தனக்கு வரப்போகும் மனைவியோ அல்லது தனது மனைவியோ எவ்வாறு கற்புடன் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றானோ அதே போன்று ஒரு மனைவியும் கணவனிடத்தே அவன் கற்புடன் இருக்க வேண்டும் என எதிர்பார்க் கிறாள் என்பதை கணவன் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இன்றைய சமூகத்தில் பெண்களும் நவநாகரிக உலகுக்குள் செல்லும் போது தமது சுதந்திரத்துக்கு எப்பொழுதும் ஒரு எல்லையை வரையறை செய்து வைத்திருக்காமையும், ஆண்களினால் தவறான நடைமுறைக்குள் வலிந்து இழுக்கப்படும்போது அதனைத் தவிர்த்து தமது சுய ஒழுக்கத்தைப் பேணி நடக்காமையும், ஒழுக்க சீர்கேடுகளை உருவாக்கி கற்பு நெறியை அழிவடையச் செய்கிறது. கற்பு நெறி சிதைவடைவது மட்டுமல்லாது சீரற்ற தகாத உறவுகளால் ஆரோக்கியமற்ற எதிர்கால சந்ததியை உருவாக்கி அவர்களின் நிலைமை கேள்விக்குறியாக்குவதாக அமைகிறது. ஆகவே பெண்களும் ஆண்களும் ஒழுக்க நெறியாகிய கற்புடன் இருப்பதன் மூலம் அவர்கள் தம்மைத்தாமே அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். ஒரு மனைவியின் அன்பும், மென்மையும், ஒழுக்கமும் ஒரு கணவனை தவறு விடுவதிலிருந்து காப்பாற்றுவதுடன் ஒரு கணவனின் அரவணைப்பும் ஆறுதல்படுத்தலும் உண்மைத் தன்மையான செயற்பாடும் ஒரு மனைவியை தவறுவிடுவதி லிருந்து காப்பாற்றும்.

## அருணாச்சலத்தில் எய்ட்ஸ் நோயாளர்கள் அதிகரிப்பு

அருணாச்சல பிரதேசம் மாநிலத்தில் எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கடந்த 5 வருடங்களில் அதிகரித்துள்ளது.
மார்ச் மாதம் வரையிலான தகவலின்படி மாநிலத்தில் 223 பேருக்கு எச்.ஐ.வி. பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் மாநிலத்தில் 167 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது என்று மாநில எய்ட்ஸ் கட்டுபாட்டு மையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு துறை இயக்குநர் தசோர் பாலி, இது குறித்துத் தெரிவிக்கையில்; சோதனையிலே 15 முதல், 39 வயதுக்கு உட்பட்டோர்களுக்குப் பாதிப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாதிப்பு அதிகரிப்புக்குப் பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு முதன்மையான காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.
விழிப்புணர்வால் மட்டுமே இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறியுள்ளார். (வ)

## ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.1சி ஒக்.16 இல் விண்ணுக்கு

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.1சி செயற்கைக்கோள் வரும் 16 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது. இந்திய கடற்பகுதிகளை கண் காணிக்கும் வகையிலும், இந்திய கப்பல் படைக்கு உதவும் வகையிலும், இந்த ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.1சி செயற்கைகோள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயற்கை கோள் எதிர்வரும் 13 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்தது. இறுதிநேரத்தில் செயற்கைக் கோளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். அதனைத்தொடர்ந்து குறித்த செயற்கைக்கோள் செலுத்தப்படும் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

# வன்முறையை கைவிடுங்கள்

## இளைஞர்களுக்கு பிரதமர் மோடி வலியுறுத்து



சந்திரபூர், ஒக்.11
வன்முறையைக் கைவிடுங்கள் என்று இளைஞர்களை பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.
மராட்டிய மாநிலத்தில் நக்சலைட் தீவிரவாதிகளின் பாதிப்பு அதிகமாக உள்ள சந்திரபூரில் உள்ள பராக்மா பூரியில் பிரதமர் நரேந்திர மோடி பரப்புரை செய்தார். இதன்போது அவர் மேலும் பேசுகையில்,
"தீவிரவாதத்தால் எவருக்கும் பயன் இல்லை. வன்முறைப் பாதையைத் தெரிவு செய்து செல்லும் இளைஞர்கள் அதனைக் கைவிடுமாறு நான் கோரிக்கை விடுக்கிறேன். இது உங்களுக்கு நன்மையை ஏற்படுத்தும். உங்களது தோள் பட்டையில் இருந்து துப்பாக்கியை எடுத்து எறியுங்கள். அதற்குப் பதிலாக கலப்பையை எடுங்கள். இது உங்களுடைய வாழ்க்கையை மாற்றும்" என்றார்.
மராட்டிய மாநில நக்சலைட் எதிர்ப்பு படையின் சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, கடந்த பெப்ரவரி 1985 தொடக்கம், ஜுலை 2014 வரையில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த கடசிரோலி மாவட்டத்தில் மட்டும் வன்முறையில் 451 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கோண்டியாவில் 33 பேரும், சந்திரபூரில் 9 பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், பரப்புரைக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, நலிவடைந்த மாநிலமான சத்தீஸ்காரில் பாரதீய ஜனதா ஆட்சி அமைந்த பின்னர் மாநிலத்தில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அங்கு விவசாயிகளுக்கு அவர்களது பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று நாம் உறுதி அளித்துள்ளோம்" - என்று கூறியுள்ளார். (வ)

# வெறுப்புணர்வை பரப்புகிறது பா.ஜ.க.

## சோனியா காந்தி குற்றச்சாட்டு



டில்லி, ஒக்.11
மக்களிடையே பாரதிய ஜனதாக் கட்சி வெறுப்புணர்வைப் பரப்பி வருவதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். மகாராஷ்டிர மாநிலம் அவுரங்கபாத்தில் தேர்தல் பரப்புரை மேற்கொண்ட சோனியாகாந்தி, பாரதிய ஜனதாக் கட்சி, அடிக்கடி முகத்திரையை மாற்றும் பழக்கம் கொண்டது என்று விமர்சித்தார்.
ஆட்சியைப் பிடிப்பதற்காக பாரதிய ஜனதாவும், சிவசேனாவும் எந்தவொரு செயலையும் செய்யத் தயங்காத கட்சிகள் என்று சோனியா காந்தி குறிப்பிட்டார். நிலவில் இந்தியா கால் பதிக்கவும், அணுசக்தி கொண்ட நாடாக மாறியதற்கும் காங்கிரஸ் ஆட்சியே காரணம் என்றும் அவர் கூறிப்பிட்டார்.
இதுதவிர, கூட்டணியிலிருந்து பிரிந்த தேசியவாத காங்கிரஸையும் பரப்புரையின்போது சோனியா காந்தி சாடினார். ஆட்சியைப் பிடிப்பதற்காக கூட்டணியை முறித்துக் கொண்ட தேசியவாத காங்கிரஸ், தேர்தலுக்குப் பிறகு வேறு கட்சியுடன் கூட்டணி வைக்க வாய்ப்பிருப்பதாக அவர் குறிப்பிட்டார். (வ)



மகாராஷ்டிர மாநிலம் அவுரங்கபாத்தில் தேர்தல் பரப்புரை மேற்கொண்ட சோனியா காந்தியை ஆதரவாளர்கள் வரவேற்ற வேளையில்..

## உயிர்காக்கும் மருந்துகளின் கட்டுப்பாட்டை நீக்குமாறு மனு

உயிர்காக்கும் மருந்துகளுக்கான கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நீரிழிவு, காசநோய், எய்ட்ஸ், இதயநோய் உள்ளிட்ட 108 வகை நோய்களுக்கு பன்றமது வாழ்நாள் வரை மருந்து எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த உயிர்காக்கும் மருந்துகளுக்கு மத்திய அரசு விதித்திருந்தக் கட்டுப்பாடுகளை சமீபத்தில் தளர்த்திக் கொண்டுள்ளது. இதனால் மருந்து நிறுவனங்கள் தங்களது விருப்பத்துக்கு ஏற்ப விலையை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.
அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உயிர்காக்கும் மருந்துகள் ஏழைகளுக்கும் இன்றியமையாதது. அவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி உள்ளதால், மருந்து நிறுவனங்கள் அத்தியாவசிய மருந்துகளின் விலையை உயர்த்தி அறிவிக்கக் கூடும். இதனால் ஏழைகள் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, அவர்கள் மருந்து வாங்க வழியின்றி உயிரிழக்கவும் நேரிடும் என்பதால், இந்த மனுவை அவசர மனுவாக எடுத்து விசாரிக்க மனுதாரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

# ஏர்செல்-மேக்சிஸ் விவகாரம் சி.பி.ஐ. பதிலளிக்க உத்தரவு

## சிதம்பரம் மீதான நடவடிக்கை தொடர்பில்



டில்லி, ஒக்.11
ஏர்செல்- மேக்சிஸ் விவகாரத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் மீதான முறைப்பாட்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என்பது குறித்து பதில் அளிக்குமாறு சி.பி.ஐ.க்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பா.ஜனதாவைச் சேர்ந்த சுப்பிரமணியன் சுவாமி, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், ஏர்செல் பங்குகளை மேக்சிஸ் நிறுவனம் வாங்க முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அனுமதித்ததில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாகவும், ரூ.600 கோடிக்கு மேலான பங்குகளுக்கு அனுமதி தர சிதம்பரத்துக்கு அதிகாரமில்லை என்றும் கூறியிருந்தார்.
மேலும், வெளிநாட்டு முதலீடு மேம்பாட்டு வாரிய தலைவராகவும் ப.சிதம்பரம் இருந்தார் என்றும் மனுவில் தெரிவித்திருந்தார்.
அந்த மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ப.சிதம்பரம் மீதான முறைப்பாட்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என்பது குறித்து பதில் அளிக்க சி.பி.ஐ.க்கு உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம், வழக்கு விசாரணையை எதிர் வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (வ)

# சசிகலா உட்பட மூவரும் பிணை மனுத் தாக்கல்

## உச்ச நீதிமன்றத்தில்

சொத்துக்குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறையில் உள்ள சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பிணை கோரி உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளனர்.



சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, ஜெயலலிதா உட்பட 4 பேரும் பிணை கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. இந்தநிலையில், ஜெயலலிதாவின் தோழி சசிகலா மற்றும் இளவரசி, சுதாகரன் ஆகியோர் பிணை கோரி உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவும் விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

# குளத்தில் இடி விழுந்ததால் தர்மபுரியில் திடீர் நீரூற்று

இரண்டு தினங்களுக்கு முன்னர்வரை வற்றிக் காய்ந்து தரிசாகக் காணப்பட்ட தர்மபுரி கிராமக் குளத்தில் இடி விழுந்து இயற்கை தரும் கொடையாக திடீர் நீரூற்று உருவாகியுள்ளது.
அண்மையில் தர்மபுரியைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்திலுள்ள வாழப்பாடியைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் கடும் இடி இடியுடன் கூடிய கனமழை பெய்தது.
அப்போது நள்ளிரவு 12 மணியளவில் பயங்கர சத்தத்துடன் மின்னல் ஒன்று தரையில் இறங்கியது. இதனால், வாழப்பாடி பகுதியில் உள்ள வீடுகளில் அதிர்வு ஏற்பட்டது. தூங்கிக் கொண்டிருந்த மக்கள் பதற்றத்தில் எழுந்தனர்.
இந்தநிலையில், நேற்று அதிகாலை வாழப்பாடி அருகே உள்ள மேட்டுப்பட்டி என்ற இடத்தில் தனியாருக்குச் சொந்தமான தோட்டத்தைக் கடந்து சென்ற மக்கள், தோட்டத்தில் இருந்த குளத்திலிருந்து நீர் பொங்கி வெளியில் பாய்வதைக் கண்டனர்.
உடனடியாக இது குறித்து வாழப்பாடி தாசில்தார் சுந்தரிக்குத் தகவல் தெரிவித்தனர். தாசில்தார் மற்றும் அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று பார்த்தனர்.
அப்போது முதல்நாள் பெய்த மழையின் போது இடி ஒன்று நிலத்தை துளைத்ததும், அதனால், நீர் ஊற்று பொங்கிக் கொண்டிருப்பதும் தெரியவந்தது. உடனடியாக அங்கு தேங்கிய நீர் அருகில் உள்ள நீர் நிலைகளுக்கு திருப்பப்பட்டது. இது குறித்து மேட்டுப்பட்டி பகுதி மக்கள் கூறுகையில்,
"குறித்த பகுதியில் நிலத்தடி நீர் 400 அடிக்கும் கீழ் சென்று விட்டது.
இந்த நிலையில், இடி தாக்கியதில் நிலத்தில் இருந்து நீர் ஊற்று பொங்கிக் கொண்டு வருகிறது - என்றனர். (வ)

## செயற்கை பவளப் பாறையை உருவாக்க கப்பல் மூழ்கடிப்பு



டென்மார்க், ஒக்.11

கடலுக்கு அடியில் செயற்கைப் பவளப் பாறைகளை உருவாக்கும் முயற்சியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். டென்மார்க்கின் ஏரோசூன் கடல் பகுதியில் 55 மீற்றர் நீளம், 13 மீற்றர் உயரம், 9 மீற்றர் அகலம் கொண்ட கப்பல் ஒன்று மணலால் நிரப்பப்பட்டு மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கப்பல் மூழ்கும் காட்சிகள், சுமார் 600 மீற்றர் தொலைவில் உள்ள 15 கமராக்களில் பதிவாகியுள்ளது.

மேலும் இதைப் பார்க்க ஏராளமான பார்வையாளர்கள் குவிந்திருந்தனர்.

இதுகுறித்து ஆராய்ச்சி யாளர்கள் கூறுகையில், மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் பூசப்பட்டிருந்த சாயம் மற்றும் எண்ணெய் முற்றிலும் அகற்றப்பட்டது என்றும், கடல் சார்ந்த படிப்புகளை கற்கும் மாணவர்கள் செயற்கைப் பவளப் பாறைகளை பற்றி ஆராய்ச்சி செய்ய மூழ்கடிக்கப்பட்ட இந்தக் கப்பல் உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)



டச்சுக்கால ஓவியர் வின்செண்ட் வான்கோவின் 125 ஆவது ஆண்டு நினைவு தினம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் கொண்டாடப்படவுள்ளது. அதனை முன்னிட்டு நெதர்லாந்திலுள்ள மலர்த் தோட்டம் ஒன்றில் அவரது உருவ வடிவிலான மலர்கள் வளர்க்கப்படுகின்றன. (வ)


# யேமனில் 70 பேர் உடல் சிதறிச் சாவு

## மனித வெடிகுண்டுத் தாக்குதல்களில்

சனா, ஒக்.11

யேமனில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இரு மனித வெடிகுண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 70 பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக யேமன் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

முதலாவது குண்டுத் தாக்குதல் தலைநகர் சனாவில் கூடியிருந்த ஷைட்டி முஸ்லிம்களின் ஹௌத்தி சிறுபான்மைக் கிளர்ச்சியாளர்களையும் 2 ஆவது தாக்குதல் தெற்கே இராணுவ காவல் நிலையத்தையும் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.



தலைநகர் சனாவிலுள்ள டஹ்ரிர் சதுக்கத்தில் புரட்சியில் ஈடுபட ஆயத்தமான ஹௌத்துக்கள் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 47 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்ததாகவும் அதில் புரட்சியில் பங்கேற்ற 8 சிறுவர்களும் அடங்குவதுடன் 75 பேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் யேமன் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது கடந்த மாதம் யேமனின் தலைநகர் சனாவை ஹௌத்துக்கள் கைப்பற்றிய தில் இருந்து உருவான அர சியல் பதற்ற நிலையினதும் குழப்பத்தினதும் உச்சக் கட்டம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த தாக்குதல் ஹடர்மௌட் மாகாணத்திலுள்ள தெற்கு துறைமுக நகரமான முக்கல்லா இல் பாதுகாப்புப் படை முகாம் மீது மனித வெடிகுண்டுகளுடன் காரைச் செலுத்தி வெடிக்க வைக்கப்பட்டது. இதில் 20 படையினர் உயிரிழந்ததுடன் 15 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

ஹடர்மௌட், யேமனில் இயங்கி வரும் அல்கொய்தா பிரிவினர் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய மாகாணமாகும்.

இந்தநிலையில் இவ்விரு மனித வெடிகுண்டுத் தாக்குதல்களுக்குமே எந்த ஒரு இயக்கமும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. எனினும் யேமனில் தொடர்ச்சியாக இராணுவத்தினர், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச அலுவலகங் களைக் குறி வைத்து மனித வெடி குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் அல்கொய்தா கிளை இதற்கும் பின்னணியில் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.

கடந்தவாரம் இந்த அல்கொய்தா கிளை ஹௌத்திகளுக்கு எதிரான சண்டையை ஆரம்பிக்கப் போவதாக எச்சரித்திருந்ததுடன் இதற்குக் கைகோர்க்க சுன்னி பிரிவினரை ஒன்று சேர்ந்து வருமாறு அழைப்பும் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த மனிதவடி குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் நேற்று முன்தினம் மாலை சுமார் 4000 ஹௌத்திக்கள் ஜனாதிபதி ஹாடியைப் பதவி விலகும் வகையிலான கோரிக்கையுடன் அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியாவுக்கு எதிரான பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண் டனர். (வ)



### இலக்கியத்துக்கான நோபல் பரிசு பிரான்ஸ் எழுத்தாளருக்கு

ஸ்டாக்ஹோம், ஒக்.11

இலக்கியத்துக்கான இந்த வருடத்து நோபல் பரிசு மோடியானோ என்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புதின ஆசிரியருக்கு வழங்கப்படவுள்ளது.

69 வயதான பேட்ரிக் மோடியானோ, பிரெஞ்ச், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் 30 இற்கும்மேற்பட்ட நூல்களைப்படைத்துள்ளார். இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெறும் பிரான்ஸைச் சேர்ந்த 11 ஆவது எழுத்தாளர் பேட்ரிக் மோடியானோ என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் நாஜிப் படையினர் ஆக்கிரமிப்புக் காலத்து வாழ்க்கையைத் தனது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், கடைக்கோடி மனிதனின் மன உணர்வுகளை புதினமாக்கியதால் புகழ் பெற்றவர் பேட்ரிக் மோடியானோ என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### இந்தோனேஷியாவில் கப்பல் கவிழ்ந்து 17 பேர் சாவு

ஜகார்த்தா, ஒக்.11

இந்தோனேஷியாவில் கப்பலொன்று கடலில் கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். 24 பேரைக் காணவில்லை.

கிழக்கு ஜாவா மாகாணத்துக்கு உட்பட்ட ஸ்டுப்பான்ட்டோ என்ற இடத்தில் ஜபல்நூர் என்ற சிறிய வகை கப்பலில் திருமணத்துக்காக மாப்பிள்ளை வீட்டார் நேற்று முன்தினம் பாலித்தீவுக்குச் சென்று கொண்டிருந்தனர். கப்பலில் மொத்தம் 49 பேர் இருந்தனர்.

அப்போது திடீரென கப்பல் என்ஜின் மற்றும் நீர்க் குழாயில் பழுது ஏற்பட்டு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் 17 பேர் உயிரிழந்தனர். 24 பேரைக் காணவில்லை. கப்பல் கப்டன் உள்ளிட்ட 8 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணியில் வீரர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (வ)

### கொலம்பியாவில் மண்சரிவு 6 பேர் பரிதாபச் சாவு



சியர்ரா நெவடா, ஒக்.11

கொலம்பியாவின், சியர்ரா நெவடா பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் பெய்த கன மழை காரணமாக திடீர் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதில், அந்தப் பகுதியில் இருந்த ஒரு வீடு முழுமையாக மண்ணில் புதைந்துள்ளது. அப்போது, அந்த வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 5 குழந்தைகள் உட்பட 6 பேர் உயிருடன் மண்ணில் புதையுண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும், கனமழை காரணமாக அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள மண் சரிவு மற்றும் மழையால் பாதிக்கப்பட்டவர்களை ராணுவத்தினர் மீட்டு வருகின்றனர். இரண்டு நாள்களுக்கு முன்பு தான் இதே பகுதியில் மின்னல் தாக்கி 11 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# எபோலா அபாயத்தால் தேர்தல் ஒத்திவைப்பு

லைபீரியா, ஒக்.11

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் விரைவாகவும் ஏனைய நாடுகளில் மெதுவாகவும் பரவி வரும் எபோலா ஆட் கொல்லி வைரஸால் உயிரிழப்புக்கள் அதிகரித்து வரும் நிலையில் எபோலாவால் அதிகமானோர் தாக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான லைபீரியாவில்நாடுமுழுவதும்நடைபெறவிருந்த செனட் சபைக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த முதலாவது எபோலா நோயாளியான 42 வயதுடைய தோமஸ் துங்கன் சிகிச்சைப் பயனின்றி சமீபத்தில் இறந்துள்ளார்.

மேலும் ஸ்பெயினில் எபோலா தாக்கியிருந்த மருத்துவ தாதியின் உதவியாளரினது உடல் நிலைமையும் மிக மோசமாகியுள்ளது என்று அவரைப் பரிசோதித்த மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்களால் அமெரிக்கா மற்றும் ஸ்பானிய விமான நிலையங்களில் பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமடைந்துள்ளன. நிகழ்கால உலகின் மிகவலிமையான ஆட்கொல்லி நோய்த் தொற் றான எபோலா இதுவரை 3800 உயிர்களை காவு கொண்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

தற்போது இந்த நோய் வேகமாகப் பரவி வரும் நாடுகளாக கினியா, லிபேரியா, நைஜீரியா, செனெகல், சியாரோலியோன் மற்றும் அமெரிக்கா ஆகியவை விளங்குகின்றன.

இந்த நாடுகளில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்கள் பலருக்கும் கூட எபோலா தொற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எபோலா மிக வேகமாக இனிவரும் இரு ஆண்டுகளுக்கு ஆபிரிக்காவின் மிகப்பெரிய தேசங்களுக்கும் பரவினால் அதைக் கட்டுக்குக் கொண்டுவர 32 பில்லியன் டொலர் செலவாகும் என்று உலக வங்கி அறிவித்துள்ளது. (வ)

## ஆஸ்திரேலிய தாதிக்கும் எபோலா நோய்த் தாக்கம்



ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தாதி ஒருவருவரும் எபோலா நோய்த் தாக்கத்துள்ளாகியுள்ளார். 37 வயதாகும் சுயூ இலின் கோவக் எபோலா நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ள சியரோலியோன் நாட்டில் தாதியாகப் பணிபுரிந்து வந்தார். ஒரு மாதம் தான் அங்கு பணி புரிந்தார் . கடந்த செவ்வாய்க் கிழமை தனது சொந்த நாட்டுக்குத் திரும்பினார்.

தற்போது எபோலா நோய் அச்சம் ஆஸ்திரேலியாவையும் தொற்றிக் கொண்டுள்ளது. இலின் கோவிக் செவ்வாய்க் கிழமை முதல் காய்ச்சலால் உடல் நலம் குன்றி உள்ளார். அதைத் தொடர்ந்து அவர் சிகிச்சைக்குச் சென்றுள்ளார். அவரது இரத்தம் எபோலா நோய் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கபட்டு உள்ளது.

இதுகுறித்து மருத்துவ மனையின் தலைமை மருத்துவர் ஜினேட் எங் கூறும்போது "நாம் சிகிச்சை அளித்து வருகிறோம். இது எவ்வாறு சாத்தியம் என்று தெரியவில்லை. அவர் சியரோ லியோன் நாட்டில் எபோலா நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்துள்ளார்" என்று கூறினார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: கல்வியில் புதிய மாற்றம் உருவாகும். வாகனங்களைப் பயன்படுத்தும்போது மிகவும் கவனம் தேவை. செய்யும் உத்தியோகத்தில் இடமாற்றமோ அல்லது பணி நிரந்தரமோ ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**இடபம்**: அவ்வப்போது சின்னச் சின்ன வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும் மிகவும் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். வெளியிடங்களில் எதிர்ப்புகள் அதிகமாக இருக்கும். முக்கிய நபர்களால் பல பாதிப்புகள் ஏற்பட்டாலும், பணத்துக்குப் பற்றாக்குறை ஏற்படாது.

**மிதுனம்**:விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனக்கிலேசம் வரலாம். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

**கடகம்**: தொழிலில் சிக்கல்கள் உருவாகாது என்றாலும் சில வாக்குவாதங்கள் இருக்கும்.,எதிலும் அளவேரடு ஈடுபட்டு வந்தால் தொல்லைகள் இருக்காது. அடுத்தவர்களுடைய விவகாரங்களில் வீணாகத் தலையிட வேண்டாம்.

**சிங்கம்**:பொதுவாக அன்றாடப் பணிகளைக் கவனித்துக் கொண்டு மிகவும் நிதானமாக இருக்க வேண்டிய நாள். பெரியோர் சொல்படி நடந்து கொண்டால் தொல்லைகளைத் தவிர்க்கலாம். பலவிதமான சூழ்நிலைகளில் உங்களுடைய சாதுரியத்தால் சமாளிப்பீர்கள்.

**கன்னி**: எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் சச்சரவுகளை நீக்கலாம். ஆசையைக் குறைத்துக் கொண்டு அன்றாடப் பணிகளை சரிவர செய்து வந்தாலே நல்லவிதமான அனுகூலங்கள் உங்களை வந்து சேரும்.

**துலாம்**: திட்டமிடாமல் பணிகளை ஆரம்பிப்பதால் அவதி நிச்சயம் ஏற்படும். ஆனாலும் தேவைக்கேற்ற பணவரவு உங்களை வந்து சேரும். பகைவர்கள் உங்களுக்கு பணியக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும்.

**விருச்சிகம்**: அடுத்தவர் நலனில் கூடுதல் அக்கறையுடன் செயற்படுவீர்கள். நண்பரின் கவனக்குறைவைச் சரிசெய்வீர்கள். தொழில், வியாபார தொடர்பு பலம் பெறும். நீண்டநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**தனுசு**: நன்மைகளை அனுபவம் மூலமாக கிடைக்கப் பெறுவீர்கள். உறவினரால் ஒரு தொல்லை ஏற்படலாம். மேலதிகாரிகளில் கண்டிப்புக்கு ஆளாக நேரிடலாம். கலைத்துறை சுறுசுறுப்பாக அமையும். தாம்பத்தியம் சகஜநிலையில் இருந்து வரும்.

**மகரம்**: பொருளாதாரச் சங்கடங்கள் உருவாகாது. அன்றாடப் பணிகள் சரிவர நடைபெறும். உற்சாகத்துடன் இந்த நாளைக் கழிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் இடர் ஏற்பட இடமுண்டாததால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**கும்பம்**: பொதுவாக நற்பலன்கள் கூடுதலாகக் கிடைக்கும். எதிலும் சிறிதளவு ஆதாயம் ஏற்படும். முன்விரோதம் காரணமாக சில சங்கடங்கள் உருவாகலாம், என்றாலும் அவற்றைச் சமாளிக்கும் வழிகள் உங்களுக்குப் புலப்படும்.

**மீனம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு மரியாதை சிறப்படையும். செல்வாக்கு ஓங்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தம்பதிகளிடையே அன்பு மேலோங்கும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும்.

## நாளை

**புரட்டாதி-26 ஞாயிற்றுக்கிழமை | 12.10.2014**

திதி: சதுர்த்தி பி.ப.12.53 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மு.ப.08.27 வரை

சுபநேரம்:09.02-10.32 வரை
இராகுகாலம்:04.32-09.02 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## மனத்தின் ஆற்றல்



மனத்தைப் புறப்பொருள்களின்மீது குவிப்பது எளிது. இயல்பாகவே மனம் வெளிநோக்குக்கொண்டது.ஆனால் மத ஆராய்ச்சி, மன இயல், தத்துவம் இவற்றில் அவ்வாறு இல்லை. ஏனெனில் இங்கே அறிபவனும் அறியப்படும் பொருளும் ஒன்றே. அறியப்படும் பொருளான மனம் உள்ளே இருக்கிறது. இந்த மனத்தை ஆராயவும் மனம்தான் வேண்டும். மனமே மனத்தை ஆராய்கிறது. மனத்துக்குத் தம்மையே நோக்கும் தன்மை உண்டு என்பது எமக்குத் தெரியும் நான் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்.அதேவேளையில்ஏதோ ஓர் இரண்டாம் மனிதனைப் போல் தனியாக நின்று, நான் பேசுவதை அறியவும் கேட்கவும் செய்கிறேன். ஒரே நேரத்தில் நீங்கள் வேலை செய்யவும் சிந்திக்கவும் செய்கிறீர்கள். அப்போது மனத்தின் ஒரு பகுதி விலகி நின்று நீங்கள் சிந்திப்பதை நோக்குகிறது. மனத்தின் ஆற்றல்களைக் குவித்து அதன் மீதே திருப்பவேண்டும். அப்போது எவ்வாறு கதிரவனின் கதிர்களின் முன்னால் காரிருள் தன் ரகசியங்களை வெளிப்படுத்துகிறதோ, அவ்வாறு இந்த ஒருமுகப்பட்ட மனமும் தனது ஆழங்களிலுள்ள ரகசியங்களில் ஊடுருவிச் செல்கிறது. இவ்வாறு நாம் நம்பிக்கையின் அத்திபாரத்துக்கு, உண்மையான, சரியான மதவுணர்வுக்கு வருகிறோம். நமக்கு ஆன்மா உண்டா, இல்லையா? வாழ்வு என்பது ஐந்து நிமிடத்திற்கா அல்லது என்றென்றைக்குமா? பிரபஞ்சத்தில் ஒரு கடவுள் இருக்கிறாரா, இல்லையா? என்பவற்றையெல்லாம் எமக்கு நாமே உணர்ந்துகொள்வோம். அவையெல்லாம் நமக்கு வெளிப்படுத்தப்படும். இதைக் கற்பிக்கிறது ராஜயோகம். எப்படி மனத்தை ஒருமைப்படுத்துவது, எமது சொந்த மனங்களின் அடியாழத்திலுள்ள அறைகளை எப்படிக் கண்டுபிடிப்பது, பிறகு அங்குள்ள எண்ணத்திரள்களைப் பொதுமைப்படுத்தி அவற்றிலிருந்து எப்படி எமக்கென்று முடிவுகளைக் காண்பது என்பவற்றைக் கற்பிப்பதே ராஜயோகத்தின் நோக்கம். ஆதலால் அது எமது மதத்தைப் பற்றியோ, நாம் ஆத்திகர்களா, நாத்திகர்களா, கிறிஸ்தவர்களா, யூதர்களா, பௌத்தர்களா என்றெல்லாம் கேட்பதில்லை. நாம் மானிடர், அது போதும், மதத்தைத் தேடும் உரிமையும் ஆற்றலும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. காரணம் என்ன என்று கேட்கும் உரிமையும், விடையைத் தானே கண்டுபிடிக்கும் உரிமையும்சகலருக்கும்உண்டு. ஆனால் அதற்காக சிறிது பாடுபட வேண்டும்.

# ரோபோ மரம் உருவாக்கம்



ஐரோப்பியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ரோபோ மரத்தை உருவாக்கிச் சாதித்துள்ளனர்.

இதுவரை காலமும் விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட ரோபோக்களே உருவாக்கப்பட்டு வந்த நிலையில் இந்த மர ரோபோக்களின் உருவாக்கம் தொழில்நுட்ப உலகில் உற்றுநோக்கப்படுகின்றது. PLANTOID எனப்படும் இந்த ரோபோக்களின் கிளைகள் பிளாஸ்டிக்கால் உருவாக்கப்பட்டுள்ள அதே வேளை இலைகள் சென்சார்களை கொண்டுள்ளன. இதன்மூலம் வெப்பநிலை, ஈரப்பதம், ஈர்ப்புவிசை, தொகை மற்றும் இரசாயனப் பதார்த்தங்களின் அளவை மதிப்பிட முடிகிறது.

மேலும் இந்த ரோபோ மரத்தில் இரண்டு வேர்கள் இணைக்கப்பட்டுள்ளன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | 3 | |
| 3 | 8 | 2 | 1 | 7 | 6 | | | |
| 9 | 7 | | 3 | | 4 | 2 | | |
| | | | 8 | | | | | 2 |
| | 6 | 8 | 5 | | 7 | 4 | 1 | |
| 5 | | | | | 2 | | | |
| | | 7 | 4 | | 3 | | 9 | 8 |
| | | | 7 | 8 | 9 | 6 | 2 | 5 |
| | 2 | | | | | | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 5 | 1 | 7 | 4 | 2 | 3 | 9 |
| 9 | 7 | 2 | 3 | 5 | 8 | 6 | 1 | 4 |
| 3 | 4 | 1 | 2 | 6 | 9 | 5 | 8 | 7 |
| 6 | 8 | 7 | 9 | 3 | 5 | 4 | 2 | 1 |
| 5 | 2 | 3 | 7 | 4 | 1 | 9 | 6 | 8 |
| 4 | 1 | 9 | 8 | 2 | 6 | 3 | 7 | 5 |
| 7 | 9 | 6 | 4 | 8 | 3 | 1 | 5 | 2 |
| 1 | 5 | 8 | 6 | 9 | 2 | 7 | 4 | 3 |
| 2 | 3 | 4 | 5 | 1 | 7 | 8 | 9 | 6 |

# பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை சம்பியன்





பத்து தண்டனை அடிகளை அடித்து மூன்று கோல்களை பெற்றுக் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை யாழ் மாவட்ட பாடசாலைகளின் ஹொக்கிச் சங்கம் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே நடத்திய போட்டியில் அமரர் ரி.பி.பத்மநாதன் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ் மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் விளையாட்டு அவையின் ஆதரவுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்திய பெண்களுக்கான ஹொக்கி இறுதிப் போட்டியில் நேற்று வெள்ளிக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரியும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும் நேரம் வரை கடுமையாகப் போராடிய இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாததனால் போட்டி சம நிலை யில் முடிவடைந்தது. வெற்றியாளரைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட தண்டனை அடிகள் முதல் ஐந்திலும் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களை பெற்ற நிலையில், தொடர்ந்து பத்து அடிகள் வரை வழங்கப்பட்டது. பத்தாவது அடியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை கோல் அடித்து வெற்றி பெற்றதுடன் வெற்றிக் கிண்ணத்தையும்பெற்றுக்கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகியாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த என்.ரஜீனா தெரிவு செய்யப்பட்டார். வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை முன்னாள் ஹொக்கிச் சங்கத்தலைவரும் ஹொக்கி விளையாட்டு வீரரும் ஆசிரியருமான துஸ்யந்தன் வழங்கி கௌரவித்தார். (ரி- 86)



## யூனியனை வென்றது றோயல்

யாழ்ப்பாணம்.ஒக்.11

ஆனைக்கோட்டை யூனியன் அணியை கோல் எதுவும் அடிக்க விடாது அதனை தோற்கடித்தது ஊரெழு றோயல்.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை; வழிகாட்டல் வகுப்புக்கள்

கரணவாய்.ஒக்.11

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்படும் தொழில்நுட்ப அலுவலர் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் தரம் 3,4 இற்கான பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளன. இவற்றுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள். துறைசார்ந்த வளவாளர்களால் நடத்தப்படவுள்ளன. குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தவர்களை இப்பயிற்சி வகுப்புக்களில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத் தலைவர் எம். இளம்பிறையன் கேட்டுள்ளார். (ரி- 108)

# பிரியந்தனின் கோல்களால் நவஜீவன்ஸ் வெற்றி



கரணவாய். ஒக்.11

முதற்பாதி ஆட்டத்தில் பிரியந்தன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு அசத்த 2:0 என்ற கோல்கணக்கில் எதிரணியை வீழ்த்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் லீக் முறையிலான ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் அசத்தலாக ஆரம்பமான இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் சம பலத்துடன் களமிறங்கியதால் மைதானத்தில் விறுவிறுப்பும் பரபரப்புக்கும் குறைவில்லாமல் ஆட்டம் இடம்பெற்றது. இந்த சூழ்நிலையில் முதற்பாதி ஆட்டத்தில் 6 ஆவது மற்றும் 25 ஆவது நிமிடங்களில் நவஜீவன்ஸ் அணியின் முன்னணி வீரர் பிரியந்தன் 2 கோல்கள் போட நவஜீவன்ஸ் அணியினர் உசார் அடைந்தனர். நவஜீவன்ஸ் அணி 2:0 என்ற நிலையில் முன்னிலை பெற்றிருந்த ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணியினரும் தமது அணி சார்பாக சில மாற்றங்களை மேற்கொண்டு மோதினர். இதனால் பிற்பாதியாட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியினர் தடுப்பாட்ட உத்திகளைக் கையாண்டதுடன் தாம் கோல் போடும் முயற்சியில் முன்னேறியும் தாக்கினர். ஆனால் அவர்களது முயற்சி நவஜீவன்ஸ் அணியின் கோல்காப்பாளரின் அபார செயற்பாட்டாலும் பின்கள வீரர்களின் துரித செயற்திறனினாலும் தவிடு பொடியாக 2:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. (ரி- 108)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.11

தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான ஆட்டங்கள் தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாகர்கோவில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23-108)

★ ★ ★

கரணவாய்.ஒக்.11

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் லீக் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. (ரி- 108)


★ ★ ★

கரணவாய்.ஒக்.11

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில், பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 4.30 மணிக்கு சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இளைஞர் அணிகள் வெற்றி



கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 8 பேர் பங்குபற்றும் 8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றியீட்டியுள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் இந்திரா விளையாட்டுக்கழகமும்மோதின. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் 7 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பாக சசிகரன் 24 ஓட்டங்களையும், சிறி 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிரதீஸ் 3 இலக்குகளையும் பானு, பருதி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

63 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இளைஞர் அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அவ்வணி சார்பாக சிவகாந்தன் 19 ஓட்டங்களையும், பிரதீஸ் 12 ஓட்டங்களையும், பானு 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் றஞ்சித், கிருபா, சகித் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கை கைப்பற்றினர்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி வெக்ரர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி வெக்ரர் விளையாட்டுக்கழகம் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாகக் கோகுலன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சைமன்ஸ், மணாளன், புவி ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.

அடுத்து 78 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை எட்டினர். அவ்வணி சார்பாக சதீஸ் 14 ஓட்டங்களையும்நிரோஜ்16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முரளி 3 இலக்குகளையும்கோகுலன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ரி- 108)

# பீற்றர்சனை பாழாக்கிய ஐ.பி.எல்

இங்கிலாந்து அணியின் அதிரடி வீரரான பீற்றர்சனை ஐ.பி.எல். தொடர் பாழாக்கி விட்டதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் நாசர் உசேன் தெரிவித்துள்ளார்.



ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி 0:5 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவிடம் படுதோல்வி அடைந்தது. இதனால் அந்த அணி மீது கடும் விமர்சனங்கள் பாய்ந்தன. அத்துடன் அந்த தோல்விக்கு பலிக்கடவாக அந்த அணியின் நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன் அணியிலிருந்து நீக்கப்பட்டார். இங்கிலாந்து அணி தேர்வுக்குழுவில் அவரது பெயர் பரிசீலிக்கப்படவில்லை. அதன்பின் சர்வதேச கிரிக்கெட்டில் அவர் ஓய்வு பெற்றதுடன் ஐ.பி.எல். தொடரில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியில் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் சுயசரிதை புத்தகம் எழுதும் பீற்றர்சன் அதில் பயிற்சியாளராக இருந்த ஆன்டி பிளவர், இலக்குக்காப்பாளர் பிரையர், அணித்தலைவர் குக் ஆகியோர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில் கருத்து தெரிவித்துள்ள நாசர் உசேன் கூறுகையில், பீற்றர்சனை ஐ.பி.எல். பாழாக்கி விட்டது. பயிற்சியாளர் ஆன்டி பிளவர் வீரர்கள் மற்றும் பீற்றர்சனை நல்ல முறையில் தான் நடத்தினார். ஆனால் பீற்றர்சன் ஐ.பி.எல். போட்டிக்கு பிறகு மாறிவிட்டார். அணியை விட ஐ.பி.எல். போட்டி பெரியது என்று நினைத்து விட்டார். ஐ.பி.எல் போட்டியில் தான் அதிக பணம் சம்பாதிப்பதால் வீரர்கள் தன் மீது பொறமைப் படுகிறார்கள் என்று நினைத்து இருந்தார். அணியைவிட தான் பெரியவன் என்று நினைப்பு வந்துவிட்டது. இது தான் அணியில் பிரச்சினையை ஏற்படுத்தி விட்டது. அணியில் உள்ள எல்லோருடனும் அவர் சகஜமாக இல்லை. என்றாவது ஒருநாள் பீற்றர்சன் தனது தவறுக்கு வருந்தலாம் இவ்வாறு அவர் கூறினார். (ரி)

# மெஸ்ஸியான மஹேல



இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் ஜெயவர்த்தன கால்பந்து விளையாட்டிலும் திறமையான வீரராக இருப்பதாகவும், அவரது ஆட்டம் மெஸ்ஸியின் ஆட்டத்தைப் போல் உள்ளதாகவும் ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் வரலாற்றில் பல சாதனைகள் புரிந்த ஜெயவர்த்தன, சமீபத்தில் நடந்து முடிந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரோடு டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றார். இதனையடுத்து ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க நினைத்த அவர் கால்பந்து விளையாட்டில் தடம் பதித்துள்ளார். அண்மையில் மருதானை சாஹிரா கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் சாஹிரா அணிக்கும், நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் உள்ளடங்கிய நட்சத்திர அணிக்கும் இடையிலான கால்பந்து போட்டி நடைபெற்றது.

இதில் சமிந்த வாஸ், சம்பக ராமநாயக்க, உபுல் சந்தன மற்றும் கிரேம் லப்ரூய் மற்றும் ஜெயவர்த்தன ஆகியோரைக் கொண்ட நட்சத்திர அணி களமிறங்கியது. இதில் விளையாடிய ஜெயவர்த்தனவின் ஆட்டம், ஆர்ஜென்ரினா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸியின் ஆட்டத்திற்கு ஒப்பனதாக இருந்ததாக ரசிகர்கள் புகழ்ந்துள்ளனர். போட்டியில் ஜெயவர்த்தன அசத்தலாக ஆடி 3 கோல்களை தனது அணி சார்பாக பெற்றதுடன், கிரிக்கெட் வீரர்களின் அணி சாஹிரா அணிக்கு எதிராக 6 கோல்களை போட்டு வெற்றி பெற்றது. (ரி)

# நரைன் விடயத்தில் சதி

சுனில் நரைன் பந்துவீச தண்ட விதிக்கப்பட்ட விடயத்தில் சதி இருப்பதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர்களான கிளைவ் லாய்டு மற்றும் ரிச்சர்ட்சன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மேற்கிந்திய சுழற்பந்து வீரர் சுனில் நரைன் சம்பியன் லீக் கிரிக்கெட்டில் கொல்கத்தா அணிக்காக விளையாடினார். அந்தத் தொடரில் அவரது பந்து வீச்சு குறித்து நடுவர்கள் சந்தேகம் எழுப்பினர். அதனையடுத்து அவருக்கு இறுதியாட்டத்தில் விளையாட தடை விதிக்கப்பட்டது. அத்துடன் அவரை இந்திய சுற்றுப் பயணத்தில் இருந்து விலகி நாடு திரும்பும் படி அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்தது.



இந்த நிலையில் சுனில் நரைன் விவகாரத்தில் சதி இருப்பதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் ஜாம்பவான் கிளைவ் லாய்டு கருத்து தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது, சுனில் நரைன் பல ஆண்டுகளாக இதுபோன்று தான் பந்து வீசி வருகிறார். ஆனால் திடீரென்று தடை விதிப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் ஒரே மாதிரிதான் பந்து வீசுகிறார். அதில் என்ன மாற்றத்தை கண்டுபிடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அவர்களது முடிவில் எனக்கு சந்தேகம் இருக்கிறது என்று கூறினார். இதே கருத்தை முன்னாள் மேற்கிந்தியா தீவுகள் அணி வீரர் ரிச்சர்ட்சனும் தெரிவித்து உள்ளார். (ரி)

# சேவாக் வரவை எதிர்பார்க்கும் ரசிகர்கள்




மோசமான துடுப்பாட்ட நிலைமை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்ட சேவாக் அணிக்கு மீண்டும் திரும்புவதை அவ ரது ரசிகர்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிய வருகிறது. இந்திய அணிக்கு திரும்ப முயற்சிக்கும் வீரர்களில் அதிரடி வீரர் சேவாக் தான் கூகுள் தேடு இயந்திரத்தில் அதிகம் தேடப்பட்ட வீரராக இருக்கிறார் என்று கூகுள் நிறுவனம் கூறியுள்ளது.

இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட சேவாக் தற்போது இந்திய அணியில் இடம்பிடிக்க கடுமையாகப் போராடி வருகிறார். இந்திய அணியில் இருந்து அவர் ஒதுங்கி இருந்தாலும் ரசிகர்களின் ஆதரவு அவருக்கு உள்ளது. இதன் காரணமாக சம்பியன் லீக் மற்றும் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடிய வீரர்களான சேவாக், கம்பீர் ஆகியோர் கூகுளில் கடந்த 30 நாட்களில் அதிகம் தேடப்பட்ட வீரர்களாக உள்ளனர்.

இதுபற்றி கூகுள் நிறுவனம் கூறுகையில், பலரும் சேவாக் அணிக்கு திரும்புவது கடினம் என்று கூறும் நிலையில், அவரது ரசிகர்கள் அவருக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். அவரது ரசிகர்கள் அவர் அணிக்கு மீண்டும் வருவதை விரும்புகின்றனர். அதன் காரணமாகவே அவர் கூகுளில் அதிகம் தேடப்பட்ட வீரராக இருக்கிறார் என்று கூறியுள்ளது. கொல்கத்தா அணியின் அணித்தலைவராக அணியை திறம்பட வழிநடத்தி வரும் கம்பீர் துடுப்பாட்டத்தில் சொதப்பி வந்தாலும், அவரது அணி ஐ.பி.எல் மற்றும் சம்பியன் லீக் தொடர்களில் சிறப்பாக விளையாடியது. இதன் காரணமாக கம்பீரும் அதிகம் தேடப்பட்டவராக இருக்கிறார். மேலும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் அறிமுக வீரராக களமிறங்கி இருக்கும் குல்தீப் யாதவையும் அவரது ரசிகர்கள் கூகுளில் தேடிப் பார்த்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது. (ரி)

# திட்டமிட்டபடி நடக்கும்



இந்தியா மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் திட்டமிட்டபடி நடைபெறும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் சஞ்சய் படேல் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்திய புதிய ஊதிய ஒப்பந்த முறைக்கு அந்த அணி வீரர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். அத்துடன் இந்தியாவுடனான தொடரை புறக்கணிக்கப் போவதாகவும் கூறியிருந்தனர். ஆனால் முதலாவது ஒருநாள் போட்டியில் களமிறங்கி விளையாடினர். இருப்பினும் இந்த பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உரிய நடவடிக்கையில் இறங்குவோம் என அணித்தலைவர் டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார். இதனால் இந்தியா-மேற்கிந்திய தீவுகள் தொடருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுபற்றி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் சஞ்சய் படேல் டில்லியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், இந்தியா மேற்கிந்திய தீவுகள் இடையிலான தொடருக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை. ஆட்டங்கள் திட்டமிட்டபடி நடைபெறும். இது தொடர்பாக மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் சிலருடன் பேசினேன். இந்தத் தொடருக்கு எந்தவித இடையூறும் இருக்காது என்று அவர்கள் உறுதி அளித்துள்ளனர். மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள் நல்லவர்கள். அவர்கள் தங்கள் பணியை நன்கு உணர்ந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்தார். (ரி)

# ஆட்டம் முழுவதிலும் ஆதிக்கம்; சென்.பீற்றர்ஸ், கலைவாணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.11

ஆட்டம் முழுவதிலும் ஆதிக்கம் செலுத்திய பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியும், தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழக அணியும் எதிரணிகளை இலகுவாக வீழ்த்தி வெற்றிபெற்றுள்ளன.

தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான ஆட்டங்கள் தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. முதற் பாதி ஆட்டத்தின் போது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெற கடுமையாக மோதிக் கொண்டனர். இதன் போது ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் மரியசீலன் தனது அணிக்கான முதலாவது கோலையும், 17 ஆவது நிமிடத்தில் நிசாந்தன் தனது அணிக்கான இரண்டாவது கோலையும், 20 ஆவது நிமிடத்தில் அசோக் மூன்றாவது கோலையும் தமது அணி சார்பாக அடித்தனர். பதிலுக்கு மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக எதிர் அணியினரின் கோல்பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆனால் முதற்பாதி ஆட்டம் முடியும் வரை அவர்களால் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. இதனல் முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் முதற்பாதி ஆட்டத்தில் விட்ட தவறுகளைத் திருத்தி இரண்டாம்பாதி ஆட்டத்தில் விளையாடினர். இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழக அணியினர் கோல்கள் பெறுவதற்கான முயற்சிகளில் கடும் பிரயத்தனத்துடன் விளையாடினர். இதன்போது பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் நிசாந்தன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் தனது அணிக்கான நான்காவது கோலையும், மரியசீலன் ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான ஐந்தாவது கோலையும் அடித்தனர். கடுமையான போராட்டத்தின் பயனாக 13 ஆவது நிமிடத்தில் கணேசானந்தா விளையாட்டுக்கழக வீரர் சசிகாந் தனக்கு கிடைத்த பந்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். மேலதிகமாக இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் ஆட்ட நேர முடிவின் போது பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக்கழக அணியும், வத்திராயன் மத்தி விளையாட்டுக்கழக அணியும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் முதற் பாதி ஆட்டம் இடைவேளை வரை மிக விறுவிறுப்பாக இடம் பெற்றது. ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழக அணி வீரர் சசி தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் ஒன் கோல் ஒன்று கிடைக்க, 15ஆவது நிமிடத்தில் நிசாந்தனும், 22 ஆவது நிமிடத்தில் சுஜிவனும் கோல்களை அடிக்க கலைவாணி விளையாட்டுக் கழகம் முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்தியது. இடைவேளை வரை வத்திராயன் மத்தி விளையாட்டுக்கழக அணி சார்பில் கோல்கள் எதுவும் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது. அப்போது தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் தொடர்ந்த ஆட்டத்திலும் கலைவாணி அணியினரே முழுமையாக ஆதிக்கம் செலுத்தினர். இந்த சூழ்நிலையில் இடைவேளையின் பின் 10 ஆவது நிமிடத்தில் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக்கழக அணி வீரர் நிசாந்தனும், 25 ஆவது நிமிடத்தில் சஜீவனும் கோல்களை அடித்தனர். வத்திராயன் மத்தி விளையாட்டுக் கழக அணி சார்பில் ஆட்டம் முடியும் வரை கோல்கள் எதுவுமே பெறப்படாத நிலையில் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ரி- 23-108)

## தொடர்ச்சி

### விடுதலை

வவுனியா நகரசபை முன்றலில் ஆரம்பமான கவனவீர்ப்புப் பேரணி, வவுனியா நீதிமன்ற வளாகம்வரை சென்றது.

முன்னதாக வவுனியா நகரசபை விளையாட்டு மைதானம் முன்பாகக் கூடிய போராட்டக்காரர்கள் தமது வாயைக் கறுப்புத் துணியால் கட்டியபடி - பதாகைகளை கைகளில் ஏந்தியவாறு அமைதியான முறையில் பிரதான வீதியூடாக வவுனியா நீதிமன்று நோக்கி நகர்ந்தனர்.

பிரதான வீதியில் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் தடை ஏற்படுத்தி இந்த மௌனப் பேரணியைத் தடுத்து நிறுத்த முற்பட்ட வேளை நாம் அமைதியான முறையில்கவனவீர்ப்புப்போராட்டத்தை முன்னெடுக்கிறோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டோர் பொலிஸாருக்குத் தெளிவுபடுத்தினர். இதனையடுத்து அவர்களை நீதிமன்ற வளாகம் வரை செல்வதற்கு பொலிஸார் அனுமதித்தனர்.

இதனையடுத்து நீதிமன்றத்திற்கு முன்பாகக் கூடியவர்கள் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும், காணாமற்போனோருக்கு பதில் கூறுமாறும், நில ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வலியுறுத்தியும் பதாகைகளை ஏந்தியவாறு அமைதியாக சிறிது நேரம் நின்றனர்.

நீதிக்குப் புறம்பான கைதுகளை கடுமையாகக் கண்டிக்கின்றோம், அரசே எங்கள் தாயை உடன் விடுதலை செய், அரசே தாயையும் மகளையும் பிரிக்காதே, விடுதலை வேண்டும் விடுதலை வேண்டும் ஜெயக்குமாரிக்கு விடுதலை வேண்டும், குற்றச்சாட்டுகள் இன்றி தடுப்புக்காவலில் உள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய், விடுதலை எங்கள் உயிர் மூச்சு; இனி இங்கு வேண்டாம் வீண் பேச்சு, நீதி வேண்டும், நீதி வேண்டும், அரசியல் கைதிகளுக்கு நீதி வேண்டும், காணாமற்போனோருக்கு என்ன நடந்தது? அரசே பதில் சொல், காணாமற்போவதற்கு தமிழர் என்ன விலங்குகளா?, சரணடைந்தவர்கள் என்ன பலி ஆடுகளா காணாமற்போகச் செய்வதற்கு?, சர்வதேச விசாரணை எமக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும், போடாதே போடாதே பொய் வழக்குப் போடாதே, எமது வாழ்வு எமது கையில்; அந்நியர்க்கு இங்கு இடமில்லை, பறிக்கப்பட்ட மண்ணும் உரிமையும் எமக்கு வேண்டும், மஹிந்த அரசே நாம் மௌனமாக இருக்கின்றோம் என்பதற்காக செத்து விட்டோம் என்று நினைக்காதே, பாசிச அரசே உன் ஆட்சியில் நீதி, நியாயம் என்று ஏதும் உண்டா? பதில் கூறு போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் இதன் போது கைகளில் ஏந்தியிருந்தனர்.

அவர்கள் பின்னர் அங்கிருந்து மீண்டும் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானம்வரை பேரணியாகச் சென்று அங்கு பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோதராதலிங்கம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான து.ரவிகரன், எஸ்.சிவமோகன், இ.இந்திரராஜா, ம.தியாகராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சு.விஜயகாந்த், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் பிரஜைகள் குழு பிரதிநிதிகள், தென்னிலங்கை மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், கல்விச் சமூகத்தினர், அரசியல் கைதிகள் மற்றும் காணாமற்போனோரின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்த அதன் தலைவர் கிருஷ்ணபிள்ளை தேவராஜா கடந்த புதன்கிழமை இரவு நெடுங்கேணி பிரதான இராணுவ முகாமுக்கு அண்மையில் வைத்து இனந்தெரியாத நபர்கள் நால்வரால் கொடூரமாகத் தாக்கப்பட்டிருந்தார். இதில் படுகாயமடைந்த அவர் வவுனியாவில் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்நிலையிலும், இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் திட்டமிட்டபடி நேற்று நடைபெற்றுள்ளது.

(ற-402,401)

### பனை

"தற்போது பனை மரங்கள் கேட்பாரின்றி தான்தோன்றித் தனமாகத் தறிக்கப்பட்டு வருகின்றன. சிலர் வியாபார நோக்கத்துக்காக அனுமதி பெற்றும் பனைகளைத் தறித்து வருகின்றனர். இது தொடர்ந்தால் பனை வளம் வரும் காலத்தில் மிக மிக குறைவடைந்து அருகிச் செல்லும் நிலை காணப்படுகின்றது. எனவேதான் பனை மரங்களை தறிப்பதை உடனடியாக தடை செய்ய வேண்டும் என்று சபை தீர்மானித்துள்ளது."- என்று தெரிவித்தார்.

இந்தத் தடை உத்தரவின் பிரகாரம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் பனை அபிவிருத்தி சபை மற்றும் பிரதேச செயலாளர்களின் அனுமதி பெறப்படாது சட்ட விரோதமாக பனை தறிப்பவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். அதேவேளை, பனைகளை தறிப்பதை முழுமையாகத் தடை செய்வதற்கு அமைச்சரவைக்கான பத்திரம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(ற-17)

### ஜனாதிபதி

பாடுகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்டுள்ள வரையறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவால் பின்பற்றப்படும் முறைமைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு, பரணகம விளக்கமாக விவரித்தார். காணாமற்போனோரின் இரத்த உறவினர்களிடமிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவும் முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது என்று பரணகமவிடம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் தொடர்பாக தங்களிடம் உள்ள தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு இணைந்து செயற்படவும் மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் போனோர் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்."- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

### டெங்கு

தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் யுவதியே தற்போது யாழ்.போதனா வைத்தியசாலை, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு 15 நாள்களுக்கு முன்னர் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து இருதடவைகள் அவர் விடுமுறைக்காக விண்ணப்பித்துள்ளார். ஆனால் நிர்வாகம் அவருக்கு விடுமுறை வழங்க மறுத்துள்ளது. அதனால் அவர் காய்ச்சலுடன் பணிக்குச் சென் றுள்ளார். பின்னர் காய்ச்ச லின் தாக்கம் அதிகரித்து இரத்த வாந்தி எடுக்க ஆரம்பித்த பின்னரே விடுமுறை வழங்கப்பட்டு, அவசர அவசரமாக அவர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் உடனடியாக அவர் சேர்க்கப்பட்டார். ஆயினும் டெங்கின் தாக்கம் அதிகரித்திருந்ததை அடுத்து அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளார். (ற-9)


உதவிக்கணக்காளர் தேவை (பெண்)

மானிப்பாய் கியூமெடிக்கா ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் உதவிக் கணக்காளராகப் பணியாற்ற AAT/HNDA கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. Humedica International Lanka, Sangarapillai Road, Manipay எனும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக்கோவையை 15.10.2014இற்கு முன்பதாக எமக்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு இலக்கம்:
021 225 5624/077 935 2372
(சி16856) (12.3.6)



நீங்கா நினைவில் வருடங்கள் பதினொன்று...



அன்னை மடியில் 18.09.1962

ஆண்டவன் அடியில் 12.10.2003

அமரர் அப்புக்குட்டி உதயசீலன் (அப்பன்)

திதி: திருதியை

பதினொன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் ஆறிடாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:

கணேஸ்வரம், அளவெட்டி. (C/16862)(10) மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.



அச்செழு, பூலசிட்டி, நீர்வேலி
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

முதலாது பரிசு இல - 419
2 ஆவது பரிசு இல - 446
3 ஆவது பரிசு இல - 3744

10 ஆறுதல் பரிசு இலக்கம்

4572 4040 2663 2007
725 3141 4030 1595
630 3827

வெற்றிபெற்றவர்கள் 20.10.2014 திகதிக்கு முன் ஆலயத்தில் பெற்றுக் கொள்[illegible]
(53124) (10) ஆலய[illegible]வும்
[illegible] திருப்பணி சபையினர்



## இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்கும் செயற்றிட்டம்

மண்முனைப்பற்று, ஒக். 11

மண்முனைப்பற்று மேற்கு பிரதேசத்தின் கரவெட்டி கிராமத்தில் பாடசாலை செல்லாத மற்றும் இடைவிலகிய மாணவர்களை பாடசாலையில் இணைக்கும் செயற்திட்ட நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இதன் முதற்கட்டமாக ஒழுங்கற்ற வரவீனமாக காணப்பட்ட 19 மாணவர்களும் 6 இடைவிலகல் மாணவர்களும் அடையாளம் காணப்பட்டு அவர்களின் பெற்றோரை வரவழைத்து இந்த விடயம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது இனிவரும் காலத்தில் ஒழுங்காக பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்போம் என பெற்றோர் உறுதியளித்தனர்.

மேலும் இடைவிலகல் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் எதிர்வரும் நாள்களில் அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும் எனவும் உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், உளவளத் துணை உத்தியோகத்தர், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய உத்தியோகத்தர்கள், வவுணதீவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-10)

# கிழக்கின் பொருளாதாரப் புரட்சிக் கண்காட்சி

சாய்ந்தமருது, ஒக்.11

கிழக்கின் எழுச்சி - 2014 மாபெரும் கண்காட்சியும் விற்பனை நிலையமும் கிழக்கு மாகாண விவசாய, கால் நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமிய, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது மழ்ஹருஸ் சம்ஸ் மகா வித்தியாலயத்தில் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடங்களைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.



அம்பாறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியில் 20ற்கும் மேற்பட்ட அரசதனியார் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கண்காட்சியை பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் நவீன தொழில் நுட்பங்களுடன் உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து பொருளாதாரத்தில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கான ஒரு முன்னோடியாகவே இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார். (ஒ-10)

# செங்கலடி இரட்டைக் கொலை; 4 ஆவது சந்தேகநபருக்கு பிணை

செங்கலடி, ஒக், 11

கிழக்கு மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய செங்கலடி இரட்டைக்கொலை தொடர்பான வழக்கின் நான்காவது சந்தேகநபரான கொலையுண்டவர்களின் மகளுக்கு நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த மேற்படி இரட்டைக் கொலை வழக்குநேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் குறித்த நான்காவது சந்தேகநபரான ரகுடக்சனா (வயது 17) என்ற மாணவிக்கு நிபந்தனைகளுடன் கூடியதான பிணை வீழங்க உத்தரவிட்டார்.

செங்கலடி இரட்டைக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரே வகுப்பில் கல்வி பயின்ற முதல் மூன்று சந்தேக நபர்களான மாணவர்கள்ஏற்கனவேபிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் நான்காவது சந்தேக நபரான இறந்த தம்பதியின் புதல்வி ரகுடக்சனாவுக்கு அவரது பாதுகாப்பு காரணமாகவே பிணை வழங்குவதற்கு நீதிமன்றம் அப்பொழுது மறுப்புத் தெரிவித்ததுடன் பிணை கோரிய சந்தேக நபரான மாணவியின் அம்மம்மாவினால் அவருக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாதெனவும் தெரிவித்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி வீஸ்வலிங்கம் முன்னிலையில் குறித்த இரட்டைக் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கின் நான்காவது சந்தேக நபரான ரகுடக்சனா கடந்த ஒரு வருடமும் மூன்று மாதங்களும் விளக்கமறியலில் இருந்து வருவதையும்வழக்கின்விசாரணைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் இடையூறுகள் ஏற்படக்கூடாதுஎன்பனபோன்ற விடயங்களையும் கவனத்தில் கொண்ட நீதிபதி நிபந்தனைகளுடனான பிணை வழங்க உத்தரவிட்டார்.

இதன்படி 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 இலட்சம் ரூபா பெறுமதியான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணையிலும் செல்ல பிணை வழங்கிய நீதிபதி, மட்டக்களப்பு சிறுவர் நன்னடத்தை அதிகார சபையின் பாதுகாப்பு இல்லத்திலேயே தங்க வேண்டுமெனவும், ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையில் தமது கல்வியைத் தொடரலாம் எனவும் நிபந்தனை விதித்து உத்தரவிட்டார்.

மேலும், நீண்ட காலம் விளக்கமறியலில் இருந்து வரும் இளம் பருவத்தினரான சந்தேக நபர் தாய், தந்தையை இழந்த நிலையிலுமிருப்பதால் அவரது உள நல விடயத்தில் அக்கறை கொள்வது அவசியமெனக் குறிப்பிட்ட நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கீழுள்ள உளவள ஆற்றுப்படுத்தல் நிலையம் மூலம் ஆலோகனைகள் வழங்கப்பட்டு ஆறு வாரங் களுக்கு பிறகு நன்னடத்தை உத்தியோகத்தர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (த-10)

## மீள்குடியேறிய மக்களுக்கு உதவி



மாஞ்சோலை, ஒக், 11

மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு மாஞ்சோலை மீள்குடியேற்ற மக்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கான உதவிகள் மீள்குடியேற்ற அமைச்சினால் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபல் தலைமையில் மாஞ்சோலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். அமீர் அலி கலந்துகொண்டு மீள்குடியேறியுள்ள குடும்பமொன்றுக்கு தலா 12 தகரம், சீமெந்து பைகள் என்ற அடிப்படையில் மொத்தமான 35 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர், பிரதேச சபை உறுப்பினர் ஐ.ரீ.அஸ்மி, செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-10)


## மரண அறிவித்தல்

### திருமதி வடிவாம்பிகை நடராஜா

[ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொழும்பு]



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கனடாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வடிவாம்பிகை நடராஜா (08.10.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் V.T. நடராஜா (திறைசேரி கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும், பாலமுரளி (Bank of America, Sruthi Music Academy) Dr. பாலமுகுந்தினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேமவதனி (கனடா), விஜேந்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸ்ருதி (கனடா), அனிஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற குமரையா- புனிதவதி ஆகியோரின் அன்பு மகளும், நித்தியானந்தன், காலஞ்சென்ற பத்மநாதன், விஜயலக்சுமி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற V.T. பொன்னம்பலம், V.T.கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி சு.தேவரதி (ஆசிரியர் - யா/கச்சாய் அ.த.க. பாடசாலை) மீசாலை.

(வி/16853) (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா வல்லிபுரம்



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா வல்லிபுரம் 06.10.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-கற்பகம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் மந்துவில் மேற்கு கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

...வில் மேற்கு,
மந்து...
கொடிகாமம்.

(47307) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
077 883 6898


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.11

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஜி.டி.தேவராஜா தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் ரி.ரட்ணம் கலந்து கொள்வார். (வ-ரி)


**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது.
1kg 400/= மட்டும். 10kg இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு கிலோ 380/= மட்டும்.

விஜயகுமார்,
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
T.P:077 315 1723

(53108) (4.6.3)

**விசேட கருத்தரங்கு**

"மூலிகை மருத்துவ முகாமைத்துவம்"
இடம்: மானிப்பாய் பிரதேசசபை மண்டபம்
காலம்: 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 3.00 மணி முதல் 6.00 மணி வரை.

யாழ்.மாவட்ட முதியோர் சுகவாழ்வுக் கழகம்
077 606 8656/021 225 5644

(53112) (4.6.3)

# சேவை நலன் பாராட்டு

Best Wishes

## கந்தையா சகாதேவன்

(கிராம உத்தியோகத்தர் வகுப்பு I)
பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை

Best Wishes



33 வருடங்கள் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் சிறப்பாகச் சேவையாற்றியதுடன் சமூகப்பணி மற்றும் சமயப் பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்ட கிராம உத்தியோகத்தர் அவர்கள் 11.10.2014 ஆம் திகதி 60 ஆவது அகவையினை பூர்த்தி செய்ததையிட்டு ஓய்வுபெறும் அவரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக் காலம் அமைதியாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது சமூகப்பணி சமயப்பணி என்பன தொடர வாழ்த்துகின்றோம்.

Best Wishes (53121) (10)

**நண்பர்களும்,**
**நலன்விரும்பிகளும்.**

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை தம்பையா

(இளைப்பாறிய உப அதிபர்-மட்டுவில் மகாவித்தியாலயம்)



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், மட்டுவிலை வசிப்பிடமாகவும் தற்போது ஸ்காபரோ கனடாவில் வசித்து வந்தவருமான மட்டுவில் மகாவித்தியாலயத்தின் இளைப்பாறிய உப அதிபருமான முருகுப்பிள்ளை தம்பையா 09.10.2014 சிவபதமடைந்தார்.

அன்னார் முள்ளியவளை முருகுப்பிள்ளை-சிவகாமசௌந்தரி தம்பதியரின் அன்பு மகனும், மட்டுவில் சின்னத்துரை-தில்லைநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி பவானியம்மாவின் (பவானி) அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்த ராஜா, பத்மாஜனி, சரோஜினி, மீனலோஜினி, ஸ்ரீதரன், ஸ்ரீபாலன், தயாநிதி, ஸ்ரீரங்கன், ஸ்ரீகணே ஷன், கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், துவாரகாதேவி, சந்திர சேகரம், காலஞ்சென்ற சாந்தராஜா மற்றும் சிவநாதன், ஜெயஸ்ரீ, பவானி, மகேந் திரன், வரதலோஜினி, விஜயலதா, விவேகானந்தா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, ராசம்மா, பார்வதி, சிவராஜா மற்றும் கனடாவில் வசிக்கும் திலகவதி, முள்ளியவளையில் வசிக்கும் பாக்கியம், ராசலிங்கம், தேவநாயகம், திரவியம், தேவராணி, பெத்தி, குகதாசன், குகநாயகி, கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற கந்தசாமி மற்றும் திருநெல்வேலியில் வசித்துவரும் சதாசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜித்தா, முகுந்தன், சுகன்யா, சுதர்சிகா, திருக்குமார், மதூஷன், பவான், ஹரிசன், ஹரிசா, கௌசல்யா, செந்தூரன், காண்டீபன், கௌத்தமி, பிரசாந்த், அனுஜன், அனஞ்சன், பைரவி, நிசாந்த், ஆரபி, கார்த்திக், சங்கவி, விஷ்ணுகன், கோபிகன், பார்கவீ, நிலக்ஷி, ஷாலினி, ஹாசினி ஆகியோரின் பேரனும், ஆருஷனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge 8911 Woodbine Ave Markham On L3R5G1 மண்டபத்தில் நாளை (12.10.2014) ஞாயிற்றுக்கிழமையும், 13.10.2014 திங்கட்கிழமையும் மாலை 4.00 மணிமுதல் 9.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, 14.10.2014 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை அதே மண்டபத்தில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று, Leslie & Elginmills இல் அமைந் திருக்கும் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா**
**(ஒய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்)**

(C/16858)(10)

# ஆண்டு நிறைவு விழா

கோண்டாவில் மக்கள் நலம் பேணும் அமைப்பின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கல்விக்கான உதவித்திட்ட நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தல்லைமையில் நடைபெறும்இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க. சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர். கே.என். விந்தன் கனகரத்தினமும், நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்ட பணிப்பாளர் இ. சுரேந்திரநாதனும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பே. தனபாலசிங்கமும் கௌரவ விருந்தினர்களாக பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான ஞானலோஜினி சிவஞானமும், கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலைய தலைவர் க.ம. இராஜேந்திரனும், கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை அதிபர் ந.சிவசிதம்பரமும், கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல கல்விசார் நிறுவனமொன்றுக்கு சந்தைப் படுத்தல் உத்தியோகஸ்தர்களும் கணினியில் வேலை செய்யக்கூடிய இருபாலாரும் தேவை. கவர்ச்சிகரமான சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 341 0745
021 320 3218 (53119)(10)

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிர பல வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனை உதவியா ளர் தேவை. கொழும்பில் தங்கிநின்று ஆசன பதிவுகளை மேற்கொள்வதற்கும், யாழ்-கொழும்பு ஆசன பதிவகத்துக்கும் தேவை.
குறிப்பு:ஆண்கள் மட்டும்.

தொடர்பு: 077 573 6003 (53116)(10)

## விற்பனைக்கு TOYOTA CREW CAB

எமது சொந்தப்பாவனையில் நல்ல நிலையில் உள்ள TOYOTA WP GN XXXX இலக்கமுடைய Crew Cab விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: (C/16855)(12.3.6)
077 844 8020/077 616 8792

# 60th Birthday Greetings 07.10.2014



## Mr. P. Krishnananthan

(Manager, People's Bank, Point Pedro)
**A man of Multifaceted Personality**

**As a Bank Manager:**
You have rendered an unstinting service in your six and thirty years of your office, so you have become the pulse of the people.

**As a Human:**
You have helped the poor and those in need and thus you have become the social reformer

**As a Writer:**
By being a writer, poet, and a genuine critic, you have become the refiner of the society.

**By your Wisdom and Virtues:**
You have become the source of inspiration for many to live a righteous life.

Best Wishes *Wish you a long happy life...*

(53114)(10)

**'Thamilagam'**
**Kottawattai.**

**Mr & Mrs. Chelliah Pararajasingam (J.P)**
**Selvamalar.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சக ஆசிரியை
**திருமதி வசந்தி**
**தெய்வேந்திரகுமார்**
(BA Dip.in Edu.)
அவர்கள்
06.10.2014 திங்கட்கிழமை நல்லாசிரியருக்கான பிரதீபா பிரபா ஜனாதிபதி விருதைப் பெற்றதையிட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

Best Wishes (53120) (10)

**ஆசிரியர் கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

# மரண அறிவித்தல்

## திருமதி யோகாம்பிகை கோபாலகிருஷ்ணன்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது திருச்சி ஜானகிஅம்மாள் காலனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை கோபாலகிருஷ்ணன் நேற்று (10.10.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசேகரம்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கனகசபை- நாகம்மா தம்பதியரின் மருமகளும், கேதாரரூபன் (ஜேர் மனி), தயாரூபன் (பிரான்ஸ்), இன்பரூபன் (இந்தியா), ஞான ரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், அகல்யா (ஜேர்மனி) தார்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், பவிஷன், பவிஷினி, ஷாசின் ஆகி யோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற நாகரெத்தினம் (உப தபாலதிபர்- புங்குடு தீவு), காலஞ்சென்ற இராசமணி மற்றும் செல்வநாயகம் (கனடா), குலசிங்கம் (ஓய்வு நிலை அதிபர்), எதிர்வீரசிங்கம் (ரூபன் ரெக்ஸ்ரைல்ஸ்-நல்லூர்), இந்திராணி (இந்தியா), மன்மதராசா (இந்தியா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சீவரத்தினம், கேதீஸ்வரன் (வவுனியா), உலகேஸ்வரி (ஜேர்மனி), சச்சிதானந்தம் (கனடா), சுந்தராம்பாள் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோபாலகிருஷ்ணன் இன்பரூபன்.**
**இந்தியா.**
**தொ.பே:00919 688 4584**

(53117)(10)

**தகவல்: சகோதரர்கள்,**
**சோ.குலசிங்கம்,**
**சோ.எதிர்வீரசிங்கம்,**

# யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச் சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.11.2014 தொடக்கம் 30.11.2015 வரை

யாழ் போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களிடமிருந்து 01.11.2014 தொடக்கம் 30.11.2015 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றோம்.

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலையில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500 காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 13.10.2014 தொடக்கம் 23.10.2014வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைக்கேள்விகள் 24.10.2014 திகதி 03.00 மணிக்கு முன்பதாக இந்த போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் மன்னிலையில் உடனடியாளகத் திறக்கப்படும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021 222 2260 தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 2014.10.20 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
5. கிடைக்கபெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுப்பட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.


**தலைவர்/பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்**

(C/16860)(10)

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு இரவீந்திரன் (ரவிமாஸ்ரர்) (B.A, Dip.in Eng)

(முன்னாள் ஆசிரியர்-பரி.யோவான் கல்லூரி,
ஆங்கில போதனாசிரியர்-யாழ். பல்கலைக்கழகம்)



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இரவீந்திரன் அவர்கள் நேற்று (10.10.2014 வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு (லிகிதர்-கச்சேரி)-மங்கயர்க்கரசி தம்பதிய ரின் பாசமிக்க சிரேஷ்ட மகனும், , தருமர்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் நேசம்மிக்க கணவரும், விஸ்ணுகாந், தேனுகா (பிரான்ஸ்), மேனகா (யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தேவ்காந், விமல்காந் (யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேந்திரனின் (பிரான்ஸ்) அன்பு மாமனும், அஸ்வினின் (பிரான்ஸ்) அன்பு அம்மப்பாவும், காலஞ்சென்ற பாபுமாஸ்ரர் என்று அழைக்கப்படும் கிராம அலுவலர் மகேந்திரன் மற்றும் இரஜனிமாலா, சாந்தினிமாலா, தர்சினிமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணராஜா, சர்வானந்தராஜா (சவுதி), சிவானந்தராஜா, தவராஜா, இலங்காதேவி, யோகாதேவி (இலண் டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**61/6, பாரதி வீதி,**
**கச்சேரி, யாழ்ப்பாணம்.**

(53122)(10)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தொடர்ச்சிகள்

## படகில்

என்று கூறிக் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது. விசாரணைகளின்போது, தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த சிவதர்ஷன் என்பவர் தனது வாக்குமூலத்தில் - தானும் தனது மகள் சிலோசினியும் (வயது - 6) கடந்த மாதம் படகு மூலம் இராமேஸ்வரம் வந்தனர் என்றும், வாடிப்பட்டி முகாமில் தமது உறவினர்களுடன் வசித்து வந்தனர் எனவும், ஆனால் தமக்குப் போதிய வருமானம் கிடைக்காததால் மீண்டும் இலங்கைக்குச் செல்ல திட்டமிட்டு, இலங்கையில் இருக்கும் தனது பெற்றோருக்குத் தகவல் தெரிவித்தார் என்றும் கூறியுள்ளார்.

திருவள்ளுவர் முகாமில் இருந்த ரமேஷ், சேலத்தில் இருக்கும் உறவினரை சந்திக்க இந்தியா சென்று விசாமுடிவடைந்து தங்கியிருந்த சலோமை நல்லம்மா ஆகிய இருவரையும் இணைத்துகொண்டு நான்கு பேரும் கடந்த 4ஆம் திகதி தங்கச்சிமடம் கண்ணுப்பாடு தென் கடல் கடற்கரைக்குச் சென்றனர் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நான்கு பேரையும் அழைத்து செல்ல இலங்கையில் இருந்து படகில் வந்த சிவதர்ஷனின் தந்தை மாணிக்கம் மற்றும் படகோட்டியான பிரசாத் ஆகிய இரண்டு பேரும் தங்கச்சிமடம் சென்று நான்குபேரையும்ஏற்றிக்கொண்டு இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். இதன்போது படகில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து படகைத் தங்கச்சிமடம் கரைக்குக் கொண்டு சென்று இயந்திரத்தை அருகே இருந்த சவுக்குக்காட்டுப் பகுதியில் மறைத்து வைத்து விட்டு 6 பேரும் மதுரை வாடிப்பட்டிக்குச் சென்றுள்ளனர். மீண்டும் இந்த 6 பேரும் இலங்கைக்குச் செல்ல-மற்றொரு படகை ஏற்பாடு செய்துள்ளனர். இந்த படகு நேற்றுக் காலை இராமேஸ்வரம் தென் கடல் பகுதிக்கு வரும் என்ற நிலையில் 6 பேரும் இராமேஸ்வரத்துக்கு பஸ்ஸில் வந்து காத்திருந்துள்ளனர். இதன்போது அவர்களை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-14)

## ஓட்டோவை

சென்றுள்ளனர்.

வேகமாகத் தப்பிச் சென்ற ஓட்டோ திடீரென நிறுத்தப்பட்ட நிலையில் விரட்டியவர்களின் மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன் மோதுண்டு நிலத்தில் வீழ்ந்தது. இதனையடுத்து விரட்டிய மூவரும் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

இதனை அடுத்து ஓட்டோவில் வந்தவர்கள் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிளைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சுன்னாகம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-86)

## இடதுசாரிக்

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியு குணசேகர, லங்கா நவசமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண ஆகிய மூன்று இடது சாரித் தலைவர்களும் அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன் ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுமாறு அரசிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் ஏன் கோரிக்கை விடுக்கின்றன? இதற்கான காரணம் என்னவென்று அமைச்சர் திஸ்ஸ விதாரணவிடம் நேற்று 'உதயன்' வினவியது.

இதற்குப் பதிலளித்த அவர், இதற்கு நான்கு காரணிகள் இருப்பதாக குறிப்பிட்டதுடன் அவை பற்றி விளக்க மும் அளித்தார். அதாவது,

1. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணுதல். புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்காவிட்டால் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவது கடினம்.

2. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மீள அமுல்படுத்தி சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்க வேண்டும்.

3. தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரவேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மாற வேண்டும்.

4. மக்கள் நலன்சார்ந்த பொருளாதாரத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இவற்றை உடனடியாக செய்துமுடிக்க முடியாது. ஆகவேதான் இன்னும் இரண்டு வருடங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறும் அக்காலப் பகுதிக்குள் தமக்குள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி இவற்றை செய்துமுடிக்குமாறும் நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். இனிவரும் காலப் பகுதியில் உருவாகும் அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலத்தை பெறுமா என்பது சந்தேகமே.

எனவே, இக்காலப்பகுதிக்குள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினோம். இந்த முதலாம் சுற்றுப் பேச்சு முழுமை பெறவில்லை. ஆகவே, எமக்கொரு திகதி தருவதாக ஜனாதிபதி கூறினார். விரைவில் இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றேன் என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

## இலங்கை

கடந்த 2012ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில், இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையிலான முதலாவது பாதுகாப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாக இரண்டாவது கலந்துரையாடல் நேற்று இடம் பெற்றுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியா வின் பாதுகாப்புச் செயலாளர் ராதாகிருஸ்ண மாதூர் தலைமையிலான குழுவினர் பாதுகாப்புக் கலந்துரையாடலில் நேற்றுப் பங்கு கொண்டனர். இதன்போது இலங்கைத் தரப் பில், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து ஆராயப்பட்டுள்ளதுடன் புதிய ஒத்துழைப்பு முயற்சிகளும் இணங்காணப்பட்டுள்ளன. பிராந்திய பாதுகாப்பு மற்றும் கடல் பாதுகாப்பு குறித்தும் ஆராயப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## அமைச்சர்கள்

மட்டுமே அமைச்சுப் பதவி இல் லாமல் இருக்கின்றனர்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைத் தலைவருமான இராதாகிருஷ்ணன், தாவரவியல் பூங்கா, பொழுதுபோக்கு பிரதியமைச்சராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதவிப்பிர மாணம் செய்தார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் இரு பிரதியமைச்சர்களும், கடந்த வருடம் நவம்பர் மாதம் இரு பிரதியமைச்சர்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், ராதாகிருஷ்ணனின் பதவியேற்புடன் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை 41ஆக உயர்ந்துள்ளது. அத்துடன், சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை 66 ஆக உள்ளது. மேலும், சிரேஷ்டஅமைச்சர்கள்இருவர் அடங்கலாக அமைச்சர் பட்டாளத்தின் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்துள்ளது.

## மாணவர்களை

நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவும் குறிப்பிட்ட எதிர்க்கட்சி எது என்று கேள்வி எழுப்பினார்.

இவர்களின் கோரிக்கைக்கமைய கருத்து வெளியிட்ட ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் மரிக்கார்தான் இவ்வாறு மாணவர்களை அரசியல் பணிகளில் ஈடுபடுத்தினார். இதன்மூலம் பேஸ்புக், ஈமெயில் ஊடாக அரசுக்கு எதிராக பிரசாரம் செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது - என்றார்.

## சாதாரணதரம்கூட

தத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சர்வதேச வர்த்தகம் மற்றும் உறவுகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு பணியாற்றுகின்றது. நாட்டு மக்களுக்கும் பொறுப்புக் கூறவேண்டிய கடமை இந்த அமைச்சுக்கு உள்ளது.

உயர்ஸ்தானிகர் என்பவர் எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி இன்னொரு நாட்டிலிருந்து அந்த நாட்டின் பிரதிநிதியாகச் செயற்படுகின்றார். அவ்வாறான ஒருவர் மீது விருந்துபசாரத்தில் வைத்து தாக்குதல் நடத்தப்படுமாயின், அது என்ன நாடு? இந்தத் தாக்குதலினூடாக ஒட்டுமொத்த நாடும் துரதிர்ஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சாதாரணதரப் பரீட்சைகூட சித்தியடையாத ஒருவரிடம் வெளிவிவகார சேவை ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அதில் ஏற்படும் வீழ்ச்சி பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை - என்றார்.

## அமெ.

மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாக இன்று, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், இலங்கைக்கான அமெரிக்காவின் பதில் தூதுவர் அன்றூ சிமன் மற்றும் வைத்தியசாலையின் பிரதம அதிகாரி சந்திரிக்கா பஸ்நாயக்க ஆகியோர் அக்கராயன் வைத்தியசாலைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

'அயற் பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தரமான சுகாதாரப் பராமரிப்பு சேவையை வழங்குவதற்கு சுகாதார அமைச்சுக்கும், வடக்கு மாகாண சபைக்கும் இந்த வைத்தியசாலை உதவும் என நாம் நம்புகின்றோம் என்று பதில் தூதுவர் சிமன் குறிப்பிட்டுள்ளார். முன்னர் மோதலினால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு உதவுவதில் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 9 வைத்தியசாலைகளைத் தவிர, மன்னார் மற்றும் வவுனியாவில் பாடசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும் மழைநீர் சேகரிப்பு முறைமைகளை அமைப்பதற்கும் ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் உதவி புரிந்துள்ளது. மேலும், கிழக்கு மாகாணத்தில் 11 பாடசாலைகளையும், இரண்டு வைத்தியசாலைகளையும் கையளித்துள்ளதுடன், சுமார் 20 பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக 8 பாடசாலைகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிட்டு வருகின்றது - என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## மாகாண சபை

ஜனாதிபதி தலைமையில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்திருந்தது. இதற்கான காரணத்தை விளக்கி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, வடக்கு முதலமைச்சரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் வடக்கு முதலமைச்சர். அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் 14 விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

"2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தொடர்ச்சியாக இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதும் இது தொடர்பில் வடக்கு மாகாண சபையுடன் ஆலோசிக்கவில்லை. அத்துடன் கடந்த கூட்டத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் தெரியப்படுத்தப்படவும் இல்லை.

வடக்கு மக்களினால் தங்கள் அரசு புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மக்களின் நேரடியான பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்காமல் நடவடிக்கை மேற்கொள்வதானது, மக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புக்களுக்கு முரணாக அதிகார அலகு ஒன்று வடமாகாணசபையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதையும் கோடிட்டுக் காட்டுகின்றது.

கிளிநொச்சியில் வைத்து காணி வழங்கும் நிகழ்வை தங்கள் அரசியல் லாபத்திற்காக நடத்துகின்றீர்கள். வடக்கு மாகாண காணி அமைச்சர் என்ற ரீதியில் எனக்கு எதுவுமே தெரியப்படுத்தப்படவில்லை.

கடந்த ஜனவரி 2 ஆம் திகதி, என்னுடனான சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இது வரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனூடாக நாம் ஏமாற்றப்பட்டோம்.

மிகவும் அவதானமாக எமது அமைச்சர்கள் குழாமுடனும் மாகாணசபை தலைவருடனும் மேற்படி உங்கள் கூட்டம் தொடர்பாகக் கலந்துறவாடி வடமாகாணசபையும் வடமாகாண மக்களும் ஓரம் கட்டப்பட்டுள்ள இந்த நிலையில் மேற்படி ஒக்ரோபர் 13 ஆம் திகதிய கூட்டத்திலோ அரசியல் தொடர்பாக வடமாகாணத்தில் நடைபெறவுள்ள ஏனைய கூட்டங்களிலோ கலந்து கொள்வது அர்த்தமற்றதொன்றாகின்றது என்று தீர்மானித்துள்ளோம்.

2014 செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா. பொதுச்சபையில், வடமாகாணத்தில் ஜனநாயக அமைப்புக்கள் மீள அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளீர்கள். ஆனால் ஜனநாயகம் என்பது தேர்தல்களை நடாத்துவதற்கு மேலாகச் சென்று தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் கடமைகளை எந்தத் தலையீடும் இல்லாமல் மக்கள் ஆணைப்படி செயற்படுத்தலாகும்.

போரின் பின் தாங்கள் சர்வதேச சமூகத்திற்கும் இந்திய பிரதமருக்கும் வாக்குறுதி வழங்கியதைப் போல், 13 ஆவது திருத்தத்தின் அப்பால் சென்று அதைக் கட்டியெழுப்புவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண முதலமைச்சர் என்ற ரீதியிலே தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்" - என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

(முதலமைச்சரின் முழுமையான அறிக்கை நாளைய உதயனில் வெளியாகும்)

## ஜனாதிபதி

நிகழ்வை புறக்கணிப்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"காணி அனுமதிப் பத்திரங்கள் வழமையாக சட்ட முறைப்படி வழங்கப்பட வேண்டும். அது தொடர்பான செயன்முறை பூரணப்படுத்தப்பட்ட பின்னர், உடனடியாகவே பயனாளிகள் தமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வர்.

உங்களால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படப்போகும் நபர்கள் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அவர்களுக்கு வழங் கப்பட வேண்டிய அனுமதிப் பத்திரங்களை கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் தாமதித்து வழங்குவது நீதிப்படி ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு செயல் அன்று. இது எவ்வாறு இருக்கின்றது என்றால் மனிதாபிமானமற்ற முறையில் இரண்டரை லட்சம் எமது தமிழ்ப் பேசும் மக்களை அநியாயமாகச் சிறைப்படுத்தி வைத்திருந்து 2010 ஆம் ஆண்டில் உங்கள் ஜனாதிபதி தேர்தல் வந்த நேரத்தில் அவர்களைத் திடீர் என்று விடுதலை செய்தது போன்று இருக்கின்றது என்பதை வருத்தத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்"- என்று முதலமைச்சர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

## ஆசிரியைகளின்

ளின் பணத்தில் கொள்வனவு செய்திருந்தன என்று கூறப்பட்டிருந்தது.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தில் உள்ள மகளிர் பாடசாலை ஒன்றிலும் ஜனாதிபதி மஹிந்தோதய ஆய்வு கூடத்தைத் திறந்து வைப்பார் என்று கூறப்பட்டது. அதையடுத்து அங்குள்ள ஆசிரியைகளும் கட்டாயம் நீலச் சேலை தான் அணிய வேண்டும் என்று பணிக்கப்பட்டது. ஆசிரியைகளின் சொந்தப் பணத்தில் சேலையை வாங்க வேண்டும் என்றும், அதுவும் 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நீலச் சேலைகளைத் தான் வாங்க வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. சேலைகளும் கேள்வி கோரல் எதுவும் இல்லாது பாடசாலை நிர்வாகத்தால் நேரடியாகக் கொள்வனவும் செய்யப்பட்டது. ஜனாதிபதியை வரவேற்பதற்குரிய ஏற்பாடுகளும் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தநிலையில், ஜனாதிபதியின் வடக்குப் பயணத்துக்கான இறுதி நிகழ்ச்சி நிரலில் குறித்த பாடசாலைக்குச் செல்லும் நிகழ்வு இணைக்கப்படவில்லை. ஜனாதிபதி அந்தப் பாடசாலைக்குச் செல்ல மாட்டார் என்று அவரின் ஊடக அலுவலர் இந்திக குருப்பராய்ச்சியும் நேற்று உறுதிப்படுத்தினார். ஜனாதிபதியும் வரமாட்டார், 2 ஆயிரத்து 500 ரூபா பணமும் போனது என்று தலையில் ஒரு கையும் மறு கையில் நீலச் சேலையுமாக உள்ளனராம் அந்தப் பாடசாலை ஆசிரியைகள்.

(ற-5)

## வெளிநாட்டவர்க

யாது என்று தெரிவித்த சோதனைச் சாவடியில் இருந்த இராணுவத்தினர், மீண்டும் கொழும்புக்கே திரும்பிச் செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இருந்த இராணுவத்தினரிடம் கேட்ட போது, "பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று வரும் வெளிநாட்டவர்களை மட்டுமே பயணிக்க அனுமதிக்கமாறு எமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் எவையும் எமக்கும் தெரியாது"- என்று தெரிவித்தனர்.

வடக்குக்குப் பயணம் மேற்கொள்வதற்கு எந்தவிதமான முன் அனுமதிகளும் பெறத் தேவையில்லை என்று அரசு தெரிவித்திருந்தது. அண்மைக்காலமாக ஓமந்தை சோதனைச் சாவடியூடாக சாதாரணமாகப் பயணம் செய்யக்கூடிய நிலைமையும் காணப்பட்டது. இந்த நிலையில் வடக்குக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை பயணம் செய்யவுள்ள நிலையில், திடீரென இந்த தடை விதிக்கப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள், ஜனாதிபதியின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்தத் திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் என்று கருதுவதாகவும் தெரிவித்தன.

(ற-ரி.5.402)

## மின்சார வேலியை எதிர்த்து விவசாயிகள் போராட்டம்



அம்பாறை. ஒக். 11

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் செயற்பாட்டால் தாம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாந்தோட்ட விவசாயிகள் நேற்று முன்தினம் எதிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மாந்தோட்ட பிரதேசத்திலிருந்து அமைக்கப்பட்டு வருகின்ற யானை பாதுகாப்பு மின்சார வேலியால் சுமார் 1740 ஏக்கர் விவசாயக் காணிகள் பாதிக்கப்படுவதாக தெரிவித்த விவசாயிகள் குறித்த வேலி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத வனப் பகுதிக்குள் அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து அங்கு சென்ற பிரதேச பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் வன பரிபாலன அதிகாரிகளுடன் விவசாயிகள் கலந்துரையாடியுள்ளனர். இது தொடர்பில் சுமுகமான தீர்வொன்றை பெற்றுத் தருவதாக பொலிஸார் விவசாயிகளுக்குத் தெரிவித்துள்ளனர். (வ-10)

## போர் முடிந்து 5 வருடங்களாகியும் வாழ்வாதாரம் முன்னேறவேயில்லை

### உண்மையை ஒப்புக்கொண்டார் சந்திரகுமார் எம்.பி.

வட்டக்கச்சி. ஒக்.11

போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் வன்னியில் மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று தெரிவித்தார் கொழும்பு அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார்.

உட்கட்டுமான அபிவிருத்தியில் ஓரளவு முன்னேற்றத்தை கண்டுள்ளபோதும் மக்களின் வாழ்வாதாரத்தில் இன்னும் போதிய முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்றார் அவர்.

வட்டக்கச்சியைச் சேர்ந்த சிலருக்கு கோழிக்குஞ்சுகள் மற்றும் மாடுகளை வழங்கிய பின்னர் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்னும் நாம் அடைய வேண்டிய இலக்குகள் பல உண்டு. கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரம் போதிய அளவில் அபிவிருத்தியடையவில்லை. அதற்கான பாதையில் தொடர்ந்தும் நாம் பயணிக்க வேண்டியுள்ளது. ஏனைய அரசியல்வாதிகள் போன்று நாமும் பயனற்ற விடயங்களில் மட்டும் குறியாக இருக்க விரும்பவில்லை. பொறுப்பற்ற சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் நாடு கடந்து வாழும் சிலரின் செயற்பாடுகளும் எமது மக்களின் வாழ்வில் மீளவும் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றன. உணர்ச்சி வசப்பட்ட செயற்பாடுகள் எமது மக்களின் வாழ்வை மீளவும் அவலத்துக்குள்ளாக்கும். எனவே அது சாரந்த விழிப்புணர்வை மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (உ)

## மின்சாரத் திட்டம் ஆரம்பித்து வைப்பு

அம்பாறை. ஒக்.11

அட்டாளைச்சேனை, 9ஆம் பிரிவு களப்பு வீதிக்கான மின்சாரத் திட்டம் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி. நீர்ப்பாசனம் மற்றும் வீடமைப்பு கிராமிய மின்சார அமைச்சரால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மின்சாரத்திட்டத்தின் மூலம் 75 குடும்பங்கள் நன்மைபெற வுள்ளன. (வ)

## 10, 000 இந்துக்களுக்கு சமய தீட்சைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம். ஒக். 11

இந்துக்களான பத்தாயிரம் பேருக்கு சமய தீட்சை வழங்கப்படவுள்ளதாகவும் நவராத்திரி தினம் தொடக்கம் சிவராத்திரி தினம் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்றும் சைவமகா சபைத் தலைவர் நந்தகுமார் தெரிவித்தார்.

சைவமகா சபையுடன் சிவதொண்டன் போன்ற ஐந்து அமைப்புக்கள் இணைந்து நடத்தும் இந்த சமய தீட்சையில் அனைத்து சைவ மக்களும் இணைந்து கொண்டு சமயதீட்சையைப் பெறமுடியும்.

ஏற்கனவே இந்தத் திட்டம் பல பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் திருநீறு, உருத்திராட்சமாலை போன்றவற்றை அணிவதற்கும், சமய தீட்சை பெறவும், பசுக்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களைக் கற்றுக் கொள்ளவும் கூடியதான பயிற்றுவிப்புக்களை வழங்குவதுடன் யோகாசனம், கூட்டுப் பிரார்த்தனை போன்றவையும் நடத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ-7)

## குற்றங்களும் கைதுகளும்

தென்மராட்சி

### தந்தை, மகன் மீது தாக்குதல்

வயலில் நெல் விதைப்புக்குச் சென்ற தந்தையும் மகனும் வயலுக்குள் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரால் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கேரதீவு அறுகுவெளியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த தந்தையொருவரும் அவரது மகனும் டிராக்டரில் சென்று வயலில் நெல் விதைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே மோட்டார் சைக்கிளில் சென்றோர் அவர்களைத் தாக்கிவிட்டு தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான அவர்கள் வீட்டுக்குத் தொலைபேசியில் அறிவித்ததை அடுத்து பொலிஸுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பொலிஸார் அங்கு சென்று தாக்குதலுக்கு இலக்கான இருவரையும் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த இராமலிங்கம் ஈஸ்வரபாதம் (வயது—60) அவரது மகனான ஈஸ்வரபாதம் திவாகர் (வயது—31) ஆகியோரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ—9)

### இராணுவத் தளபாடங்களை களவாட முயன்றவர் கைது

கிளிநொச்சி

இராணுவத்தின் ராங்கிகளின் பாகங்கள் மற்றும் இரும்புக் குழாய்கள் என்பவற்றை களவாக எடுத்துச் சென்ற நபர் ஒருவரை பளை வேம்பொடுகேணியில் வைத்து பொலிஸார் கடந்த 3 ஆம் திகதி கைது செய்தனர்.

அவரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தியபோது 75 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல பதில் நீதிவான் சிவபாலசுப்பிரமணியம் உத்தரவிட்டார். (வ—18)

### பொலிஸ் உத்தியோகத்தருக்கு சாராயம் விற்றவர் கைது

கிளிநொச்சி

பூநகரி, ஆலங்கேணி பகுதியில் 150 மி.லீ. சாராயத்தை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு விற்பனை செய்த நபரை கடந்த 2 ஆம் திகதி பொலிஸார் கைதுசெய்தனர். கிளிநொச்சி நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்திய போது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து கிளிநொச்சி பதில் நீதிவான் சிவபாலசுப்பிரமணியம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (வ-18)

### ஆயிரம் ரூபாவுக்கு சாராயம் விற்றவர் கைது

கிளிநொச்சி

கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஒரு போத்தல் சாராயத்தை ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்த நபரை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். குறித்த நபரை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தியபோது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து கிளிநொச்சி பதில் நீதிவான் சிவபாலசுப்பிரமணியம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (வ—18)

### வர்த்தகர் மீது வாள்வெட்டு

தென்மராட்சி

தமது வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு ஆயத்தமாகிய வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதாரிகள் வர்த்தகரை வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.10 மணிக்கு நுணாவில் 190 ஆம் கட்டை பொதுநூலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது. குறித்த வர்த்தக நிலையம் மூன்று தினங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டதாகவும் தொழில் போட்டி காரணமாக வாள்வெட்டு இடம்பெற்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நுணாவில் மத்தியைச் சேர்ந்த ரங்கசாமி துரைராஜ் (வயது — 43) என்பவர் தோள், கால், கை ஆகிய இடங்களில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நீண்டநாள்களாக மூடப் பட்டிருந்த வர்த்தக நிலையத்தைத் திறக்க ஏற்பாடுகள் செய்தபோது சிலர் தடுத்ததாகவும் அதனை மீறி மூன்றுதினங்களுக்கு முன்னர் கடையை ஆரம்பித்ததாகவும் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வாள்களால் தம்மை வெட்டியதாகவும் காயமடைந்தவர் தெரிவித்தார். (வ—9)

### திருட முயன்ற சிறுவன் கைது

அக்கரைப்பற்று

சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் இருந்து தப்பி ஓடிவந்து திருட்டில் ஈடுபட்ட சிறுவன் ஒருவன் அம்பாறையில் கைது செய்யப்பட்டுள்ளான். 17 வயதான குறித்த சிறுவன் கைத்தொலைபேசியை திருடிய போதே பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் உள்ளீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். திருக்கோவில் மண்டானை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுவன் கடந்த 6 மாதத்துக்கு முன்னர் அக்கரைப்பற்று 7 ஆம் பிரிவு-பிரதேசத் தில் வீடு ஒன்றை உடைத்து தங்க ஆபரணங்கள் மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி என்பன சொள் ளையிட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு யாழ்பாணம் சிறுவர் நன்னடத்தை பிரிவில் வைக்கப் பட்டு பின்னர் அங்கிருந்து தப்பி ஓடிவந்துள்ளார். இதேவேளை இதற்கு முன்னரும் அதே பிரதேசத்தில் உள்ள காளி கோவில் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து கையடக்க தொலை பேசியை திருடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் கைது செய்யப்பட்டவரிடம் இருந்து இரண்டு கையடக்கத் தொலைபேசிகளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ—10)

### மாணவனை மோதிவிட்டு தப்பியோடிய சாரதி கைது

தென்மராட்சி



சைக்கிளில் சென்ற 9 வயது மாணவனை மோதிவிட்டு தப்பியோட முயன்ற வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சைக்கிளில் சென்ற சிறுவனை மோதிய வாகனம், சிறுவனின் சைக்கிள் வாகனத்தில் தொங்கிய நிலையில் இழுத்துக் கொண்டு சென்றது. இதன்போது சைக்கிளில் பயணித்த சிறுவன் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். அவ்வேளையில் வீதியில் எவரும் இல்லாததால் சிறுவனைத் தமது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வாகனச் சாரதி சென்றுள்ளார். இதனை அவதானித்த பொதும்க்கள் கூக்குரலிடவே அவ்வேளையில் அந்த வழியே வந்த சாவகச்சேரி நீதிவான் பொதுமக்களிடம் தகவலைக் கேட்டறிந்து உடனே பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அதையடுத்து பொலிஸார் குறித்த வாகனச் சாரதியைக் கைது செய்து புதன்கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது. சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த சரசாலையைச் சேர்ந்த சதீஸ்குமார் யதுசன் (வயது—9) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ—9)

### பூப்புனித நீராட்டு விழாவில் பெண்ணின் நெக்லஸ் அபேஸ்

தென்மராட்சி

பூப்புனித நீராட்டு விழாவுக்கு வந்திருந்த இளம்பெண்ணின் நெக்லஸ் அன்றிரவு அபகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை கைதடி மேற்கில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட அறிமுகமில்லாத 3 பெண்கள் மீது சந்தேகம் எழுந்துள்ளது.

கைதடி மேற்கில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவொன்றில் முன்பின் அறிமுகமில்லாத மூன்று பெண்கள் அங்கு அனைத்து உபசரிப்புகளிலும் கலந்து கொண்டனர். அவர்கள் வீட்டுக்காரருக்கு தெரிந்தவர்களாக இருக்கலாம் என்று உறவினர்கள் எண்ணியுள்ளனர்.

அன்றையதினம் இரவு அனைவரும் படுக்கைக்குச் சென்று காலையில் கண் விழித்தபோது நிகழ்வுக்கு வருகை தந்திருந்த உறவுக்காரப் பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்க நெக்லஸ் காணாமற் போயிருந்தது. நீண்ட நேரத்தின் பின்னரே குறித்த பெண் நித்திரையிலிருந்து எழுந்ததால் திருட்டுப்போன விடயம் நீண்ட நேரத்தின் பின்னரே அங்கு நின்றவர்களுக்கு தெரியவந்துள்ளது.

காலையில் புறப்பட்ட உறவுகளுடன் குறித்த 3 பெண்களும் சென்றதால் திருடியவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ—9)

### கசிப்புடன் பெண் கைது

கிளிநொச்சி

வட்டக்கச்சிப் பகுதியில் 2 போத்தல் கசிப்பு வைத்திருந்த பெண் ஒருவரை கடந்த 5 ஆம் திகதி பொலிஸார் கைது செய்தனர். கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் குறித்த பெண்ணை நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்திய போது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் பதில் நீதிவான். (வ—18)

CMYK



ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் புதுப்பொலிவாக்கும் வகையில் இராணுவத்தினர் வர்ணம் பூசுதல், கட்டட வேலைகள் என அனைத்தையும் தாமே முன்னின்று செய்து வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் இந்துக் கல்லூரியைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (த-21)

# மனோ-பொன்சேகா நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஒக்.11

ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவுக்கும் ஜனநாயகமக்கள் முன்னணிதலைவர் மனோகணேசனுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனநாயக கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், மனோ கணேசனுடன் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்களான எஸ்.ராஜேந்திரன், சண். குகவரதன், பிரியாணி குணரத்ன ஆகியோரும் இடம் பெற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, உத்தேச ஜனாதிபதி தேர்தல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

பொது எதிரணியின் வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் போட்டியிடுவதையும், அதேவேளை இந்தப் பொது எதிர்க்கட்சிக் கூட்டணி ஒரு பொதுச் சின்னத்தில் களமிறங்க வேண்டும் என்பதையும் தான் வலியுறுத்தி வருவதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த காலங்களைப் போல், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மீதும், பொது எதிர்க்கட்சிக் கூட்டணியின் மீதும், புலி முத்திரை குத்தி இனவாதப் பிரசாரத்தை முன்னெடுக்க இந்த அரசுக்கு தான் இடமளிக்கப் போவதில்லை என்றும், இது தொடர்பான இறுதி நிலைப்பாட்டை உரிய வேளையில் அறிவிப்பதாகவும் சரத் பொன்சேகா கூறியுள்ளதாகவும், ஜனநாயக கட்சியும் ஜனநாயக மக்கள் முன்னணியும், பொது எதிரணியில் காத்திரமான பங்கை கூட்டாக வகிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலகம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# குழு மோதலில் ஒருவர் காயம்

வலி.வடக்கு, ஒக். 11

இரண்டு இளைஞர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் தலையில் காயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகம் மேற்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவு நேரம் ஓட்டோவில் வந்தவர்களுக்கும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் சேதம் அடைந்துள்ளதுடன் சுன்னாகத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் வித்தியரூபன் (வயது -26) என்பவர் தலையில் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (த-86)

# 2013இல் 1,220 பிக்குகள் துறவறம் விட்டோடினர்

## புத்தசாசன அமைச்சு தகவல்

2013ஆம் ஆண்டில் 1,220 பிக்குகள் துறவறத்திலிருந்து விலகிச் சென் றுள்ளனர் எனத் தெரிவித்துள்ள புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு, பிக்குமார்கள் துறவறத்திலிருந்து வில கிச்செல்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தில் ஐ.தே.கவின் அஜோமா கமகே எம்.பி. எழுப்பிய கேள்விக்கு புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சால் சபா பீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் தற்போது 37 ஆயிரத்து 691 பிக்குகள் இருக்கின்றனர். இவர்களில் 3,105 பிக்குகள் 2013ஆம் ஆண்டில் துறவறத்தில் இணைந்து கொண்டனர். இவர்களுள் 1,220 பேர் அந்தஆண்டு துறவறத்தில் இருந்துவிலகிச்சென்றுள்ளனர்.

பிக்குமார்கள் துறவறத்திலிருந்து விலகிச் செல்வதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கமைய பிக்குமார்களின் பெற்றோர்களுக்கான நிதியம் ஒன்றை ஆரம்பித்து அதன்கீழ் ஏழைபிக்குமார்களின் பெற்றோர்களுக்கென வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படுகின்றன. பிக்குமார் சிந்தனை மேம்பாட்டுத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தல், விகாரைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் முதலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, சாசனப் பாரம்பரியங்களுக்கு அமையவும், ஒழுக்க விதிமுறைகளுக்கு அமையவும் பிக்குனி தலைமுறையொன்றை மீண்டும் நிறுவ முடியாது என்று முப்பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Study In Latvia
Schengen visa
WITH WORK PERMISSION
வெற்றிப்பயணம் ஆரம்பம்





Ravindran Manojkumar
?
May be You

மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்
13th Oct. 2014
SPOT ADMISSION
2nd TIME IN COLOMBO
VENUE EXPONET

- எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம் A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Sehengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளிற்கும் சென்று பணிபுரிய முடியும்.)
- UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுக்கரப்படும்
- ஒரு வருடத்திற்கான கட்டணமாக Rs. 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.
- 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி

கொழும்பு மற்றும் யாழ். கிளையினூடாக முற்றிலும் இலவசமாக Latvia Studen Visa தொடர்பான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள முடியும்.

EXPONET Overseas Consultants
www.expogroup.lk
No. 379-1/2 Galle Road, Col -06.
Hotline: 011 7555511/14/18
E-mail: nimal@expogroup.lk
# 197, Arasady Road, Jaffna.
021 7538395 / 021 2227230
Jaff Ads 077 50 111 60

பொது/சமூக உளவியல்
நீங்களும் உளவியல் பட்டதாரி ஆகலாம்.
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
கலாநிதி (55040) (12.3.6)
வே.ரகுபாலசிங்கம்
யாழ்ப்பாணப், பட்டப்படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(வர்த்தக வங்கி அருகில்)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

விசேட கருத்தரங்கு
Oct.25ஆம் திகதி நடைபெறவுள்ள சமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் போட்டிப்பரீட்சை
Nov. 1ஆம், 2 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சைக்கான பொது விவேக வழிகாட்டல் வகுப்பு
முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
ஒவ்வொரு சனிக்கிழமைகளில் மாலை 2 – 5 மணிக்கு
விரிவுரைகள்
P.உமாசங்கர், P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்,
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
தொ.பே.: 0774696695

அலுவலகர் தேவை
நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள எமது ஆங்கிலப்பயிற்சி மையத்திற்கு அலுவலகர் (பெண்கள் மட்டும்) தேவை!
- A/L படித்திருத்தல் போதுமானது.
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
- இலவச ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படும்.
இன்றே எம்மை தொடர்பு கொள்ளவும்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

1,000 ரூபா கட்டணத்துடன்
Desktop Publishing (DTP)
CorelDRAW, PageMaker, PhotoShop, Scanning Technology, Type Setting
பதிவுக்கட்டணம் இல்லை
முன் அனுமதிகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும், கல்வியங்காட்டு சந்தியில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society www.mcai.edu.lk

MEGA SALE SALE SALE SALE MEGA SALE SALE SALE SALE MEGA SALE
FURNITURE MEGA SALE CENTER
நம்ப முடியாத விலைக்கழிவில் வீடு, அலுவலகத்திற்குரிய மரம், உருக்கு, பிளாஸ்ரிக், மூங்கில் தளபாடங்கள் அனைத்தும் மெத்தை வகைகள், குழந்தை தொட்டில்கள், (மரம், லெதர்) சோபா செற்றிகள், Rolling Chairs அனைத்தும் அமோக விலை குறைப்பு
உங்கள் வீட்டில் இருக்கும் தளபாடங்களை நல்ல விலைக்கு எம்மிடம் தந்து புதிய தளபாடங்களை பெற்றுக்கொள்ளலாம்.
தளபாட அமோக மலிவு விற்பனை நிலையம்
204 Brown Road Jaffna T.P 0774912805, 077006451, 0777286069
Authorized Dealers For
ARPICO DAMRO Piyestra Nilkamal
MEGA SALE SALE SALE SALE MEGA SALE SALE SALE SALE MEGA SALE

கல்வி நிறுவனத்தில் வேலைவாய்ப்பு
21 - 26 வயதிற்குட்பட்ட பெண் பயிலுனருக்கான வெற்றிடம் (அலுவலக முகாமைத்துவம் மற்றும் வெளிக்களப் பணி) கொக்குவிலில் இயங்கும் ஆங்கில கல்வி நிறுவனத்தில் உண்டு. 3 மாதப் பயிற்சியின் பின் வேலைக்கேற்ற ஊதியம்.
0758567447

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்
மாணவர்களுக்கு Rs.84,500 வரையான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது
மேலதிக விபரங்களை இம் மாதம் 13ம் திகதி பெற்றுக்கொள்ளலாம்



MS Office-CAA, Web Design, DTP, Hardware & Networking, Accounting
Engineering-Microsoft-USA, CIMA-UK, Chartered-Srilanka, aat, Banking
Qualified Lectures panel, 14 Years Experience
கல்வியங்காட்டில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
SMS Your Name & Course to 775520940 & Get Schol.
243,Adiyapatham Road
Bus Route : PointPedro(750/751)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.